தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை
நடவடிக்கைகள் செயலக
வெளியீடு

March 97 vol 21 no 2.

D
V.2I',31N97
N97, 21·2
216645

வெளியீடு 27-11-97 Issued 27-11-97

1159/97

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 12, 1997 – தொகுதி 21 – எண் 2

Wednesday the 12th March, 1997 – Volume 21 – No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

lative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

# 12-03-1997

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. **வினாக்கள்-விடைகள்** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 131-177 |
| 2. **சிறப்புக் கவன ஈர்ப்பு--** | |
| (அ) காஞ்சிபுரம் அருகில் சிறுவள்ளூர் கிராமத்தில் கள்ளச் சாராய விற்பனையைத் தடுக்க முயன்ற மகளிர் அமைப்புப் பெண்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளமை. | 178-189 |
| (ஆ) உடுமலைப்பேட்டை திருமூர்த்தி அணையிலிருந்து மூன்றாவது மண்டலத்திற்கு உட்பட்ட விவசாய நிலங்களுக்குத் தண்ணீர் விடாமையால் தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளமை. | 189-191 |
| (இ) கோமுகி, மணிமுத்தாறு அணைகளின் தண்ணீரை பழைய புதிய ஆயக்கட்டுக்களுக்கு விடுதல். | 191-193 |
| (ஈ) திருநெல்வேலி-பாளையங்கோட்டை அருகே வி.எம். சத்திரம் துணை மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்து. | 194 |
| 3. **கவன ஈர்ப்பு--** | |
| வேலூர்-காட்பாடி சாலையில், பாலாற்றின் குறுக்கே பாலம் இடிந்து, போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளமை. | 195-197 |

| | பக்கங்கள் |
|---|---|
| 4. வரவு-செலவுத் திட்டம், 1997-98, பொது விவாதம்--தொடர்ச்சி | |
| *திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் | 198-209 |
| *திரு. சி.டி. தண்டபாணி | 209-216 |
| திரு. அ.வ. அப்துல் நாசர் | 216-222 |
| திரு. இ. கணேசன் | 222-231 |
| திரு. கே. எம். விஜயகுமார் | 232-236 |
| *திரு. எஸ்.வி. கிருஷ்ணன் | 236-241 |
| *திரு. வி.பி. இராசன் | 241-247 |
| திரு. ஆர். ஆர். சேகரன் | 247-253 |
| திரு. ச. அழகிரி | 253-258<br>261-272 |
| 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 272 |


21645
சென்னை-600 003

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## மாசி 29, தாது--திருவள்ளுவர் ஆண்டு 2028

## 1997 மார்ச் 12, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

" மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாஉள முன்னிற் பவை "

நூலறிவுடன் இயற்கையான மதி நுட்பம் உள்ளவர்களுக்கு முன்னால் எந்த சூழ்ச்சிதான் எதிர்த்து நிற்க முடியும்? முடியாது.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 161, திரு. வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**161--**

### திருச்சிற்றம்பலத்தில் தீயணைப்பு நிலையம்

*2631--**திரு. வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, திருச்சிற்றம்பலத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1997 மார்ச் 12

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, திருச்சிற்றம்பலம் ஒரு வளர்ந்து வரும் நகரமாகும். இந்த நகரத்திலும் இதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஏராளமான மக்கள் வசித்து வருகிறார்கள். இவர்களின் பாதுகாப்பு கருதி நடப்பு நிதியாண்டிலாவது அல்லது வரும் நிதியாண்டிலாவது ஒரு தீயணைப்பு நிலையம் திருச்சிற்றம்பலத்தில் தொடங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்பு நிலையம் ஒன்று அமைப்பதற்குக் கிட்டத்தட்ட 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்டதாக அந்தப் பகுதி இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற திருச்சிற்றம்பலம் நகரத்தினுடைய மொத்த மக்கள் தொகையே 5,483 தான். அதனால் தீயணைப்பு நிலையம் இப்போது முதல் பட்டியல் வரிசையில் வருவதற்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 162, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**162--**

### தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

*3965--**திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகராட்சியில் தீயணைப்பு நிலையம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருவதை அரசு அறியுமா?



1997 மார்ச் 12]

(ஆ) ஆம் எனில், புதிய கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் பல ஆண்டுகளுக்கு முன்பாகத் தொடங்கப்பட்டுள்ள இந்தத் தீயணைப்பு நிலையம் அந்த நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் இயங்கி வருகிறது. இது ரொம்ப குறுகிய இடம். திடீரென்று எங்கேயாவது விபத்து ஏற்பட்டால் அந்த இடத்திற்கு உடனடியாக அந்த வண்டிகளை எடுத்துச் சென்று தீயணைப்பதற்குள் பல மணி நேரம் கடந்து விடுகிறது. இதற்கென திருத்துறைப்பூண்டி திருக்கோவிலுக்குச் சொந்தமான 2 ஏக்கர் நிலத்தை ஏற்கெனவே வாங்கி, இடமும் இருக்கிறது. அதற்கான நிதியைக் கொடுத்து உடனடியாகக் கட்டினால் இதுபோன்ற காலதாமதம் இல்லாமல் அவசரமாகச் சென்று தீயணைப்பதற்கு ஏதுவாக இருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது ஆய்விலே இருப்பதாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதைப்போல என்னுடைய தொகுதியில் முத்துப்பேட்டை, கோட்டூர் போன்ற இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் வேண்டுமென கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் கேட்டபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த நவம்பர் மாதம் ஆணை வழங்கி உடனடியாக அவை திறக்கப்பட்டுள்ளன. அதற்கும் தனியாரிடத்தில் இடத்தை நாங்கள் வாங்கிக் கொடுத்து, அந்த நிலையம் இயங்கி வருகிறது. அதற்கும் சேர்த்து நிதியொதுக்கி விரைவில் இந்தத் தீயணைப்பு நிலையக் கட்டடங்களைக் கட்டிக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைத் தொடர்ந்து கேட்ட கோரிக்கை நிறைவேற்றப்பட்டு விட்டது என்று சொன்னதற்கு நன்றி. இப்போது திருத்துறைப்பூண்டியில் தீயணைப்பு நிலையம் ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அதற்குச்

[1997 மார்ச் 12

சொந்தமாக நிரந்தரக் கட்டிடம் வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்தத் தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட ஒரு நிலம் ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டது. ஆனால் நில உரிமையாளர்கள் கூடுதல் நிலக் கிரயம் கோரி நாகப்பட்டினம் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்கள். வழக்கு நிலுவையில் இருக்கிற காரணத்தால்தான் இந்தக் கட்டடத்தை உடனடியாக அங்கே எழுப்புவதற்குத் தடை இருக்கிறதே தவிர, வேறு எதுவும் இல்லை. இந்த வழக்கு முடிந்த பிறகு நிச்சயமாக அந்தக் கட்டிடம் அங்கே உருவாக்கப்படும்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணை உள்ளம் கொண்ட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், கடந்த நிதியாண்டில் என்னுடைய மேல்மலையனூர் தொகுதிக்கு ஒரு தீயணைப்பு நிலையத்தை வழங்கினார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மேல்மலையனூர் தீயணைப்பு நிலையத்திற்கு முன்னுரிமை கொடுத்து, இந்த நிதி ஆண்டிலேயே கட்டிட வசதி செய்து தர கருணை உள்ளம் கொண்ட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை உடனடியாக இப்போது எழுப்புவார் என்று தெரிந்திருந்தால், முன்பு அனுமதியே தந்திருக்க மாட்டேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 163, திரு. எஸ். டேவிட் செல்வின், மாண்புமிகு கல்வி அமைச்சர்.



1997 மார்ச் 12]

**163--**

**உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

*1302--**திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சிதம்பரனார் மாவட்டம், திருவைகுண்டம் தொகுதி, செக்காரக்குடியில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டிலேயே நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தற்போதைக்கு இல்லை.

வினாவில் குறிப்பிடப்பட்ட பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்திட கருத்துரு ஏதும் பெறப்படவில்லை. இது குறித்து உரிய கருத்துரு பெறப்படின் உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கை எடுக்க இயலும்.

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செக்காரக்குடி கிராமத்திலுள்ள மாணவ மாணவியர்கள் மேல்நிலைக் கல்வி கற்க வேண்டும் என்று சொன்னால் சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சென்று, முடிவைத்தானேந்தல் அரசு மேல்நிலைப் பள்ளியில்தான் கல்வி கற்க வேண்டும். எனவே, மாணவ, மாணவியர்கள் தங்களுடைய படிப்பை உயர்நிலைக் கல்வியோடு பாதியிலே நிறுத்திவிடுகிறார்கள். மேலும் தலைவர் கலைஞர் அவர்கள் நடப்பாண்டில் 75 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றிடத் திட்டம் தந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு கல்வி அமைச்சர், இனமானப் பேராசிரியர் அவர்கள் நடப்பாண்டிலேயே செக்காரக்குடி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித் தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1997 மார்ச் 12

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நடப்பாண்டிலே தரப்படக்கூடிய அந்த எண்ணிக்கையேகூட மொத்தம் கேட்டிருக்கிற வகையில் நூற்றுக்கு 50, 60 விழுக்காடு என்ற அளவிற்குத்தான் இருக்கிறது. மற்றும் ஒன்று, எந்தப் பள்ளிக்கூடத்தை மேல்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டும் என்றாலும், அதற்குக் குறிப்பிடத்தக்க அளவிற்கு பத்தாவது வகுப்பில் மாணவர்கள் பயிலுகிறார்கள்; அதற்குப் போதுமான இட வசதி இருக்கிறது; வகுப்பு தொடங்க முடியும் என்பதற்கான சான்றோடு, அல்லது குறிப்போடு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரால் இயக்குநரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். இந்தப் பின்னணியோடு, உரிய தொகையான 1 லட்சம் ரூபாய் மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு கட்டப்பட்டிருக்குமானால்-- இப்போதுள்ள தொகை அடுத்த ஆண்டு அது உயர்த்தக் கருதப்படுகிறது. எனவே, அந்தத் தொகையும் கட்டப்பட்டிருக்குமானால்--அதை அதற்குரிய வரிசையில் வைத்து, உயர்மட்டக் குழு அதை ஆய்வு நடத்தி முன்னுரிமை கருதி, தகுந்த அடிப்படையில் பட்டியலிட்டு வழங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 164, திரு. அ.லெ. சுப்பிரமணியன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**i 64--**

### கலைக் கல்லூரி நிர்வாகத்திற்கு இட ஒதுக்கீடு

*1359-**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரசு மானியம் பெறுகின்ற தனியார் கலைக்கல்லூரிகளில், மாணவர் சேர்க்கையில், கல்லூரி நிர்வாகத்திற்கு 10 விழுக்காடு ஒதுக்கிட அரசு ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதவி பெறும் தனியார் கலைக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையில் கல்லூரி நிர்வாகத்திற்கு 1996-97-ஆம் ஆண்டிற்கு 10 விழுக்காடு ஒதுக்கீடு செய்து அரசாணை (1டி) எண் 81 கல்வி, நாள் 30-7-1996-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.



1997 மார்ச் 12]

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரி நிர்வாகம் ஏராளமாக பொருட்செலவு செய்து கல்வியைத் தருகிறது. எனவே, 10 விழுக்காடு ஒதுக்குவதை நிரந்தரமாக ஆணையிட அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இது ஒரு கொள்கை முடிவுதான். இந்த ஆண்டுக்கு ஆணையிடப்பட்டால், ஒவ்வொரு ஆண்டும் ஆணையிடப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்படிப்புகளில் தனியார் கல்லூரிகளில் கூட 50 சதவீத கோட்டா அரசு இட ஒதுக்கீடு முறைப்படி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று இருக்கிறது. அப்படியிருக்கிறபோது, அதே முறை தனியார் கலைக் கல்லூரிகளிலே அமுல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறோம்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, தனியார் பல்கலை, அறிவியல் கல்லூரிகளில் 90 விழுக்காடு அரசு கொள்கைப்படி அவர்கள் ஒரு குழு அமைத்து, அந்தக் குழு மூலமாக சேர்த்துக் கொள்கிறார்கள். 90 விழுக்காடு நம்முடைய வகுப்புவாரி உரிமை அடிப்படையில் முறைப்படி சேர்க்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கையைக் கல்லூரிக் கல்வி இயக்குநரும் மேற்பார்வையிடுகிறார். பல்கலைக்கழகமும் மேற்பார்வையிடுகிறது. இந்த இரட்டை ஆட்சி முறையை ஒழித்து, ஒரேயொரு துறை மட்டும் மேற்பார்வையிடுகின்ற அளவிற்கு ஆணையிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகம், பார்வையிடுகிற முறை,

[1997 மார்ச் 12

பாடத் திட்டங்கள், அவைகள் நிறைவேறுகிற முறை; கல்லூரிக் கல்வி இயக்குநரகம் மேற்பார்வையிடுகிற முறை, மாணவர் சேர்க்கை கல்லூரி நடத்தப்படுகிற முறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 165, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**165--**

## கிராமங்களுக்கு மின் வசதி

*884-டாக்டர் **ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், மேல்மலையனூரில் மின் வசதி இல்லாத கிராமங்களுக்கு மின் வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மாவட்டம் மேல் மலையனூரில் அனைத்து கிராமங்களுக்கும் மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. தெரு விளக்கு கோரி விண்ணப்பங்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலுள்ள செஞ்சி ஒன்றியத்திலுள்ள 43 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கிய பல கிராமங்களில் மின்சாரம் சீராக இல்லை என்ற குறைபாடு மக்களிடையே இருக்கின்றது. ஆகையால் அங்கு தெருவிளக்குகள், விவசாயப் பெருமக்கள் உபயோகிக்கின்ற மோட்டார் போன்றவைகள் சரிவர இயங்கவில்லை என்ற குறைபாடு இருப்பதால், மாண்புமிகு அமைச்சரவர்கள் கருணையுள்ளம் கொண்டு, அந்தக் குறையை நீக்குவதற்கு ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.



1997 மார்ச் 12]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சில இடங்களில் லோ வோல்டேஜ் இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் இந்தக் குறைபாடு இருக்கிறது. அதைப் போக்குவதற்காக மின்சார வாரியம் தமிழகம் முழுவதும் சுமார் 200 சப்-ஸ்டேஷன்கள் உடனடியாகக் கட்ட வேண்டுமென்ற முடிவெடுத்திருக்கிறது. அதற்கான பணம் இல்லாத காரணத்தினால் நிதி நிறுவனங்களை அணுகிக் கொண்டிருக்கிறது. நிதி கிடைத்தவுடன் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந.பூ. இராமஜெயம்.

**திரு. ந.பூ. இராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரிலே சில குடிசைப் பகுதிகளில் என்.ஓ.சி. பெறுவதில் சில சங்கடங்கள் இருப்பதால் மின் இணைப்பின்றி இருக்கிறது. அப்படிப்பட்ட பகுதிகளில் சில நிபந்தனைகளின் பேரிலாவது மின் இணைப்புக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995 ஆம் ஆண்டு அரசாங்கம் ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறது. எங்கெங்கே புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டப்பட்டிருக்கிறதோ. அந்த வீடுகளுக்குப் பட்டா வழங்காமல் மின்சாரம் வழங்கக்கூடாது என்று ஆணையிட்டிருக்கிறது. இந்த அரசு வந்தவுடன் அதுபற்றிப் பரிசீலித்து, ரெவின்யூ இலாக்காவிடம் கலந்து பேசி பட்டா விரைவிலே வழங்கப்பட கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1969 முதல் 1976-ஆம் ஆண்டு வரையில் முதலமைச்சராக இருந்தபோது, மின்சாரம் இல்லாத கிராமங்களே இல்லை என்று ஆக்குவேன் என்ற உறுதியளித்து, எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு ஆதிதிராவிட மக்களுக்கு காலனிகள் உருவாக்கப்பட்டபோது அந்தக் காலனிகளுக்குப் பல இடங்களில் மின்சாரம் வழங்கப்படாமல் இருக்கின்றது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் காளையார்கோயில் ஒன்றியத்தில்

[1997 மார்ச் 12

மேல்மங்கலம், கிழவனூர் ஆகிய கிராமங்களில் கடந்த 2, 3 ஆண்டுக்காலமாக ஆதிதிராவிடர் காலனிகள் புதியதாக உருவாக்கப்பட்டு அந்தக் காலனிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. அப்படி தமிழ்நாடு முழுவதும் இருக்கிறது. ஆகவே அந்த ஆதிதிராவிட காலனிகளுக்கு மின்சாரம வழங்குவதில் முன்னுரிமை அளித்து உடனடியாக மின்சாரம் வழங்க அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போன்று புதிது புதிதாகக் காலனிகள் உருவாக்கப்படுகின்ற நேரத்தில் அவைகளுக்கும் மின்சாரம் கொடுக்கவேண்டுமென்று இந்த அரசு கருதுகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை இந்த ஆண்டு நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்துறை அமைச்சரவர்கள் ஏற்கெனவே வருவாய்த் துறையிடம் நாங்கள் பட்டா போடுவதற்காகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம் எனற கருத்தை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். வரவேற்கத்தக்க கருத்து. ஆனால் தமிழகத்தில் கடந்த 10 அல்லது 15 ஆண்டுகளாக புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டிக்கொண்டு வாழ்ந்து வருபவர்களுக்கு. கடந்த ஆட்சியிலே 1995-ஆம் ஆண்டு, அவர்கள் மின் இணைப்புப் பெறுவதற்குத் தடை விதிக்கப்பட்டு ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த ஆணை இன்னும் விலக்கப்படாத காரணத்தினாலே பல்லாயிரக்கணக்கான மக்கள் தமிழகத்திலே இன்று மின் இணைப்பைப் பெற முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் வருவாய்த் துறை நேற்று வரையில்கூட அந்தத் தடையாணையை நீக்கமுடியாது என்ற கருத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே நானும் அந்தப் பிரச்சினையை உங்களிடம் எழுப்பிக் கொண்டிருக்கிற காரணத்தால் மாண்புமிகு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது கேள்வியா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரவர்கள் வருவாய்த் துறையைக் கலந்து,



1997 மார்ச் 12]

மாண்புமிகு முதலமைச்சருடைய ஆலோசனையை உடனடியாகப் பெற்று இன்னும் ஒரு மாத காலத்திற்குள் எல்லோருக்கும் பட்டா வழங்குவதற்கு, மின் இணைப்பைக் கொடுப்பதற்கு ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நினைத்ததைப்போல் தான் இந்த அரசும் நினைக்கிறது. நானும், முதலமைச்சர் அவர்களும், நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் இதைப்பற்றி கலந்து பேசினோம். ஆனால் பட்டா வழங்குவது குறித்து இலாக்கா மூலமாகப் பிரச்சினைகளை எடுத்து வைக்கின்றபோது, புறம்போக்கு நிலங்களிலே பலவகையான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அவைகளில். ஒவ்வொரு இலாகாவும் ஒப்புதல் தரவேண்டியிருக்கிறது. எனவே, எல்லா இலாக்காக்களும் கலந்து பேசி, முடியுமானால் இந்த ஆண்டுக்குள்ளாக அப்படிப்பட்ட ஒரு ஆணையைப் பிறப்பிப்பதற்கு இந்த அரசு முயற்சிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுரை கிழக்குத் தொகுதியிலுள்ள ஜனத்தொகையில் சற்றேறக்குறைய மூன்றில் ஒரு பங்கு மக்கள் புறம்போக்கு இடங்களிலே. சுமார் 40 ஆண்டுகாலமாக வசித்து வருகின்றனர். ஏற்கெனவே அவர்களுக்கு அனைத்து வசதிகளும்--மின்சார வசதி உட்பட அனைத்தும் அவர்களுக்குச் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இப்போது அங்கே வீடுகளைக் கட்டும்போது, அவர்களுக்கு மின்சார வசதி கொடுக்காமல், பல நாட்களாக அது நிலுவையில் இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்களை நேரிடையாகக் கேட்டிருக்கின்றேன். இந்தக் கூட்டத் தொடருக்குள்ளாக நிச்சயமாகப் பரிசீலித்து உத்தரவு வழங்கப்படும் என்று நேரிடையாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, அந்தக் குறையை நீக்கி, அந்த மக்களுக்கு மின்சாரம், இந்தக் கூட்டத்தொடர் முடிவுக்குள் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அங்குள்ள

மாநகராட்சியை அணுகி, இருக்கின்ற அதிகாரிகளோடு கலந்து பேசி, அவர்களுக்கு பட்டா வாங்கித் தருவதிலே அக்கறை எடுத்துக்கொள்வாரேயானால், மின்சார இணைப்புத் தருவதிலே எந்த ஆட்சேபணையும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் மின்சாரம் வழங்க வேண்டும் என்பதிலே அக்கறையோடு இருக்கின்றார்கள் என்பதை நான் வரவேற்கின்றேன். ஆனால், எங்களுடைய பெண்ணாகரம் தொகுதியைப் பொறுத்தவரையிலே, இதுவரையிலே மின் வாடையே படாத கிராமங்கள் ஏராளமாக இருக்கின்றன. அந்தக் கிராமங்களுக்குத் தெரு விளக்கு அமைக்க வேண்டும் என்று சொன்னால், ஊராட்சி நிதியிலிருந்து பணம் செலுத்த வேண்டிய நிலைமை இருக்கின்றது. அந்த ஊராட்சிகளிடம் பணம் இல்லாத நிலை இருக்கின்றது. ஆகவே, இதற்கு முன்னாலே அரசாங்கத்திலே 'Self Sufficency Scheme' என்ற 'டிரிபிள் எஸ்' ஸ்கீம் இருந்தது. மீண்டும் அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே, சிறப்பு முன்னோடித் திட்டத்தின் கீழே, இப்படிப்பட்ட மின்வாடையே இல்லாத கிராமங்களுக்கு தெரு விளக்கு அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு, இன்னும் ஜீவன்தாரா திட்டத்தின்கீழே மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு கிணறு வெட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது-- அப்படிப்பட்ட கிணறுகளுக்கும் மின்சார மோட்டார் வைப்பதற்கு மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத்திற்கென்று தனியாக வாடை ஏதும் கிடையாது. இருந்தாலும், அந்தப் பகுதிகளிலே சில கிராமங்களுக்கு மின்சார வசதி இல்லை என்றுதான் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார் என்று நான் கருதுகிறேன். அப்படி மின்வசதி இல்லாமல் இருக்கின்ற அந்தக் கிராமங்களுக்கு மின்சார வசதி இல்லை என்று எழுதிக் கொடுப்பாரேயானால், நிச்சயமாக, ஒரு மாத காலத்திற்குள்ளாக அந்தக் கிராமத்திற்கு மின்சார வசதி செய்து தர இந்த அரசு தயாராக இருக்கிறது. இன்னொன்று ஜீவன்தாரா கிணறுகளுக்கு மின்சாரம் வழங்க வேண்டும் என்று





சொன்னார்கள். அரசாங்கம், ஏற்கெனவே முடிவு எடுத்து அந்த ஜீவன்தாரா திட்டத்தின்கீழே அவர்கள் அந்தப் பணத்தைக் கொடுப்பதற்கு முன்வருவார்களேயானால், உடனடியாக மின்சார இணைப்பு கொடுக்கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித அடிப்படைத் தேவைகளான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் ஆகிய தேவைகளிலே, இப்போது மின்சாரமும் இணைந்த முறையிலே தேவைப்படுகின்ற காரணத்தினாலே, குடிசைப் பகுதிகளிலே குடியிருக்கின்ற மக்களுக்கு, பட்டா கொடுப்பதிலே பல்வேறு சிரமங்கள் இருக்கின்ற காரணத்தினாலே, பட்டா இல்லை என்றால்கூட, அந்தக் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி ஏற்கெனவே நான் குறிப்பிட்டேன். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே குடிசைகளுக்கு மின்சாரம் வழங்க வேண்டும் என்பதுதான் கொள்கை. ஆனால், 1995-ஆம் ஆண்டு அரசாணை அதற்குத் தடையாக இருக்கிறது. அந்த ஆணையைத்தான் இந்த அரசாங்கம் மறுபரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான ராசிபுரம் தொகுதியில், நாமகிரிப் பேட்டையில் புதியதாக ஒரு துணை மின்நிலையம் அமைக்கப்பட்டது. அந்தத் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டதற்கு பின்பு, அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு, மின் விநியோகம் கொடுத்தார்கள். மின் விநியோகம் கொடுத்ததற்குப் பின்பும் அந்தப் பகுதியிலே குறிப்பாக இரண்டு, மூன்று கிராமங்களுக்கு மின் விநியோகம் சரியாக அமையவில்லை. அதிகாரிகளைக் கேட்டபொழுது, 20 எம்.சி.யூ என்று இரண்டு இயந்திரங்கள் இருக்கின்றன. அதில் ஒரு 10 எம்.சி.யூ இயந்திரம் தான் கொடுத்திருக்கிறார்கள். இன்னொரு 10 எம்.சி.யூ இயந்திரம் கொடுத்தால் தான் அந்த மின் விநியோகத்தைச் சரியாக விநியோகிக்க முடியுமென்று கூறியிருக்கிறார்கள். ஆகவே,

[1997 மார்ச் 12

மின் துறை அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு உடனடியாக அந்த இயந்திரத்தை அவர்களுக்குக் கொடுத்து, மின் விநியோகம் சரியாக அளிப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தெரிவித்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப் போல அப்படியொரு இயந்திரம் இதுவரையிலும் வழங்கப்படாமல் இருக்குமானால், உடனடியாக அளிப்பதற்கான ஏற்பாட்டை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற நேரத்திலே தமிழகத்திலே சில பகுதிகளிலே 'லோ வோல்டேஜ் கரெண்ட்' இருக்கக்கூடிய காரணத்தினால், சரியாக மின் சப்ளை இல்லை என்பதைக் குறிப்பிட்டார்கள். மதுரை மாவட்டத்திலே விவசாயிகள், தாங்கள் உபயோகிக்கக்கூடிய மின் மோட்டார்களுக்கு கரெண்ட் கிடைக்காத காரணத்தால், வறட்சியினுடைய பிடியிலே இருக்கக்கூடிய இந்த நேரத்திலே மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்தக்குறை எப்போது நீக்கப்படும் என்பதை உங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'லோ வோல்டேஜ்' என்றால் 24 மணி நேரமும் 'லோ வோல்டேஜ்' என்று பொருள் அல்ல. விவசாயிகளுக்கு இரவு நேரத்திலே 8 மணி நேரமும், பகல் நேரத்திலே 6 மணி நேரமும் கண்டிப்பாக மின்சாரம் வழங்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது. அந்த நேரங்களிலே மின்சாரம் சரியாக இருக்கும். மீதி நேரங்களிலே தான் அந்த மின்சாரத்தை வேறு பகுதிகளுக்குத் திருப்பி விடுகின்ற நேரத்தில் அந்த 'வோல்டேஜ் டிராப்' இருக்கும். அதைச் சரி செய்வதற்குத் தான் அதிகமான சப்-ஸ்டேஷன்கள் கட்டுவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது



1997 மார்ச் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறம்போக்கு நிலங்களில் குடிசை கட்டி இருப்பவர்களுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை என்ற தடை இருக்கிறது. பட்டா வழங்கப்படாததன் காரணமாக இந்தத் தடை இருக்கிறது. அந்தத் தடையை நீக்குவதோடு, இன்னும் அதற்குள்ளே இருக்கின்ற ஒரு பிரச்சினை என்னவென்றால், ஒரு மைலுக்கு அப்பால் ஒரு அணைக்கட்டு. அந்தப் புறம்போக்கை அணைப் புறம்போக்கு என்று போட்டுவிட்டார்கள் என்ற காரணத்தினாலே-5 சென்ட் முதல் 7 சென்ட் வரை இருக்கக்கூடிய ஒரு கிராமத்தில்; சக்கராபாணி என்ற கிராமத்தில்--27 பேர்கள் தங்கள் மனுக்களைக் கொடுத்து ஆண்டுகள் பலவும் ஆகிவிட்டது. பக்கத்திலே இருக்கக்கூடியவர்களுக்கு மின்சாரம் கிடைக்கிறது. ஆனால் இவர்களுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை. எனவே, அந்தத் தரம் மாற்றக்கூடிய பிரச்சினையைக் காலம் நீடித்துப் போகாமல் செய்ய வேண்டும். அதுபோன்று, நகர்ப்பகுதிகளிலே இன்னொரு பிரச்சினை இருக்கிறது. எந்தக் காரணத்தைக் கொண்டோ நகரத்திலே புறம்போக்குகளுக்குப் பட்டா வழங்கக் கூடாது என்று ஒரு ஜி.ஓ. இருக்கிறது. அதை அகற்றி, இந்த கிராமத்திலே மற்றும் நகரத்திலே இருப்பவர்களுக்கு - குடிசை வாழ் மக்களுக்கு - மின்சார வசதிகளை ஏற்படுத்துவதில் இருக்கக்கூடிய சிக்கலைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர மன்றத்தினுடைய வளர்ச்சிக்காக சில இடங்களிலே நகரமன்றம் வைத்திருக்கிறது. இந்த இடங்களிலே வீடுகள் இல்லாதவர்கள் சென்று குடிசைகளைப் போட்டுக்கொள்கிறார்கள். அதை நகரமன்றம் அப்புறப்படுத்துவதற்கு முயற்சிக்கிறது. அதிலே சிக்கல் இருக்கின்ற காரணத்தினாலே, அவர்கள் பட்டா கொடுத்தால் தானே அவர்களுக்கு மற்ற வசதிகள் கிடைக்கும் என்று சொல்லி, நகரமன்றத் தலைவர்களும், ஆணையாளர்களும், பட்டா கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். இவையெல்லாம் யோசித்துத் தான் இந்த அரசாங்கம், 1995 ஆம் ஆண்டு கடந்த கால அரசாங்கம் பிறப்பித்த அந்த ஆணையை மறு பரிசீலனை செய்தால் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்படும். இன்னொன்றையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தக் குடிசைகளுக்கு நாம் மின்சாரத்தை

வழங்கக்கூடிய நேரத்திலே, இலவசமாக மின்சாரத்தைக் கொடுக்கிறோம். என்ன கண்டிஷன் என்று கேட்டால், ஒரேயொரு லைட் மட்டும் போட்டுக்கொள்ள வேண்டும் என்பது தான். ஆனால், பல குடிசைகளில் லைட் மட்டும் பொருத்திக்கொள்ளாமல், டி.வி. வைத்துக்கொள்கிறோர்கள், கிரைண்டர் வைத்துக்கொள்கிறார்கள். இதனாலே மின்சார வாரியத்திற்கு நிறைய இழப்பு ஏற்படுகிறது. இப்போது, மின்சார வாரியம் அந்த வீடுகளை எல்லாம் சோதனை செய்து ஒரு விளக்குக்கு மேலே மின்சாரத்தை வேறு வகைக்குப் பயன்படுத்துவார்களேயானால், அதைத் துண்டிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது என்று ஒரு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. Venkatasamy** : Hon. Speaker, Sir, when the D.M.K. Government was in power previously, they were providing electricity even to those houses which have been constructed on poromboke lands. But the previous Government has banned it in 1995. As electricity is a basic minimum need, in the interest of the poor people who have constructed houses in the poromboke lands, I request the Hon. Minister to discuss with the Hon. Revenue Minister and the Hon. Chief Minister. May I know from the Hon. Minister whether the provision of electricity to such houses will be resumed so that people in the entire State would be very happy ?

**Hon. Thiru Arcot N. Veerasamy** : Hon. Speaker, Sir, that is why I told earlier that this Government is examining the proposal.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 166, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**166--**

**சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் லித்தோட்ரிப்டர் இயந்திரம் நிறுவுதல்**

*2334--**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--





சென்னை அரசு பொது மருத்துவமனையில் சிறுநீரகக் கற்களை அறுவை சிகிச்சையின்றி அகற்றும் 'லித்தோட்ரிப்டர்' இயந்திரம் நிறுவப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை அரசு பொது மருத்துவமனையில் சிறுநீரகக் கற்களை அறுவை சிகிச்சையின்றி அகற்றும் 'லித்தோட்ரிப்டர்' இயந்திரம் தற்போது நிறுவுவதாக இல்லை.

**டாக்டர் இ. எஸ். எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுகளிலே மருத்துவத்திலே மகத்தான சாதனைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றிலே முக்கியமான ஒன்று, சிறுநீரகக் கற்களை அறுவை சிகிச்சை இன்றி அகற்றுகின்ற முறை, 1989 ஆம் ஆண்டு தமிழக முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு தனியார் மருத்துவமனையைத் திறந்து வைத்தபோது இந்த லித்தோட்ரிப்டர் என்ற கருவியை அவர்கள் இயக்கி வைத்தார்கள். அப்போது அவருடைய பிறந்த நாள் அறிவிப்பாக இத்தகைய கருவி ஒன்று சென்னை பொது மருத்துவமனையிலே நிறுவப்படும் என்று அவர்கள் அறிவித்தார்கள். ரூபாய் இரண்டு கோடியே முப்பது இலட்சம் செலவிலே அந்தக் கருவி நிறுவப்படும் என்று அப்போது அறிவிக்கப்பட்டது. அதற்காக அன்றைய நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த திரு. பொன்முடி அவர்கள் குளோபல் டெண்டர் என்ற வகையிலே உலகளாவிய டெண்டருக்கு அவர்கள் விட்டார்கள். ஆனால் அந்த நடைமுறை எல்லாம் செய்து முடிப்பதற்குள் அரசு கலைக்கப்பட்ட காரணத்தால் சென்ற அரசு, கலைஞர் அவர்களுடைய பிறந்த நாள் பரிசாக அறிவிக்கப்பட்ட இந்த லித்தோட்ரிப்டர் மெஷினை வாங்குவதற்கு விருப்பம் இல்லாமல் இருந்தார்கள். எத்தனையோ முறை மருத்துவ அதிகாரிகள் சொல்லியும்கூட அதற்கு அவர்கள் செவி சாய்க்காமல் இருந்தார்கள். இரண்டு கோடியே முப்பது இலட்சம் என்ற செலவிலே இருக்கக்கூடிய இந்த லித்தோட்ரிப்டர் எந்த வகையிலே முக்கியமானது என்றால் தனியார் மருத்துவமனையிலே அந்த மருத்துவம் செய்துகொள்வதற்கு அந்தக் கற்களை அகற்றுவதற்கு (மணியடிக்கப்பெற்றது) கொஞ்சம் இருங்கள், முக்கியமானது.

[1997 மார்ச் 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் முக்கியம் இல்லை என்று சொல்லவில்லை. நீங்கள் உரை நிகழ்த்தக்கூடாது. கேள்விதான் கேட்க வேண்டும்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** ரூபாய் 10,000, 15,000 என்று அவர்கள் சார்ஜ் பண்ணுகிறார்கள். அவ்வளவு செலவு செய்து ஏழை எளிய மக்கள் நிச்சயமாக அந்த சிகிச்சையைப் பெற முடியாது. இப்போது 60 இலட்சம் ரூபாயே ஆகக்கூடிய அந்தக் கருவி சென்னை மாநகரத்தில் மட்டும் அல்லாமல் மதுரை, கோயம்புத்தூர், திருச்சி போன்ற மாநகரங்களில் நிறுவப்படுமேயானால் ஏழை எளிய மக்களுக்கு அது உதவியாக இருக்கும். கலைஞர் அவர்கள் சொன்ன உறுதிமொழி நிறைவேற்றப்படும் என்ற ஒரு நம்பிக்கையும் மக்களுக்குப் பிறக்கும் என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆவன செய்வாரா அமைச்சர் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுநீரகக் கற்களை அறுவை சிகிச்சையின்றி அகற்றும் லித்தோட்ரிப்டர் என்ற இந்த இயந்திரம் இந்த ஆண்டு வாங்க வேண்டும் என்பதற்கான ஒரு பட்டியலிலே இடம் பெற்றிருந்தது. நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு 20 கோடி ரூபாய் தந்து, எந்தெந்த உபகரணங்கள் அத்தியாவசியமாகத் தேவையோ அவைகளை எல்லாம் வாங்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்கள். அதற்காக ஒரு அலுவலர் குழு, (அபிஷியல் கமிட்டி) நியமிக்கப்பட்டது. அந்தக் கமிட்டியிடத்திலே கொடுத்த பட்டியலில் லித்தோட்ரிப்டரும் அடங்கியிருந்தது. ஆனால் எது ஏழை எளியவர்களுக்கு உடனடியாகத் தேவையோ அந்தக் கருவிகளை மட்டும் வாங்குவது முக்கியம் என்று இந்தக் குழு கருதிய காரணத்தால் இந்த ஆண்டு லித்தோட்ரிப்டர் இயந்திரத்தை இந்தக் குழு பரிசீலனை செய்யவில்லை, பரிந்துரை செய்யவில்லை. இருந்தாலுங்கூட இது அவசியம் என்று இந்த அரசு கருதுகின்ற காரணத்தால் அதிலேயும் மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய முதல்வருடைய பிறந்தநாளில் கொடுத்த வாக்குறுதி என்று சொன்ன காரணத்தால், நம்முடைய முதல்வருடைய 75வது பவளவிழா ஆண்டில் இந்தக் கருவி நிச்சயமாக வாங்கி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



1997 மார்ச் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 167, பின்னர் எடுக்கப்படும். வினா எண் 168, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**168.**

## ஜீவா நகரில் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

***2117—திரு. உ. திசைவீரன்:***

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, எமனேஸ்வரம் ஜீவா நகரில் கழிவுநீர் செல்லும் இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) பரமக்குடி எமனேஸ்வரம் ஜீவா நகரில் கழிவுநீர் செல்லும் இடம், பரமக்குடி நெடுஞ்சாலைத் துறையினரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, தார் டிரம் மற்றும் தார் டேங்க் வைக்கப்பட்டுள்ளன.

(ஆ) அவை இன்னும் ஒரு மாதத்திற்குள் அகற்றப்படும்.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, எமனேஸ்வரம் ஜீவா நகர் பகுதியானது முழுமையாக நெசவாளர் பெருங்குடி மக்கள் வாழ்கின்ற பகுதி. கழிவுநீர் செல்வதற்கு மட்டும் அல்ல, அந்த ஆக்கிரமிப்புக்கு பின்புறம் 40 குடும்பங்கள் பரமக்குடி நயினார்கோயில் சாலைக்கு வருவதற்கே பாதையின்றித் தவிக்கின்றன. அதுமட்டுமல்ல, வி.பி. நெசவாளர் காலனி, பர்மா காலனி, சிலோன் காலனி போன்ற பகுதிகளுக்கு குடிதண்ணீர் முதற்கொண்டு அந்தப் பகுதியிலேதான் செல்கின்றது. எனவே, கூடிய சீக்கிரம் அந்த ஆக்கிரமிப்பை அகற்றி அந்த மக்களுக்கு உதவி செய்ய அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

[1997 மார்ச் 12

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, இந்த வினா எனக்குக் கிடைத்தபோதும், அதற்குப பதில் தயார் செய்து அதற்கு அப்ரூவல் கேட்டபோதும் நான் குறிப்பிட்டு, சம்பந்தப்பட்ட நெடுஞ்சாலைத் துறைகளுக்குத் தகவல் கொடுக்கப்பட்டு, ஆணையரும் அவர்களைச் சந்தித்துப் பேசி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். தற்போது அந்த டிரம்கள் எல்லாம் அகற்றப்பட்டுவிட்டன. பாக்கியிருக்கிற ஆக்கிரமிப்புகளையும் விரைவாகவே விலக்கிக்கொள்கிறோம் என்று அந்தத் துறையினா கூறியதன் காரணத்தால், உடனடியாக அது நிறைவேற்றப்படும் என்பதை இந்த அவையில் அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இடங்களில் தனியார் ஆக்கிரமிப்புக்களை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்கும்போது, சம்பந்தப்பட்டவர்கள் முன்கூட்டியே நீதிமன்றத்தின் தடைஉத்தரவு வாங்கிவிடுகிறார்கள். இதைத் தடுக்கும் வகையில் புதிய அரசாணை ஒன்று வெளியிடப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, அரசாங்கம் என்ன சட்டம் விதித்தாலும்கூட, நீதிமன்றம செல்கின்ற வாய்ப்பைத் தடுத்துவிட முடியாது. ஆனால், நீதிமன்றங்களுக்குச் சென்றிருந்தாலும், சம்பந்தப்பட்ட துறையினர் உடனடியாகச் சட்டத் துறைக்குத் தகவல் கொடுத்து நடவடிக்கை எடுக்காமலும், சட்டத் துறையினர் அந்தத் துறைக்குத் தெரிவிக்காமல் இருக்கிற காரணத்தால் தொடருகிறதே தவிர, நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்டிருக்கிற பல வழக்குகள் கும்பகோணத்தில் ஏறத்தாழ 13 ஆண்டுகளாக நிலுவையிலிருந்த வழக்குகள், 43 தடையாணைகள் நீக்கப்பட்டு இன்னும் இரண்டொரு ஆணைகளே பாக்கியிருக்கின்றன. அதுவும் நீக்கப்படும். நீதிமன்றங்களுக்குத் தகவல் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 169, திரு. சி. கோபு. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.



1997 மார்ச் 12]

**169--**

## சித்திரை காவேரியில் அணை கட்டும் திட்டம்

*383--**திரு. சி. கோபு:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, மேல் அரசம்பட்டு மலைக்கோயில் ஆறு சித்திரை காவேரியில் அணை கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மேல் அரசம்பட்டு கிராமத்திற்கு அருகே கோயில் மலையாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு முதலநிலை அறிக்கை ரூ.650 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

**திரு. சி. கோபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டுத் தொகுதியின் கிழக்கு எல்லைக் கிராமம் ஆற்காட்டான் குடிசை. மேற்கு எல்லைக்கிராமம் குறவன்கோட்டாய். சொல் தான் வேறு; பொருள் ஒன்று. வானம் பார்த்த விவசாயிகள் வாழக்கூடிய பகுதி என்பதால், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வரிடம கலந்து 1998-99 ஆம ஆண்டில் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. முதல் மதிப்பீட்டு அறிக்கையைத்தான் கொடுத்திருக்கிறார்கள். இது குறித்து மேலும் மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கை கிடைத்தவுடன் அரசு மேற்கொண்டு இதுபற்றிப் பரிசீலிக்கும்.

[1997 மார்ச் 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 170. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் மற்றும் திரு. செங்கை சிவம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**170--**

### நதிகளைத் தேசியமயமாக்குதல்

*1948--**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்**
**திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

இந்தியாவில் ஓடும் அனைத்து நதிகளையும் தேசியமயமாக்குவதற்கு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாநில அரசின் சார்பில் ஏற்கெனவே இந்தக் கருத்து மத்திய அரசுக்கு எடுத்துச்சொல்லப்பட்டு இருக்கிறது.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது மத்திய அரசுக்கு இந்தக் கருத்து எடுத்துச் சொல்லப்பட்டது என்று சொன்னார்கள். அதைச் சொல்லிய பிறகு இன்றைக்கு அங்கிருந்து ஏதாவது தகவல் வந்ததா? தண்ணீரெல்லாம், அதாவது கங்கை நீரெல்லாம் கடலிலே சென்று கலக்கின்றது. இந்தப் பகுதியிலே எல்லாம் மேற்குக் கடலிலே கலக்கின்றது. இந்தத் தண்ணீரைக் கட்டுப்படுத்தி நமக்குப் பாசன வசதி செய்வதற்கான ஒரு முயற்சியை எடுப்பதற்காகத்தான், இது தேசியமயம் ஆக்கப்படும் ஒரு நிலைமை ஏற்பட்டு விடுமேயானால், அந்தந்த மாநிலத்திற்கு வேண்டிய தண்ணீரை அவர்கள் எடுத்துக்கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். அதை மீண்டும் வலியுறுத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1997 மார்ச் 12]

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை நல்ல கொள்கைதான். நமக்கும் ஆசைதான். அந்தக் கங்கை காவிரியைப் பற்றியெல்லாம் அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். டாக்டர் கே.எல். ராவ் அவர்கள் காலத்திலேயே இந்தத் திட்டம் ஆராயப்பட்டு அவராலே Not practicable or economical என்று அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. தேசியமயமாக்கப்பட்டால் உபரி நீரை வைத்திருக்கிற மாநிலங்கள் மற்ற மாநிலங்களுக்குத் தண்ணீரைத் தருவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகையினாலே இந்தக் கருத்தை ஏற்கத்தான் இந்த அரசு மத்திய அரசுக்கு எடுத்துச்சொல்லியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நதிகளைத் தேசியமயமாக்குவது. இணைப்பது என்பது வட மாநிலங்களில் இப்போது எழுந்துள்ள மிகப் பெரிய பிரச்சினையாக உள்ளது. ஆகவே, இணைக்க வேண்டும் என்பதிலே அவர்கள் உறுதியாக உள்ளார்கள். டாக்டர் கே.எல். ராவ், மத்திய அமைச்சர் அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக இன்றைக்கு மஹாநதி, கோதாவரி, பெண்ணாறு, காவிரி, கிருஷ்ணா, யமுனா நதி போன்ற நதிகளை இணைக்கலாம் என்று ஒரு கருத்துரு இருக்கிறது. தண்ணீர் பற்றாக்குறை உள்ள முதல் மாநிலம் ராஜஸ்தான். இரண்டாவது தமிழகம். ஆகவே, பற்றாக்குறை உள்ள நம்முடைய மாநிலத்திற்கு இது லாபம் தரும். மற்ற மாநிலங்கள் நதிகள் தொடங்கும் இடங்களில் இருக்கின்றன.

முற்பகல் *10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உரை நிகழ்த்தக் கூடாது, கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலம்தான் முடிகிற இடத்திலே இருக்கிறது. ஆகவே பற்றாக்குறை உள்ள மாநிலமாக இருப்பதாலே இந்த நதிகளை இணைப்பதாலும், தேசியமயம் ஆக்குவதாலும் நம்முடைய மாநிலம்தான் அதிகம் லாபம் பெறுகிறது. ஆகவே, உடனடியாக நம்முடைய அரசும் தமிழக முதலமைச்சர் அவர்களும் நதிகளை தேசியமயம்

ஆக்குவதற்கும், நதிகளை இணைப்பதற்கும் மத்திய அரசை வலியுறுத்துவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கு இந்தக் கொள்கையில் ஆழமான பிடிப்பு உண்டு. நமக்கு லாபமதான, இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால் மத்திய அரசு இதிலே இன்னும் ஒரு முழுமையான கருத்துக்கு வரவில்லை என்றுதான் தெரிகிறது. காரணம் தேசிய நீர் வள மேம்பாட்டுக் குழு இதுவரையிலே 3 தடவைதான் கூடியிருக்கிறது. நேஷனல் வாட்டர் ரிசோர்சஸ் கவுன்சிலின் முதல் கூட்டம் நடந்தபோதே, அந்தக் கூட்டத்திலே தமிழ்நாட்டின் சார்பில் இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இரண்டாவது, 1987 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த திரு. ராஜீவ் காந்தி தலைமையில் ஒரு குழுக் கூட்டம் நடைபெற்றது அந்தக் கூட்டத்திலும் இந்தக் கருத்து வலியுறுத்தப்பட்டது. பேசப்பட்டது. ஆனால், திரு நரசிம்மராவ் அவர்கள் பிரதமராக இருந்தபோது, 1995 ஆம் ஆண்டு ஒரு குழுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் இந்தக் கருத்தைப் பற்றி பேசவில்லை. ஆகவே, மத்திய அரசு இன்னும் இதிலே ஒரு முழுமையான கருத்துக்கு வரவில்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போதெல்லாம், மத்திய அரசுக்கு மாநில அரசு எடுத்துச் சொல்லியிருக்கிறது என்று சொன்னார்கள். அது ஒரு காலத்திலே நடந்து இருக்கலாம். ஆனால் இன்றைக்கு மாநில அரசும், மத்திய அரசும் ஒரே அரசு தான். ஐக்கிய முன்னணி அரசை வழி நடத்திச் செல்லுகின்ற குழுவிலே டாக்டர் கலைஞர் அவர்கள் முன்னணித் தலைவராக இருக்கிறார். இதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு டாக்டர் கலைஞர் அவர்கள் நம்முடைய தமிழ்நாட்டில்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது முதலமைச்சர் என்றுதான் சொல்லவேண்டும்.





**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதில் இருக்கிறார். மத்திய அரசை வழி நடத்துகின்ற ஐக்கிய முன்னணிக் குழுவினுடைய கூட்டத்திலே அனைத்துக் கட்சித் தலைவர்களும இருக்கிறார்கள், பல மாநில முதலமைச்சர்கள் இருக்கிறார்கள். இந்தத் தேசிய பிரச்சினையை, அனைத்து நதிகளையும் தேசியமயம் ஆக்குகின்ற பிரச்சினையை அதில் நீங்கள் வலியுறுத்தலாம். அனைத்து நதிகளையும் தேசியமயம் ஆக்கினால் எல்லா மாநிலத்திற்கும் இது உகந்ததாக இருக்கும். இது ஒரு பொதுப் பிரச்சினை. பொதுக் கொள்கை. இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஐக்கிய முன்னணிக் கூட்டத்திலே வலியுறுத்தி இந்த நாடாளுமன்றக் கூட்டத்தொடரிலேயே ஒரு கருத்து உருவாக்கப்படுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் அறிவிப்பார்களா; தெரிவிப்பார்களா. அந்த முடிவை இங்கே எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நதிகளை இணைப்பது என்பது வேறு; தேசிய மயம் ஆக்குவது என்பது வேறு. இணைப்பது என்பது ஏற்கெனவே கங்கையிலிருந்து காவிரி வரையில் இணைப்பது என்ற ஒரு திட்டம் மாண்புமிகு மறைந்த கே.எல்.ராவ் அவர்களுடைய முயற்சியால் மேற்கொள்ளப்பட்டது. ஒரு நேரத்திலே நான், திருவாளர்கள் வீரேந்திர பாட்டீல், அச்சுதமேனன் ஆகிய மூன்று முதலமைச்சர்களும் கே.எல். ராவ் அவர்களைச் சந்தித்து இதைப்பற்றிக் கேட்டபோது, அவர் 3 மணி நேரம் எங்களுக்கு விளக்கம் அளித்தார். படம் எல்லாம் போட்டுக் காட்டி அதிகாரிகளை எல்லாம் வரவழைத்து கங்கையையும், காவிரியையும் இணைக்க என்ன செலவு ஆகும்; எவ்வளவு மின்சாரம் தேவைப்படும் என்று எல்லாம் கணக்கிட்டு கங்கையிலிருந்து தண்ணீரை எழுப்பி, முதல் நீரேற்றும் இடத்திற்கே இந்திய முழுமைக்கும் பயன்படுத்தப்படுகின்ற மின்சாரம் அந்த ஒரு இடத்திற்கே தேவைப்படுகிறது என்று கே.எல். ராவ் அவர்கள் குறிப்பிட்டு, எனவே, இது சாத்தியம் இல்லாதத திட்டம் என்று உணரப்படுகிறது என்று குறிப்பிட்டார். அதற்குப் பிறகுதான்,

[1997 மார்ச் 12

தமிழகத்தின் சார்பில் கருத்துக்களை எடுத்துக் கூறுகிற நேரத்தில் கோதாவரி பகுதியிலிருந்து காவிரியை இணைத்தால் பிறகு முடிந்தால் கங்கையை இணைத்துக்கொள்ளலாம். தெற்குப் பகுதி வட்டாரத்தைப் பொறுத்தவரையில் கோதாவரி, காவிரி இவைகளை எல்லாம் இணைக்கிற முயற்சியில் ஈடுபட்டால் பிறகு கர்நாடக தண்ணீர் கூட நமக்கு வரவேண்டிய அவசியம் இல்லை. அந்த அளவுக்கு தாராளமாக நீர் கிடைக்கும் என்ற திட்டமும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இவைகளெல்லாம் பரிசீலனையில் இருக்கிறதே தவிர, வேகமாக நிறைவேற்ற வேண்டும் என்கின்ற முனைப்பான எண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை. இப்பொழுது தேசிய மயம் என்ற வார்த்தையைப் பயன்படுத்த நான் பயப்படுகிறேன். எதற்காக என்றால், காவிரிப் பிரச்சினையில் கர்நாடக அரசு, நடுவர் மன்றத்திற்குக்கூட இது இருக்கக் கூடாது. அங்கே விசாரிக்கக் கூடாது என்று சொல்லும்பொழுது, அவர்கள் எழுப்புகின்ற வாதம் என்னவென்றால், நதிகள் தேசியமயத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகுதான் இதைப்பற்றி யோசிக்க வேண்டும் என்று கர்நாடகம் தண்ணீரைத் தர மறுப்பு தெரிவிக்கும்பொழுது வாதமாக எடுத்து வைக்கிறது. எனவே, தேசியமயம் என்ற வார்த்தையை இந்த நேரத்திலே நான் பயன்படுத்த விரும்பாததற்கு அதுதான் காரணம். நதிகளை இணைப்பது வரவேற்கத்தக்க ஒரு சிலாக்கியமான திட்டம் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 10 பேர் கேட்கிறார்கள். நான் என்ன செய்வது?

அடுத்து, வினா எண் 171, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**171--**

**பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பணிமனை**

*2445--**திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--



1997 மார்ச் 12]

வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், ஆலங்காயத்தில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

தற்போது அவசியம் எழவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அந்தப் பகுதியிலே, வாணியம்பாடிக்குப் பக்கத்தில், திருப்பத்தூரில்தான், டெப்போ இருந்து கொண்டிருக்கிறது. அந்த இடத்தில் பணிமனை இருக்கக்கூடிய காரணத்தினாலே, இப்பொழுது ஆலங்காயம், ஆம்பூர் போன்ற பகுதிகளில் இதை இணைக்க முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிற காரணத்தினால், திருப்பத்தூரும் கிட்டத்தட்ட ஆலங்காயத்திலிருந்து 32 கிலோ மீட்டருக்கு அந்தப்புறம் இருக்கிற காரணத்தினால் உடனடியாக வருகிற ஆண்டில் ஆலங்காயம் பகுதியில், அந்த மலைப் பகுதியில் இருக்கக்கூடிய மக்களெல்லாம் அந்த இடத்தில் நகரப் பேருந்துகள், மற்றப் பேருந்துகள் வசதியை முழுமையாகப் பெறுவதற்கு ஆலங்காயத்தில் பணிமனை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பணிமனை அமைக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் 50 இலட்சம் ரூபாயாவது செலவாகும். அதுமட்டுமல்ல, ஒரு பணிமனையிலே குறைந்தபட்சம் 25 பேருந்துகளாவது அந்த இடத்திலே தங்குகிற வசதிகள் இருக்க வேண்டும். இங்கே 6 பேருந்துகள்தான் அந்த நகரத்திலே இருந்து இயக்கப்படுகின்றன. இரவு நேரப் பேருந்துகள் 2 பேருந்துகள்தான் தங்குகின்றன. ஆகவே, அந்தப் பொது மக்களுடைய கோரிக்கைகளுக்கேற்ப பேருந்துகளினுடைய நடமாட்டம் அதிகரிக்கிறபொழுது இங்கே பணிமனை அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 50 இலட்சம் ரூபாய் ஆகிறது; 25 பேருந்துகள் வேண்டுமென்று கூறுகிறார்கள் 25 பேருந்துகளையும்,

[1997 மார்ச் 12

50 இலட்சத்தையும் நீங்களே வழங்கி - காரணம் அந்தப் பகுதியிலே போதிய பஸ் வசதி இல்லாமல் இருக்கிறது - அந்தப் பக்கத்தில் திருப்பத்தூரை இணைப்பதற்கும், ஆம்பூரை இணைப்பதற்கும், அதே போல இந்தப் பக்கம் ஒடுக்கத்தூர் பக்கம் மலைப் பகுதிக்கு வருவதற்கும் வசதியாக, எல்லாப் பகுதிக்கும் மையமான, அந்த மலைப் பகுதியில் தாங்கள் உடனடியாக இந்த 25 பேருந்துகளை விடுவதற்கும், 50 இலட்சம் ரூபாயை முதலீடு செய்து, அந்த இடத்திலே பணிமனை அமைக்கவும், அரசு வருகிற ஆண்டிலாவது முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உடனடியாக அதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 172, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**172--**

### மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பணிமனை

*2716--**திரு. கே. தங்கமணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) காமராசர் மாவட்டம், மானாமதுரையில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை நகரம் ஒரு வளர்ந்து வரக்கூடிய நகரம். சிவகங்கையில் இருந்து தினசரி காலையில் கிட்டத்தட்ட 15 பேருந்துகள் ஆள்



1997 மார்ச் 12]

இல்லாமலேயே வந்து, மானாமதுரையை மையமாக வைத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. அதேபோல், இரவு 9 மணிக்கு மேல் ஆள் இல்லாமலேயே அதே பேருந்துகள் சிவகங்கை பணிமனைக்குச் செல்ல வேண்டியிருப்பதால் தினசரி குறைந்தபட்சம் சுமார் 300 லிட்டர் டீசலாவது ஆள் இல்லாமலேயே வீண் செலவாகப் போக வேண்டிய நிலை இருக்கக்கூடிய காரணத்தாலே அந்த நகரம் தேசிய நெடுஞ்சாலையிலும், புகைவண்டிச் சந்திப்பிலும் இருப்பதாலும், அரசு இதுசம்பந்தமாக மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மானாமதுரை பசும்பொன் மாவட்டத்தில் இல்லை; காமராஜர் மாவட்டத்தில் இருக்கிறது என்று கருதுகிறேன். (குறுக்கீடு) பசும்பொன் மாவட்டமா? காமராஜர் என்று தவறுதலாக இதிலே இருக்கிறது. அது பசும்பொன் மாவட்டத்திலே இருக்கிறது. இந்த மானாமதுரையைப் பொறுத்தவரையிலே, முன்பே பெரும்பாலான உறுப்பினர்கள் அந்தப் பணிமனை வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். பணிமனை வைக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் 50 இலட்சம் ரூபாய் செலவாகிறது. கிராமப்புறங்களிலே, புறநகர்ப் பகுதிகளிலே அமைக்க வேண்டுமென்று சொன்னால் 2 ஏக்கர் நிலமாவது குறைந்தபட்சம் தேவைப்படுகிறது. 25 பேருந்துகளாவது இரவிலே தங்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. ஆகவே, இன்றைய போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலையைக் கணக்கில் கொண்டு, மக்களுடைய தேவைகளுக்கேற்ப இப்பொழுது புதிய பேருந்துகள் விடப்பட்டு, ஓடிக் கொண்டிருக்கிற பேருந்துகளை, அந்த வழித்தடங்களையே சரியாகச் செய்தாலே பெரும்பாலான பிரச்சினைகள் தீரும் என்ற அடிப்படையிலே இந்த அரசு இப்பொழுது திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கிறது. போக்குவரத்துக் கழகங்களினுடைய நிதி நிலை உயர்கிறபொழுது இவைகளை அரசு பரிசீலிக்கும். இதற்குப் பக்கத்திலேயே உள்ள பணிமனை 40 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தால்தான், புதிய பணிமனை அமைக்க முடியும். 20 கிலோ மீட்டர் தூரத்திலேயே 2 பணிமனைகள் இருக்கிற காரணத்தினால் இதைத் துவக்குகிற பரிசீலனை எதுவும் இப்பொழுது அரசிடம் இல்லை.

[1997 மார்ச் 12

முற்பகல் 10.15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 173 திரு. சுப. தங்கவேலன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**173--**

**நியாயவிலைக் கடைகளில் குடும்ப அட்டைகளுக்கு பொருட்கள் வழங்குதல்**

*2094--**திரு. சுப. தங்கவேலன்:**

*மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*நியாய விலைக் கடைகளில் அரிசி, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் வழங்க தனித்தனி குடும்ப அட்டைகள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி துவக்கக் காலத்தில் கேட்கப்பட்டது. மாண்புமிகு முதல்வரவர்கள் சிகப்பு, மஞ்சள், பச்சை என்று மூன்று அட்டைகளை அறிவித்ததற்குப் பிறகு இந்தக் கேள்வி எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலம் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நிகழ்ச்சி நிரலைப் பார்த்த பிறகு இங்கே வந்து என்னிடம் சொல்லியிருக்கலாம், இந்தக் கேள்வி தேவையில்லையென்று.

வினா எண் 174, திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.



1997 மார்ச் 12]

**174--**

**அம்பத்தூரில் குடிசை மாற்று வாரியம் மூலம் அடுக்குமாடிக் கட்டிடம் கட்டுதல்**

*3496--**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

*மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*அம்பத்தூர் கல்யாணபுரத்தில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு குடிசை மாற்றுவாரியம் மூலமாக அடுக்குமாடிக் கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு.க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அம்பத்தூர் கல்யாணபுரத்தில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அடுக்குமாடி வீடுகள் கட்டும் திட்டம் தற்போது இல்லை.

**திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அம்பத்தூர் பகுதியில் கடந்த மழையிலே அந்த ஏரிப் பகுதிகளில் எல்லாம் நிறைய குடிசைகள் கட்டியிருந்ததால், ஊர் மக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஏரியை வெட்டிவிட்டதன் காரணமாக, பல பகுதிகள் வெள்ளக்காடாக ஆகியது. அங்கே நிறைய மக்கள், போரூர், ராமாவரம், அம்பத்தூர் நகர் ஏரிகளிலே குடியிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அங்கேயிருந்து அப்புறப்படுத்தி, அடுக்குமாடி வீடுகள், குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகக் கட்டிக் கொடுப்பீர்களானால் நிச்சயமாக அதுபோன்ற ஒரு நிலை ஏற்படாது. ஆகவே, இதை அமைச்சர் பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் கல்யாணபுரம் குடிசைப் பகுதியில் சுமார் 158 குடும்பங்கள் வாழ்கின்றனர். அப்பகுதி வாழ் மக்களுக்கு அவர்களுடைய விருப்பத்திற்கிணங்க, சாலை வசதி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, மின்விளக்கு அமைத்தல் போன்ற பணிகளுக்காக நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துக் குடும்பத்தினரும் முன்வைப்புத் தொகையைச் செலுத்திவிட்டனர். இவர்களுக்கு

குத்தகை மற்றும் விற்பனைப் பத்திரம் 31-3-97-க்குள் வழங்கப்படும். ஆகவே, அப்பகுதியில் அடுக்குமாடிக் கட்டிடம் கட்டும் திட்டத்தை அவர்கள் விரும்பவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 175, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**175--**

### Abolition of Contract Labour System

***4326--THIRU B. VENKATASAMY:**

Will the Hon. the Minister for Labour be pleased to state--

(a) Whether there is any proposal under consideration of the Government to abolish contract labour in all the factories in Tamil Nadu; and

(b) if so, when it will be implemented?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து தொழிற்சாலைகளிலும் ஒப்பந்தத் தொழில் நிறுத்தம் செய்வது குறித்த செயற்குறிப்பு ஏதுமில்லை. இருப்பினும், தொழிற்சாலைகளிலும், தொழிற்சாலை அல்லாத நிறுவனங்களிலும் ஒப்பந்தத் தொழிலாளர் முறையை சில செய்முறைகளிலே முறைப்படுத்துதல் குறித்தும் நீக்குதல் குறித்தும் அப்போதைக்கப்போது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) ஒப்பந்தத் தொழிலாளர் முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல் குறித்து அரசு ஆணை பிறப்பிக்கும் தேதியிலிருந்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களிலுள்ள செயல்முறைகளில் அமுல்படுத்தப்படும்.

**THIRU B. VENKATASAMY :** Hon. Speaker, Sir, in the name of con-tract labour, lot of industrialists are engaging 50 to 100 contract labourers daily in their factories. Eventhough, many permanent vacancies exist, they are not filling up those vacancies



because they are getting contract labourers very cheaply. By this way, each contract labourer will be given a job for 3 months or six months and then he will be sent out and after that he will be given job for another six months. Each contract labourer is working for two to three years in a factory without getting any permanent employment. I request the Hon. Minister for Labour to see that this is stopped. Whenever there is necessity, they may take the contract labourers, in their factories. Lot of poor people who are working in the factories are being exploited by the industrialists. May I know from the Hon. Minister for Labour whether the Government would bring in a new amendment to the Act and see that the people who are working as contract labourers are permanently absorbed in the industries.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தத் தொழிலாளர் முறையை, Contract Labourers-ஐத் தடை செய்ய, அதை அகற்ற சட்டம் வழி செய்கிறது Contract Labour Regulation and Abolition Act 1971 என்ற சட்டத்தின்படி, இதை அமுல்நடத்த, ஒரு நிறுவனத்திலே 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்க வேண்டும். காண்டிராக்ட் பணியில் அமர்த்துகின்றவர்கள் எண்ணிக்கை 20 அல்லது அதற்கு மேல் இருந்தால்தான் இந்தச் சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியும். இந்தச் சட்டத்தினுடைய 10-வது பிரிவு மிகத் தெளிவாகச் சொல்கிறது. ஒப்பந்தத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கு, மாநில அரசு, காண்ட்ராக்டர்கள் நிறுவனத்தைச் சார்ந்தவர்கள், தொழிலாளர்கள் இவர்கள் அடங்கிய ஒரு அட்வைசரி குழு ஒன்று நியமித்து அவர்கள் சொல்கின்ற ஆலோசனையின்பேரில் அவர்களைக் கலந்து பல்வேறு துறைகளில் எங்கெல்லாம் எந்தெந்த நிறுவனத்தில் Contract Labourers இருக்கிறார்களோ, அதை ஒழுங்குபடுத்த, முறைப்படுத்த அல்லது அந்தப் பணியின் தன்மைகளை அறிந்து அந்த முறையை அகற்றுவதற்கு வழிவகை செய்கிறது. அந்த விதத்தில் தமிழக அரசு பல்வேறு துறைகளில் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. மேலும், சட்டத் திருத்தம் வேண்டுமென்றால் பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளில் பணியிடங்களை நிரந்தரமாக வைத்துக் கொள்கிறார்கள். பணியாளர்களை மட்டும் தற்காலிகமாக, கான்ட்ராக்ட் அடிப்படையிலே வைத்துக் கொள்வது என்பது சமூக நியாயத்திற்குப் புறம்பானதாகும். எனவே, பணியிடங்கள் நிரந்தரம் என்றால் அதில் பணியாற்றுகிற தொழிலாளர்களும் நிரந்தரமாகத்தான் இருக்க வேண்டும். எனவே, அதற்குப் பொருத்தமான முறையில் கான்ட்ராக்ட் முறை ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்கு மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கொள்கையை இந்த அரசு மனப்பூர்வமாக ஏற்கிறது. சட்டத்தினுடைய சில பிரிவுகளின் சந்துபொந்துகளில் நுழைந்து ஏமாற்றும் நிலை நடைபெறுகிறது. இருந்தாலும், இந்தத் தொழிலாளர் நல அரசு இந்தச் சட்டத்தை அமல் நடத்த உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தத் தொழிலாளர்கள் சம்பந்தமாக இருக்கக்கூடிய சில பிரச்சினைகளை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இன்று வெளியிட்டிருக்கிறார்கள். நான் ஒன்றை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே, அரசினுடைய இரப்பர் கழகத்திலே தொள்ளாயிரத்திற்கும் அதிகமான ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரமான பணியிடத்தில் காட்டி, வேலை செய்ய அமர்த்தியிருக்கிறார்கள். நிரந்தரப் பணியிடங்களில் ஒப்பந்தத் தொழிலாளர்களை வைத்திருக்கிறார்கள். ஆனால், அந்த நிறுவனத்தோடு பேசினால் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. எனவே, இந்த அரசுத் துறையிலே இதை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல் இந்த அரசு, அரசுத் துறைகளிலே இதுகுறித்து நடவடிக்கைகள் எடுத்து, ஒப்பந்தத் தொழிலாளர் முறையை அகற்றியிருக்கிறது. தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 19





செயல்முறைகள் சிமெண்ட் தொழிலில் சிமெண்ட் மூட்டை சிப்பமாக்கும் இடங்களில் மூட்டை கட்டும் பணி, சணல் பைகளில் அச்சிடும் பணி, அதே போல பல இடங்களில் முறைப்படுத்தியது பற்றி ஏராளமான புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. இந்த அரசைப் பொறுத்தமட்டில் இந்தச் சட்டத்திற்கு உட்பட்டு, அபாலிஷன் என்ற வகையில், அந்தக் கான்ட்ராக்சுவல் லேபர் முறையை ஒழிப்பதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக, திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. Venkatasamy:** Hon. Speaker Sir, I thank the Hon. Minister for Labour for having said that if necessary, an amendment will be passed. May I know from the Hon. Minister whether there is any proposal to constitute a Committee to see that the amendment is passed and the exploited labourers are saved from the clutches of big Industrialists?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியில் நடைபெற்ற மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர்கள் மாநாட்டிலும் பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்த தொழிலாளர் நலத் துறை அமைச்சர்கள் இந்தச் சட்டத்திருத்தங்கள் குறித்துப் பேசியிருக்கிறார்கள். அன்று இந்தச் சட்டம் சம்பந்தமாகவும் சொல்லியிருக்கிறார்கள். இதுகுறித்து, சட்டத் திருத்தங்கள் அரசின் சார்பாக வெளியிடுகின்ற கருத்து அவசியம் என்று மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. ஆகையினாலே சட்டத் திருத்தங்கள் குறித்து விவாதிக்க இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 176, திரு. டி. மணி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**176--**

**நிலுவையிலிருக்கும் வழக்குகளை விரைந்து முடித்தல்**

*1204--**திரு. டி. மணி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

[1997 மார்ச் 12

(அ) உயர்நீதிமன்றத்திலும், செஷன்ஸ் நீதிமன்றங்களிலும் நிலுவையில் இருக்கும் வழக்குகளை விரைவில் முடிக்க வழக்கறிஞர்களிடமிருந்து ஏதேனும் பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) உயர்நீதிமன்றத்திலும், செஷன்ஸ் நீதிமன்றங்களிலும் நிலுவையில் இருக்கின்ற வழக்குகளை விரைவில் முடிக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு சென்னை உயர்நீதிமன்றம் முன்னோடித் திட்டத்தை அரசுக்கு தந்திருக்கிறது. ஆகவே, வழக்கறிஞர்கள் சங்கமும், மூத்த வழக்கறிஞர்களும் பல பரிந்துரைகளை அரசுக்குத் தந்திருக்கிறார்கள். இவைகளை மையமாகக் கொண்டு முன்னோடித் திட்டத்தின்கீழ், 55 கூடுதல் நீதிமன்றங்களை அரசு அனுமதித்திருக்கிறது. வேறு 11 நீதிமன்றங்களும் புதிதாக அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே கூடுதல் நீதிமன்றங்களும், மற்றும் நீதிமன்றங்களும்-66-அரசால் புதிதாக அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் அடிமட்டத்திலேயிருக்கிற நீதிமன்றத்தினுடைய அதிகார வரம்புகளைத் திருத்தியமைக்கின்ற வகையில் District Munsif-*cum*-Judicial Magistrate என்ற அடிப்படையில் 15 நீதிமன்றங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. இவை போக, இவைகளுக்குத் துணை செய்கின்ற வகையில் நகலாளர்கள் 50 பேர்களை நியமனம் செய்வதற்கும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. தட்டச்சு இயந்திரங்கள் 800 வாங்குவதற்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. தமிழக வரலாற்றில் இந்த அளவிற்கு ஒரே ஆண்டில் 66 புதிய நீதிமன்றங்கள் அமைப்பதற்கும், 15 நீதிமன்றங்களைத் திருத்தி உயர்த்துவதற்கும் ஆணையிட்டு சரித்திரத்தை டாக்டர் கலைஞர் அவர்கள்தான் படைத்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10-25

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன்னோடித்



1997 மார்ச் 12]

திட்டங்களின் விவரங்களையெல்லாம் அளித்ததற்காக, அதாவது இவ்வளவு அதிகப்படியான நீதிமன்றங்களையெல்லாம் இந்த நிதியாண்டிலேயே அனுமதித்ததற்காகப் பாராட்டுகின்றேன். என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், உயர்நீதிமன்றத்தினுடைய கிளையை மதுரையிலே அமைக்க வேண்டுமென்று ஏற்கெனவே சொல்லப்பட்டு, அதில் முடிவும் எடுக்கப்பட்டிருக்கின்றது. உயர்நீதிமன்றத்திலேதான் அதிகப்படியான வழக்குகள், 15 ஆண்டுகளுக்கும் மேலாக இருக்கின்ற வழக்குகள் நிலுவையிலே இருக்கின்ற காரணத்தால், மதுரையிலே உயர்நீதிமன்றத்தின் கிளையை ஏதாவது ஒரு இடத்திலே இந்த நிதியாண்டிலேயே அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்த அளவில் மதுரையில் உயர்நீதிமன்றத்தின் கிளையை அமைப்பதில் தீவிரம் காட்டுகிறது. ஆர்வம் காட்டுகிறது. அதன் அடிப்படையில், நிலத்தை எடுத்து கையகப்படுத்துவதற்கும், நேற்றையதினமே அரசின் சார்பில் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான துவக்க வேலைக்குண்டான நிதி ஒதுக்கீடு செய்வதற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். நிலத்திற்காக சுமார் 4¼ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அரசைப் பொறுத்த அளவில், வழக்கறிஞர்களும், தென் மாவட்ட மக்களும் எதை விரும்புகிறார்களோ அதைச் செய்வதற்கு கலைஞர் அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேங்கியிருக்கின்ற வழக்குகளைக் குறைப்பதற்கு, அதிகார எல்லையை மாற்றியமைப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இப்பொழுது உயர்நீதிமன்றத்தில்தான் ஏராளமான வழக்குகள் தேங்கியிருக்கின்றன. First Appeal-முதல் அப்பீல் Sub-court-லிருந்து District Court-க்கு வரும்போது 1 இலட்சம் என்று இருப்பதை, 5 இலட்சமாக மாற்றியமைத்தால், உயர்நீதிமன்றத்திலுள்ள ஏராளமான Scond Appeal வழக்குகள் குறையும். இது ஒன்று. மற்றொன்று, இப்பொழுது கோடை

விடுமுறை என்ற அளவில் Summer Vacation 2 மாதங்கள், கிறிஸ்துமஸ் விடுமுறை கிட்டத்தட்ட 20 நாட்கள், Pooja Holidays 15, 20 நாட்கள், இப்படி ஆங்கிலேயேர் காலத்தில் விடப்பட்ட விடுமுறைகளையெல்லாம் ஒழித்துக் கட்டுகின்ற முறையிலே அதை நீக்கினாலே இந்த வழக்குகளின் தேக்கம் குறையும். இதைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஆலோசனைகள் வழங்கறிஞர்கள் சங்கங்களிலிருந்தும், உயர்நீதிமன்றத்திலிருந்தும் அரசுக்கு வருமானால், அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குகளை விரைவாக முடித்தால்தான் தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்க முடியும். அந்த அடிப்படையில் கடந்த ஆட்சிக் காலத்தில் மிகப் பெரிய தவறுகளைச் செய்து, மக்களுடைய வரிப் பணத்தையெல்லாம் கொள்ளையடித்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீதும், அவருடைய சக அமைச்சர்கள்மீதும் உள்ள வழக்குகளின் விசாரணையை விரைவாக முடித்து, உரிய தண்டனை வழங்க, தனி நீதிமன்றம் அமைக்கப்படும் என்று பத்திரிகையிலே பார்த்தோம். அந்தத் தனி நீதிமன்றம் எப்பொழுது அமைக்கப்படும். வழக்குகளெல்லாம் எப்பொழுது முடிக்கப்பட்டு தவறு செய்தவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தனி நீதிமன்றம் அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாதக் கணக்கில் அல்ல, வாரக் கணக்கில் தனி நீதிமன்றம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) வழக்குகள் விரைவில் முடிய வேண்டுமென்று சொன்னார்கள். அது என் கையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி.



**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே உயர்நீதிமன்றத்தினுடைய கிளையை அமைப்பதற்காக, அதற்கென்று இடத்தைக் கையகப்படுத்துவதற்கு 4 (1) நோட்டீஸ் இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனாலும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் நம்முடைய சட்டத்துறை அமைச்சர் அவர்களையும் வழக்கறிஞர்களெல்லாம் சந்தித்த பின்பும் தனிப்பட்ட முறையிலே அதற்கென்று பணம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று தென் மாவட்டத்திலே இருக்கக்கூடிய வழக்கறிஞர்கள் இப்போது வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கூட்டத்தொடரில் அதற்கென்று தனியான முறையிலே எவ்வளவு பணம், கட்டுமானப் பணிக்கும், இட ஒதுக்கீட்டுக்கும் ஒதுக்கப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றக் கிளையை மதுரையில் அமைப்பதில் நிதி ஒதுக்கீடு ஒரு தடையாக அமையவில்லை. தேவையான நிதி ஒதுக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள்...(மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** தேவையான நிதி ஒதுக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய உரையிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆங்கில உரையில். "Funds are available for establishing the Bench of the High Court" என்று சொல்லப்பட்டிருக்கிறது. நீதித் துறை மானியக் கோரிக்கை வரும்போது அதுபற்றி குறிப்பிடப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். ஆர். அழகர்ராஜா. (குறுக்கீடு) பேசாதவர்களுக்குத்தான் முதலில் வாய்ப்புத் தரப்படும். ஒரே உறுப்பினருக்குத் திரும்பத் திரும்ப வாய்ப்புக் கொடுக்கப்படமாட்டாது.

[1997 மார்ச் 12

**திரு. என். ஆர். அழகர்ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்ளே, கடந்த பல மாதங்களாக வைகை வீரன் அழகுமுத்து மாவட்டத்தினுடைய மாவட்டக் கோர்ட்டை பெரியகுளத்திலே அமைக்க வேண்டும் அல்லது தேனியிலே அமைக்க வேண்டும் என்ற பிரச்சினை காரணமாக பெரியகுளம் கோர்ட்டிலே உள்ள வழக்கறிஞர்கள் ஸ்டிரைக் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். அதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக்கேள்விக்குத் தொடர்புடையது அல்ல என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் பகுதிக்கு சிவில் கோர்ட் போன நிதி ஆண்டிலே வழங்கப்பட்டிருக்கிறது. நன்றி. அதற்கு முழு நேர நீதிபதி இல்லாமல் பார்ட் டைம்-ஆக இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த நிதி ஆண்டிலே அந்தக் கோர்ட்டுக்குத் தனி நீதிபதி நியமித்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அனுமதிக்கும் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.பி. சிங்காரவேலு.

**திரு. வி.பி. சிங்காரவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் குற்றவியல் நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கக்கூடிய வழக்குகள் பற்றி உச்சநீதிமன்றம் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அதாவது குற்றவியல் நீதிமன்றங்களில் மூன்று ஆண்டுகளாக வாரன்ட்டுகள் பென்டிங்காக உள்ள வழக்குகளையும், மூன்று ஆண்டுகளாகச் சாட்சியங்கள் ஆஜர்படுத்தப்படாத வழக்குகளையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று உத்திரவிடப்பட்டிருக்கிறது. இதனால் தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு நீதிமன்றங்களில் உள்ள அப்படிப்பட்ட வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அதைத்



1997 மார்ச் 12]

தடுப்பதற்காக, சாட்சியங்களை ஆஜர்படுத்தவும், பிடிகட்டளைகளை நிறைவேற்றுவதற்கும் நீதித் துறையிலேயே தனியாக காவல் பிரிவு ஒன்று ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, இதுபோன்ற காவல் பிரிவு வழக்குகள் விசாரணையை துரிதப்படுத்துவதற்கென்று தனியாகத் தேவையில்லை என்பதை ஏற்கெனவே இந்த அவையிலே நான் தெரிவித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 177, திரு. பி. என். வல்லரசு, மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**177--**

**கட்டத்தேவன்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

*4826-**திரு. பி.என். வல்லரசு :**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில், கட்டத்தேவன்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): உசிலம்பட்டி தொகுதியில் கட்டத்தேவன்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, கட்டத்தேவன்பட்டி விவசாயப் பகுதி. கால்நடைகள் நிறைந்த பகுதி. ஏறத்தாழ 10 கிலோ மீட்டர் அளவுக்கு அங்கே கால்நடை மருத்துவமனை கிடையாது. எனவே,

அரசு மீண்டும் பரிசீலனை செய்து அந்தப் பகுதியில் உள்ள கால்நடைகளைப் பராமரிப்பதற்கு கால்நடை மருத்துவமனை அமைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி பகுதியில் ஒரு கால்நடை மருந்தகமும், பொத்தம்பட்டி, வடுகப்பட்டி, உத்தப்பநாயக்கனூர், அல்லிக்குண்டம், தொட்டப்பநாயக்கனூர், ஜோதிநாயக்கனூர் ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவக்கிளை நிலையங்களும் இயங்கி வருகின்றன. ஆகவே, உறுப்பினருடைய கோரிக்கை வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதிக்கு உட்பட்ட பனங்குடியில் கால்நடை மருத்துவமனை தொடங்குவதற்கு நாங்கள் நிலம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். கட்டட வசதிகள் செய்து கொடுப்பதற்கும் தயாராக இருக்கிறோம். ஆகவே, அங்கு புதிதாக ஒரு கால்நடை மருத்துவமனையை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு நேற்றே பதில் சொல்லிவிட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன்.

முற்பகல் 10-35

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் நகரத்தில் இருக்கின்ற கால்நடை மருத்துவமனை தனியார் வாடகைக் கட்டடத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றது. அது மக்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கின்றது. எனவே, கால்நடை மருத்துவமனைக்கு ஒதுக்கியிருக்கின்ற இடத்தில் இந்த ஆண்டே அரசுக் கட்டடம் கட்டி, அந்த மருத்துவமனை மாற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 178, திரு. அ. மாரிமுத்து, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**178--**

**சார்பதிவாளர் அலுவலகம் திறத்தல்**

*1796-**திரு. அ. மாரிமுத்து:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், வானூர் தொகுதி, கிளியனூரில் சார்பதிவாளர் அலுவலகம் திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வானூர் தொகுதி கிளியனூரில் சார்பதிவகம் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாத்தியக்கூறுகள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இதே மாமன்றத்தில் 1989-90-ஆம் ஆண்டு நமது கழக ஆட்சியிலேதான், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், இந்தக் கோரிக்கையினை வைத்தபோது, பரிசீலனையில் உள்ளது என்று சொன்னார்கள். அந்தப் பகுதி மக்களெல்லாம் இதனை ஒரு வரப்பிரசாதமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மேற்படி அலுவலகம் அங்கே ஆரம்பிப்பதற்கு இடம் அளிப்பதற்கும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள். முத்துவேலூர், கிளியனூர்

ஆகிய இரண்டு குறு வட்டங்களுடைய தலைமையிடமாக அது இயங்குவதாலும், நீண்ட நெடுங்காலமாக இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாமல் இருப்பதாலும், வருங்காலத்தில் ஒரு ஒன்றியத்தினுடைய தலைமையிடமாக அமைய இருப்பதாலும், தயவு கூர்ந்து அந்த மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கையினை நிறைவேற்ற மறுபரிசீலனை செய்து மேற்படி அலுவலகம் அந்த இடத்தில் துவங்க ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சார்பதிவகம் திறப்பதற்கு, ஒரு ஆண்டில் *2,000* ஆவணங்கள் பதிவு செய்கின்ற ஒரு நிலை இருந்தால்தான் ஏதுவாக இருக்கும். ஆனால், கிளியனூரைச் சுற்றி இருக்கின்ற வானூர், மயிலம், மரக்காணம் ஆகிய மூன்று சார்பதிவகங்களிலே, ஒவ்வொன்றிலும் *2,000* ஆவணங்களுக்கும் குறைவாகத்தான்-- மயிலத்தைப் பொறுத்தவரை *1,900* ஆவணங்கள்தான்--ஓராண்டிற்குப் பதிவாகின்றன. ஆக, இந்த மூன்று சார்பதிவகங்களைப் பிரித்து, கிளியனூரில் சார்பதிவகம் அமைத்தால், மற்ற சார்பதிவகங்களில் ஆவணங்களின் எண்ணிக்கை குறையும். கிளியனூரிலும் ஆவணங்களின் எண்ணிக்கை குறையும். மேலும், ஒரு சார்பதிவகம் அமைப்பதற்குத் தொடர்கின்ற செலவு ரூ. 2½ இலட்சம், தொடராச் செலவு ரூ. *15,000* ஒரு ஆண்டிற்கு ஆகின்றது. ஆகவே, அங்கே சார்பதிவகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *179*, திரு. ஆர். சிவானந்தம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**179--**

**ஆரணியில் தொழிற்பேட்டை தொடங்குதல்**

*3361*-**திரு. ஆர். சிவானந்தம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--



(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், ஆரணி தொகுதியில், ஒரு தொழிற்பேட்டை தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆரணி தொகுதியில் தொழிற்பேட்டை தொடங்கும் திட்டம் தற்போது ஏதுமில்லை.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் தொழில் வரைபடத்தில் தமிழ்நாட்டை உரிய சிறப்பிடத்தில் மீண்டும் நிலைநிறுத்த அரசு மேற்கொண்டிருக்கும் தொழில் வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில், பன்னாட்டுத் தொழில் முனைவோர்களைக் கொண்டு பல பெரிய தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அது போன்ற ஒரு பெரிய தொழிற்சாலையாவது ஆரணி தொகுதியில் அமைக்க அரசு முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1996-97*-ஆம் ஆண்டுக்கென, சிறுதொழில் நிறுவனத்தின் மூலமாக, 'சிட்கோ' மூலமாக ஏற்கெனவே உத்தேசிக்கப்பட்டிருக்கின்ற இடங்களிலே தொழிற்பேட்டை அமைக்கின்ற பணி முடிவடைந்த பின்னால் அது பற்றி பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *180*, திரு. செங்கை சிவம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**180--**

**நியமன அடிப்படையில் வேலைகள் வழங்குதல்**

*573*--**திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

[1997 மார்ச் 12

ஆதிதிராவிட மற்றும் மலைச்சாதி ஒப்பந்ததாரருக்கு மத்திய அரசுத் துறைகளில் ஒப்பந்தப்புள்ளி கோராமலேயே நியமன அடிப்படையில் வேலைகள் வழங்கும் முறை தமிழகத்தில் உள்ள எல்லா அரசுத் துறைகளிலும் பின்பற்றப்படுமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

ஏற்கெனவே ஆவன செய்யப்பட்டு அரசுத் துறைகளில் இம்முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது, இந்த முறை பின்பற்றப்படுகின்றது என்று சொன்னார்கள். ஆனால், தமிழகத்திலே நூற்றுக்கணக்கான மாநில அரசினுடைய துறைகள் இருந்தாலும், தாழ்த்தப்பட்ட, மலைசாதி ஒப்பந்ததாரர்களுக்கு 'நாமிநேஷன்' அடிப்படையிலே வேலைகள் இதுவரையிலேயும் கொடுக்கப்படவில்லை என்பதை மீண்டும் அமைச்சர் அவர்களுடைய ஞாபகததிற்குக் கொண்டு வருவதுடன், தமிழகம்தான், குறிப்பாக நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான், கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் இந்தச் சமுதாய மக்களின் மேம்பாட்டிற்காகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தருணத்தில் பொருளாதாரத்திலும் இம்மக்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கின்ற வகையில் இந்தத் திட்டத்தை முனைந்து செயல்படுத்தவும், அதனை நிறைவேற்றவும் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சமூக நலத் துறை, பொதுப் பணித்துறை, ஆதிதிராவிடர் நலத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, போக்குவரத்துத் துறை போன்றவைகளில எல்லாம் இம்முறை பின்பற்றப்பட்டு வருகிறது. குறிப்பாக, ஆதிதிராவிடர் நலத் துறையில் மட்டும் கடந்த கால ஆட்சியினர் 1995-ஆம்ஆண்டு வரைக்கும் அதை அமல்படுத்தி வந்தனர். அதோடு நிறுத்தி விட்டார்கள். கடந்தகால ஆட்சியினர். "கொடுமைக்கு முடிவு கண்டால்; எமைக் கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய்?" என அன்பு முதல்வர்.



1997 மார்ச் 12]

தமிழக முதல்வர் அவர்கள், அண்ணா இறந்த நேரத்தில் உருக்கமாகப் பாடி, கவிதை வடித்தார்கள். அதே தமிழக முதலமைச்சர் அவர்கள், ஆதிதிராவிடர் நலனில் அக்கறை கொண்டு, அன்புப் பெருக்கோடு இன்றைய தினம் அவர்களுக்குத் தொடர்ந்து நிரந்தரமாக வழங்குவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். அது ஆய்வில் உள்ளது என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 167, திரு. ச. அழகிரி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**167--**

**தனி ஊராட்சி ஒன்றியம் உருவாக்குதல்**

*151-**திரு. ச. அழகிரி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தென்னார்காடு-வள்ளலார் மாவட்டம், திருமுட்டம் பேரூராட்சி நீங்கலாக அதனைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்த்து தனி ஊராட்சி ஒன்றியமாக உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) காஞ்சிபுரம் அருகில் சிறுவள்ளூர் கிராமத்தில் கள்ளச் சாராய விற்பனையைத் தடுக்க முயன்ற மகளிர் அமைப்புப் பெண்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளமை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு. காஞ்சிபுரம் அருகிலுள்ள சிறுவள்ளூர் கிராமத்தில், கள்ளச் சாராய விற்பனையைத் தடுக்க முயன்ற மகளிர் அமைப்பைச் சேர்ந்த பெண்கள், மானபங்கப்படுத்தப்பட்டு, தாக்கப்பட்டுள்ளது குறித்து, உறுப்பினர்கள் திரு. ப. ரங்கநாதன், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. இ. கணேசன், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. சி. ஞானசேகரன், திரு. ஜி. பழனிசாமி, திரு. இரா. தாமரைக்கனி ஆகியோர் தீர்மானங்களைத் கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவராக, இரண்டு நிமிடத்திற்குள் பேசி முடிக்க வேண்டுமென்று சொல்லி, திரு. ப. ரங்கநாதன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை-அண்ணா மாவட்டம், காஞ்சிபுரம் அருகேயுள்ள சிறுவள்ளூர் கிராமத்தைச் சுற்றி, கடந்த ஐந்தாண்டுக் காலமாக பெண்கள் ஒரு அமைப்பை உருவாக்கி, சிறந்த முறையில் அங்கே பல பணிகளைச் செய்து வருகிறார்கள். பெண்கள் சங்கத்தினுடைய தலைவி திருமதி இராணி அவர்களும், சங்கத்தினுடைய உறுப்பினர்களும் சிறுவள்ளூர் கிராமத்திலே, அந்தக் கிராமப் பஞ்சாயத்தினுடைய தலைவர், கிராமப் பஞ்சாயத்தினுடைய கிளைக் கழகச் செயலாளர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஆறுமுகத்தின் மாமியார் திருமதி செல்வராணி அவர்கள் கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுவதாகவும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு விற்பனைக்காகக் கொடுத்தனுப்புவதாகவும் ஒரு கள்ளச் சாராயத் தொழிற்சாலையே அங்கே கிளைக் கழகச் செயலாளருடைய தலைமையில் நடத்திக் கொண்டு வருவதாகவும் புகார் கொடுத்துள்ளார்கள். பெண்கள் சங்கத்தினுடைய தலைவி திருமதி இராணி அவர்கள் கொடுத்த அந்தப் புகாரின் அடிப்படையில், காவல் துறை நடவடிக்கை எடுத்து, செல்வராணியைக் கைது செய்திருக்கிறார்கள். சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட செல்வராணி, அவருடைய உறவினர், அதாவது செல்வராணியின் மருமகன் ஆறுமுகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்



கழகத்தைச் சேர்ந்த கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் ஆகியோர்--கடந்த 8-3-1997 சனிக்கிழமை அன்று, உலக மகளிர் தினம் கொண்டாடுவதற்காக, பிடி அரிசித் திட்டத்தின் மூலம் சேர்த்து வைத்திருந்த நிதியைக் கொண்டு ஒரு அலுவலகம் கட்டுவோம் என்று அந்த மகளிர் சங்கத்தினுடைய தலைவி இராணியினுடைய தலைமையில் அங்கே கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு, அந்தக் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது, நான் ஏற்கெனவே சொன்ன கிராமப் பஞ்சாயத்தினுடைய தலைவர் மற்றும் அ.இ.அண்ணா தி.மு.க. கிளைக் கழகச் செயலாளர் ஆறுமுகமும் அவருடன் அவருடைய அடியாட்களும் சேர்ந்து இருபதுக்கும் மேற்பட்டவர்கள் கூட்டம் நடந்து கொண்டிருந்த இடத்திற்கு வந்து, பெண்களைத் தகாத வார்த்தைகளால் திட்டியதோடு மட்டுமல்லாமல், தாக்கியும் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்தவுடன், கூட்டத்திலே இருந்த அனைத்துப் பெண்களும் சிதறி ஓடி ஒளிந்திருக்கிறார்கள். அதிலே, திருமதி ஆதி என்ற பெண்ணை, அந்த இருபது பேர்களும் ஒன்றாக சேர்ந்து அடித்து, கொடூரமான முறையிலே அவர் தாக்கப்பட்டு, காஞ்சிபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். மகளிர் சங்கத்தினுடைய தலைவி இராணி ஓடி ஒளிந்து கொண்டிருந்தபோதும், அவரைப் பிடித்து அடித்து, நிர்வாணப்படுத்தி, களங்கப்படுத்தி மிகக் கொடூரமான முறையிலே தாக்கப்பட்டு, மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார். அந்த தினம் உலக மகளிர் தினம், மகளிர் போற்றப்பட வேண்டிய தினமான 8-3-1997-ஆம் நாள் அன்று இப்பேர்ப்பட்ட கொடுமையான செயல் நடந்துள்ளது என்பதை இந்த அவைக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதோடு......

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழிமுறைகளில் ஈடுபட்ட அந்த அ.இ.அ.தி.மு.க. வைச் சேர்ந்த கிளைக் கழகச் செயலாளர் ஆறுமுகத்தினுடைய மாமியார் செல்வராணி அவர்களுக்குத் துணையாக இருந்த அ.இ.அ.தி.மு.க. தோழர்கள் 20, 30-க்கு மேற்பட்டவர்களை நீங்கள் காவல்துறையின் மூலமாகக் கைது செய்ய வேண்டுமென்று உங்களிடம் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

[1997 மார்ச் 12

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் சிறுவள்ளூரிலே நடந்திருக்கிற சம்பவம், மகளிர் தினத்தன்று மிகக் கோரமான ஓர் சம்பவமாக நடந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் இங்கே விவரங்களைச் சொல்லியிருக்கிறார். ஆனால் நடந்திருக்கின்ற சம்பவத்தைப் பார்க்கையில் சாராய வியாபாரிகளுக்கு இவ்வளவு தைரியம் வந்திருக்கிறதே என்று எண்ணத் தோன்றுகிறது. சாராயத்தை ஒழிக்க வேண்டுமென்பதற்காக காவல் துறையிலே புகார் கொடுக்கப்பட்டு, பெண்களிடத்திலே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லி அவர்கள் அரசியலுக்கு அப்பால் நின்று பெண்கள் மன்றங்கள் அமைத்து செயல்படுகிறார்கள். அந்தப் பெண்களுக்குப் படிக்கத் தெரியாத காரணத்தினால் அங்கே இருக்கக்கூடிய குமார் என்ற எஸ்.எஸ்.எல்.சி. படித்தப் பையனை வைத்துக் கொண்டு அந்த மன்றக் கூட்டத்தை நடத்துகிறபோது, அந்தச் சாராய வியாபாரி தனக்கிருக்கிற ஆட்களைத் திரட்டிக் கொண்டு, பலத்தோடு வந்து தாக்கக்கூடிய அளவுக்கு அவருக்கு அப்படிப்பட்ட தைரியம் வந்திருக்கிறது. அது சம்பந்தமாக காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டபோதே அந்த செல்வராணி மீதும், சாராயத்தை உற்பத்தி செய்யும் ஆறுமுகம் மீதும் உரிய நடவடிக்கையைக் கடுமையாக எடுத்திருந்தால் இந்த அளவுக்கு அவர்களுக்குத் தைரியம் வந்திருக்காது. ஆகவே காவல் துறைகூட இதிலே கொஞ்சம் அலட்சியம் காட்டியிருப்பதாகத் தெரிகிறது. இதில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் இதிலே துரியோதன வேலையும் நடந்திருக்கிறது. துணியை உருவி, நிர்வாணப்படுத்தி அந்தப் பெண்ணை அவமானப்படுத்தக்கூடிய அளவுக்கு அந்த ஆளுக்கு எப்படித் தைரியம் வந்தது? அதனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதன்மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கு உத்தரவிடுமாறு தங்கள் மூலமாகக் கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் அருகே சிறுவள்ளூர் கிராமம், அதன் பக்கத்திலுள்ள கிராமங்களில் எல்லாம் கள்ளச்சாராயம் அதிகமாக இருக்கிறது என்று சொல்லி மகளிர் பிரிவைச் சார்ந்தவர்கள் காவல் நிலையத்தில் மனு கொடுத்திருக்கிறார்கள். காவல் நிலையத்தில மனு கொடுக்கும்போதே நடவடிக்கை எடுத்திருந்தால் இந்தப் பிரச்சினையே



1997 மார்ச் 12] [திரு. இரா. தாமரைக்கனி]

ஏற்பட்டிருக்காது. அந்தப் பகுதியில் உள்ள காவல் நிலையமாக இருந்தாலும் சரி, வேறு எந்தப் பகுதியானாலும் சரி, சாராய வியாபாரிகள் கள்ளத்தனமாகச் சாராயத்தை விற்கின்றபோது அவர்களிடமிருந்து காவல் துறையினர் மாமூல் வாங்கிக்கொள்வது. மாதத்திற்கு 3 கேஸ்கள் போடுவது என்று இந்த மாதிரி நடந்துகொள்வதால்தான் பிரச்சினையே வருகிறது. சாராய வியாபாரிகளால்தான் நாட்டிலே சட்டம் ஒழுங்கு கெடுகிறது. சாதிச் சண்டைகள் இதனால்தான் வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள்மீது குண்டு பாயும் என்று சொன்னார்கள். அதையும் மீறி இன்றையதினம் சாராய வியாபாரிகளுக்கு தைரியம் வந்திருக்கிறது. அவர்கள் ஒடுங்குவதாகவே இல்லை. இதற்கு ஒத்துழைப்பு தருகிறது காவல் துறை. போலீஸ் துறை அமைச்சரான முதலமைச்சர் அவர்களே சொல்லும்போதும் இதில் காவல் துறையின் மெத்தனப் போக்கு அதிகமாக இருக்கிறது என்றார்கள். ஆகவே அந்தப் பகுதியிலுள்ள காவல் துறை அதிகாரிகள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? மாவட்ட காவல் துறை அதிகாரியிடம் சொல்கிற அளவுக்கு இந்தப் பிரச்சினை ஏன் முற்ற வேண்டும். ஒரு பெண்ணை நிர்வாணப்படுத்துகிற அளவில் ஏன் முற்ற வேண்டும். அந்தப் பகுதியில் சட்டம் ஒழுங்கு கெடுகிற அளவில் ஏன் முற்ற வேண்டும்? இதையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு, இதற்குக் காரணமாக இருந்த காவல் துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் இங்கே சொன்னார்கள், அ.இ.அ.தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள் என்று. எல்லா கட்சிகாரர்களும் சாராய வியாபாரம் வைத்திருக்கிறார்கள். சாராய வியாபாரத்தில் அ.இ.அ.தி.மு.க.-வும் இருக்கிறது, தி.மு.க.-வும் இருக்கிறது, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்காரர்களும்தான் இருக்கிறார்கள். எல்லா கட்சிக்காரர்களும் (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாக் கட்சிகளும் என்று சொல்லக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். எல்லோரும் உட்காருங்கள். உறுப்பினர்கள் எல்லோரும் உட்கார வேண்டும். திரு. தாமரைக்கனி, வழக்கம் போல் பிரச்சினை உண்டாக்கக்கூடாது. நீங்கள் சொல்கின்ற கருத்தை வேறுமாதிரிச் சொல்லுங்கள். சமூக விரோதிகள் எல்லா கட்சிகளிலும் புகுந்து தவறு செய்கிறார்கள் என்று வேண்டுமானால் சொல்லுங்கள். அது வேறு.

*[1997 மார்ச் 12*

**ு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் களே, நான் பொதுப்படையாகத்தான் சொல்கிறேன். எல்லாம் ுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். வேண்டாம், விட்டுவிடுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, இதிலே என்ன ஒளிவு மறைவு. உள்ளதைச் சொல்கிறேன் நான்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** தி.மு.க. காரர்கள் என்று உறுப்பினர் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லோரும் கொஞ்சம் அமைதியாக இருங்கள். உறுப்பினர் திரு. ரங்கநாதன் பேசுகிறபோது அந்த பஞ்சாயத்து தலைவர் அ.இ.அ.தி.மு.க. காரர் என்று சொன்னார். தாமரைக்கனி என்ன சொல்லுகிறார் என்றால், சமூக விரோதிகள் எல்லாக் கட்சிகளின் கரை வேட்டிகளையும் கட்டிக்கொண்டு இதுபோன்ற தவறுகளைச் செய்கிறார்கள், இதில் கட்சிப் பிரச்சினை கிடையாது என்று கருத்து சொல்லுகிறார். அவர் தி.மு.க. கட்சி, அந்த கட்சி, இந்தக் கட்சி என்று சொல்லக்கூடாது என்று நான் சொல்லியிருக்கிறேன். அதாவது, எல்லாக் கட்சிகளும் என்று வேண்டுமானால சொல்லலாம். இதுபோல் குறிப்பிட்ட கட்சிகள் என்று சொல்லக்கூடாது. நீங்கள் அதை மாற்றிச் சொல்லுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** எனவே சாராய வியாபாரிகளை அரசியல் கட்சிகளில் சேரவிடக்கூடாது. அதற்குத் தடை விதிக்க வேண்டும். அவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கும் தடை விதிக்க வேண்டும். ஒட்டுமொத்தத்தில் அந்தச் சாராய வியாபாரிகள் கடந்த 25 ஆண்டுகளில் என்ன சம்பாதித்து இருக்கிறார்களோ, அந்த சொத்து முழுவதையும் பறிமுதல் செய்ய வேண்டும். அவர்களை ஜாமீனில் விடக்கூடாது. 3 ஆண்டு காலம் என்ற அளவில் அவர்களை சிறையில் வைத்தால் நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமை நன்றாக இருக்கும். அது அவர்கள் திருந்துவதற்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொண்டு ஒரு பெண் அவமானப் படுத்தப்பட்டிருக்கிறார். அந்தத் தவறைச் செய்த பஞ்சாயத்து தலைவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுதான் நான் சொல்லுகிறேன். நான் சப்போர்ட் செய்யவில்லை.



*1997 மார்ச் 12]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அவர்கள் எல்லா கட்சி உறுப்பினர் கார்டுகளையும் சேர்த்து வைத்திருக்கிறார்கள். உறுப்பினர் கார்டு பெறுவதற்கு மொதததத்தில் 10 அல்லது 15 ரூபாய்தான் ஆகிறது. ஆகவே, எல்லா கட்சிகளிலும் இந்தச் சமூக விரோதிகள் இருக்கிறார்கள். அவர்களை அரசியல் கட்சிகளில் சேர்க்கக்கூடாது என்று ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும். அப்படிச் செய்தால்தான் சாராய வியாபாரிகள் ஒழிவார்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** எல்லா கட்சிகளின் கார்டுகளையும் அவர்கள் வைத்திருக்கிறார்கள் என்று எல்லாக் கட்சிகளையும் உள்ளடக்கிச் சொல்லுகிறார். எல்லாக் கட்சிகளின் கார்டுகளையும் அவர்கள் வைத்திருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கிறாரா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக உறுப்பினர்கள் என்று நீங்கள் நிரூபிக்கிறீர்களா? அப்படியென்றால் நானும் நிரூபிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம். நீங்கள் உட்காருங்கள். திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

***திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் அருகில் சிறுவள்ளூர் என்ற கிராமத்திலே, உலக மகளிர் நாள், கொண்டாடப்பட்ட அன்று கொடுமையான வகையிலே, மனிதாபிமானமற்ற முறையிலே நடைபெற்ற அந்தச் சம்பவம் மிகவும் கண்டிக்கத்தக்கது என்பதில் எங்களுடைய கண்டனத்தையும் இதிலே இணைத்துக் கொள்கிறோம். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதை நான் வன்மையாக மறுக்கிறேன். பத்திரிகைகளிலே அதுவும் நடுநிலையில் இருக்கக்கூடிய பததிரிகைகளிலே வந்திருக்கிறது. நாங்களும் விசாரித்த வகையிலே அந்த பஞ்சாயத்து தலைவர் ஆறுமுகம் அவர்கள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவராவார். இந்த மாதிரி இழிவான செயலைச் செய்த அவர்மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து பஞ்சாயத்து தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும். அதன்பிறகு அவரை கிரிமினல் குற்றத்தின்கீழ் கொண்டுவர வேண்டும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** எல்லா கட்சியில் உள்ளவர்களையும் நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்குப் பேச அனுமதி கொடுக்கிறேன். நீங்கள் கருத்து சொன்னதைப்போல அவருக்கும் கருத்து சொல்வதற்கு உரிமை இருக்கிறது. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** நான் இன்றைக்கு. அவர் பத்திரிகைகள் வாயிலாக பட்டவர்த்தனமாக உலகம் தெரிந்த குற்றவாளியாக இருக்கின்ற காரணத்தால்தான் அவர்மீது இந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். மேலும். ஒரு பள்ளி இறுதி வகுப்பு மாணவன்தான் அந்தப் புகாரை எழுதிக் கொடுத்திருக்கிறான். மேல்நிலைக் கல்வி படித்த அந்த மாணவனின் கையை முறித்திருக்கிறார்கள். அதுவும். இந்த நூற்றாண்டில். அதுவும் மாண்புமிகு கலைஞர் அவர்களது ஆட்சி நடைபெறுகின்ற இந்தச் சூழ்நிலையில், பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், கள்ளச் சாராயத்தின்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கின்ற இந்தச் சூழ்நிலையில் ஒரு பஞ்சாயத்துத் தலைவர் தன்னுடைய கள்ளத்தனமான தொழிலுக்கு பாதிப்பு வருகிறது என்று சொன்னவுடன், இவ்வளவு அட்டகாசம் செய்ய, அயோக்கியத்தனம் செய்ய அவருக்கு எண்ணம் வருகிறது என்று சொன்னால் அவர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமின்றி. மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்திற்கு முன்னாலே மகளிர் சங்கத்தைச் சார்ந்தவர்கள் ராணி அவர்களுடைய தலைமையில் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். அப்போது சரியான முறையிலே அதிகாரிகள் அவர்களது கோரிக்கைக்குச் செவிசாய்க்கவில்லை. கடைசியாக ஒரு டி.எஸ்.பி. வந்திருந்து அந்த மகளிரைச் சமாதானப்படுத்தி, நீங்கள் செல்லுங்கள், நடவடிக்கை எடுக்கிறோம். ஆறுமுகம் அவர்களைக் கைது செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இதுநாள் வரையிலே நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள். அதாவது மகளிர் சங்கத்தினுடைய புகாரின்மீது உரிய நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீதும் தயவுசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். எனவே, இந்த மோசமான சம்பவத்தை. இந்தக் கேவலமான ஒரு சம்பவத்தைச் செய்தவர்களை நிச்சயமாகத் தண்டிக்க வேண்டும். விட்டுவிடக்கூடாது என்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.





முற்பகல் 10.55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 8-ந்தேதி. காஞ்சிபுரம் அருகே உள்ள சிறுவள்ளூர் கிராமத்தில் கள்ளச் சாராயத்தை எதிர்த்து பிரச்சாரம் செய்த அல்லது அதற்கு எதிராகத் தொடர்ந்த பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டு கொண்டிருக்கிற மகளிர் அணி அமைப்பின்மீது தாக்குதல் தொடுத்தும். அந்த அமைப்பைச் சேர்ந்தவர்களை நிர்வாணப்படுத்தியும், கேவலப்படுத்தியும் இருக்கக்கூடிய இந்தச் செயல் மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்று ஏட்டிலே இருக்கிறதே தவிர, செயலிலே அது நடைமுறைப் படுத்தப்படவில்லை. அதுவும். ஒரு மகளிர் அணியினர், படிக்காத பெண்களே முன்வந்து. இந்தக் கள்ளச் சாராயத்திற்கு எதிர்ப்பு செய்யக்கூடிய. இந்த நடவடிக்கைக்குக் காவல் துறை முழுமையாகத் துணை நின்று இருக்க வேண்டும். ஆனால். அப்படிப்பட்ட அந்தத் துணை இல்லாமல் இருந்திருக்கிறது என்பது வேதனைக்குரிய விஷயம். எனவே. ஏதோ ஒரு பகுதியிலே மட்டுமல்ல, தமிழகத்திலே இன்னும் எல்லாப் பகுதிகளிலேயும் கள்ளச் சாராயம் என்பது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. இது போன்ற நிகழ்ச்சிகள் எதிர்காலத்திலே நடைபெறாமல் முற்றுப்புள்ளி வைத்திடவும், கள்ளச் சாராயத்தை அடியோடு ஒழித்திடவும் இந்த நிகழ்ச்சியிலே இந்தப் பெண்களை அவமானப்படுத்தி, தாக்குதல் தொடுத்து, குற்றம் செய்த, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள். திரு. ரங்கநாதன் அவர்கள். திரு. பழனிசாமி அவர்கள், திரு. தாமரைக்கனி அவர்கள். திரு. தீரன் அவர்கள், டாக்டர்

கிருஷ்ணசாமி அவர்கள், தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அவர்களுடைய பொதுவான கருத்தில் எனக்கும் முழுமையான உடன்பாடு உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காஞ்சிபுரம் தாலுக்கா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஆண்டி சிறுவள்ளூர் கிராமத்தில் பஞ்சாயத்துத் தலைவராக உள்ள திரு. ஆறுமுகம் என்பவருக்கும்--அவர் எந்தக் கட்சி என்ற சர்ச்சையை நான் இப்போது எழுப்ப விரும்பவில்லை. அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நடுநிலை ஏடுகள் சிலவற்றில் அவர் முன்பிருந்த ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி நான், கறாராக, ஆமாம் என்று சொல்லவோ, இல்லை என்று சொல்லவோ விரும்பவில்லை; அவர் சமூக விரோதிகளின் கட்சி என்று சொன்னால் அது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஊரிலுள்ள மாதர் சங்கத்தின் தலைவியாகவும், பஞ்சாயத்து வார்டு உறுப்பினராகவும் உள்ள திருமதி ராணி என்பவருக்கும் அவருக்கும் கருத்து வேறுபாடு நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது. ஆறுமுகத்தின் மாமியார் செல்வராணியும் அவரது குடும்பத்தினரும் சாராயம் விற்பதாக, மொத்தம் 6 சாராய வழக்குகள் 26-2-1996 முதல் 10-2-1997 வரை பதிவு செய்யப்பட்டு செல்வராணி கைது செய்யப்பட்டு சிறைக்கும் அனுப்பப்பட்டிருக்கிறார். சாராயம் விற்பதாக மாதர் சங்கத்தின் சார்பில் புகார் செய்ததால், பஞ்சாயத்துத் தலைவர் ஆறுமுகத்திற்கும், மாதர் சங்கத் தலைவி ராணிக்கும் விரோதம் மேலும் மேலும் மூண்டு எழுந்தது. 15-2-1997 அன்று திருமதி ராணியினுடைய குழுவைச் சேர்ந்த ஏகாம்பரம் என்பவருடைய மனைவி சூர்யா, வீடு கட்டுவதற்காக வைத்திருந்த 500 பனை ஓலைகளை பஞ்சாயத்துத் தலைவர் ஆறுமுகத்தின் ஆட்கள் எரித்து விட்டதாகப் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் நேரடியாகச் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை செய்தார். இது குறித்து காஞ்சிபுரம் தாலுக்கா காவல் நிலையத்தில் குற்ற எண் 315/1997-இல் இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு 435-ன்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருக்கிறது. 19-2-1997 அன்று இரு தரப்பினரும் காவல் நிலையத்திற்கு வந்து சமாதானமாகப் போவதாக எழுதிக் கொடுத்துவிட்டுச் சென்றார்கள்.



முற்பகல் 11.00

பின்னர் உலகப் பெண்கள் தினம் கொண்டாடப்படுகிற நாளான 8-3-1997 அன்று ஆறுமுகத்தின் ஆதரவாளரான இராதாகிருஷ்ணன் என்பவர் ராணி வீட்டின் முன்பாக-மாதர் சங்கத் தலைவி-அந்த அம்மையார் வீட்டு முன்பாக வந்து தரக்குறைவாகப் பேசியதால் வாய்த் தகராறு ஏற்பட்டு, ராணி, பூபதி, ஆதி, வெங்கடாசலம் மற்றும் குப்பன் ஆகியோரை இராதாகிருஷ்ணனும் அவருடைய ஆட்களும் கம்புகளாலும், கைகளாலும் அடித்து காயம் ஏற்படுத்தி உள்ளார்கள். ஏடுகளில் அவர்கள் மானபங்கப்படுத்தப்பட்டார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. ஆனால், அதிகாரிகள் தந்த குறிப்பில் அந்தச் சம்பவம் இடம் பெறவில்லை. இதுபற்றியெல்லாம் தீர விசாரிக்க நான் எண்ணியிருக்கின்றேன். இச்சம்பவம் குறித்து குற்ற எண் 412/97, இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 147, 323-ன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை செய்து, இராதாகிருஷ்ணன், ஏழுமலை, ரவி, ஆகியோரை 10-3-1997 அன்று கைது செயதுள்ளார்கள். காவல் துறை நடவடிக்கை எடுக்கவில்லை என்று இங்கே குறிப்பிட்டது சரியல்ல. அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். பஞ்சாயத்துத் தலைவர் ஆறுமுகம், அவரது மனைவி சாவித்திரி ஆகிய இருவரும் 10-3-1997 அன்று காஞ்சிபுரம் நீதிமன்றத்திலே சரணடைந்து விட்டார்கள். பின்னர் அவர்கள் ஜாமீனிலும் விடப்பட்டிருக்கிறார்கள். காயமடைந்த ராணி மற்றும் அவரது ஆட்களான வெங்கடாசலம், அன்னப்பன், ஆறுமுகத்தின் ஆட்கள் முளவு, அசோகன் ஆகியோர் காஞ்சிபுரம் அரசு மருத்துமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். காவல் துறையினர் மேலும் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளார்கள். அங்கே எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெறாமல் இருக்க, தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கள்ளச் சாராயம் தமிழ்நாட்டில் பெருமளவிற்குப் பெருகியிருந்த நிலை மாறி, இன்றைக்கு ஓரளவு அது குறைந்துகொண்டு வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. மாதந்தோறும் பல கள்ளச்சாராய வியாபாரிகள் கைது செய்யப்படுவதும், கள்ளச் சாராயப் பானைகள் கைப்பற்றப்படுவதும், அதுவும் லட்சக் கணக்கான லிட்டர் சாராயம், ஊறல் இவைகள் எல்லாம் போலீசாரால் கைப்பற்றப்படுவதும் நீங்கள் பத்திரிகைகளிலே பார்த்துக் கொண்டு வருகிற செய்திகளாகும். இருந்தாலும்கூட, எல்லாத் துறைகளிலும் சிலர் தவறுடையவர்களாக

இருப்பார்கள், மக்கள் நல விரோதிகளாக இருப்பார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக காவல் துறையிலும்கூட சிலர் இருக்கிறார்கள் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். நான் காவல் துறைக்கும் அமைச்சர் என்பதற்காக நீங்கள் சொல்லுகின்ற குற்றச்சாட்டுகளை மறுத்துத்தான் தீர வேண்டுமென்று, மறுக்கின்ற மனப்பான்மை உள்ளவன் அல்ல. எனவே, அப்படிப்பட்ட ஒரு சிலரும் திருந்த வேண்டும் என்பதிலே உங்களைப்போலவே நானும் அக்கறை உடையவன். அதனால்தான் இப்போதுகூட, சிலர் 'பார்' நடத்துகிறார்கள். ஐ.எம்.எஃப்.எல். வியாபாரத்தை நடத்த உரிமம் பெற்றவர்கள் அந்த இடத்திலே 'பார்' நடத்தி, அங்கே உட்கார்ந்து குடித்துவிட்டுப் போவதற்கான வசதிகளையெல்லாம்கூடச் செய்து கொடுக்கிறார்கள். இதுபற்றிக்கூட என்னிடத்திலே யோசனை தெரிவிக்கப்பட்டது. இப்படி 'பார்' நடத்துவதால் அங்கேயிருக்கின்ற போலீஸ் ஸ்டேஷன்களுக்கு ஐந்தாயிரம், ஆறாயிரம், ஏழாயிரம் என்று கொடுக்கப்படுகிறது. இந்தப் பணம் போலீஸ் ஸ்டேஷன்களுக்குப் போவதற்குப் பதிலாக கோட்டைக்கே, நேரிடையாக கருவூலத்திற்கு வர, 'பார்' நடத்தவே நீங்கள் உரிமை கொடுத்துவிட்டால் என்ன என்றுகூட என்னிடத்திலே சிலர் சொன்னார்கள். நான் சொன்னேன், அது மதுவிலக்கை எப்படியாவது, ஒரு கட்டத்திலாவது வெற்றிகரமாக நடத்த வேண்டும் என்பதற்குப் பாதகமாக அமைந்துவிடும் என்பதால், அதை ஏற்கவில்லை. அதற்குப் பதிலாகத்தான், சமீபத்திலே பத்திரிகைகளிலே வந்த விளம்பரங்களை, டி.ஜி.பி. அவர்கள் முகவரியிட்டு வந்த விளம்பரங்களைப் பார்த்திருப்பீர்கள். எங்கும் ஐ.எம்.எஃப்.எல். விற்பனை செய்கிறவர்கள் 'ஒயின்' ஷாப்புகளுக்குப் பக்கத்தில் 'பார்' வைக்கக்கூடாது என்றும், அப்படி 'பார்' வைத்தால் அவர்களுடைய உரிமம் ரத்து செய்யப்படும் என்றும், அதுமாத்திரமல்ல, சட்டத்தை மீறி, விதியை மீறி, 'பார்' நடத்தப்பட்டால், அந்த 'பார்' நடத்தப்பட்ட இடத்திற்கு அருகே, சரகத்திலே உள்ள போலீஸ் ஸ்டேஷன்களில் உள்ள அதிகாரிகளும் நடவடிக்கைக்கு உள்ளாவர் என்றும் (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது. இப்படித்தான் நடவடிக்கை எடுக்க முடிகிறது.

நான் சாராயப் பானைகளை நோக்கித் துப்பாக்கிக் குண்டுகள் பாயும் என்று சொன்னேனே தவிர, சாராய வியாபாரிகளை நோக்கி துப்பாக்கிக் குண்டுகள் பாயும் என்று சொல்லவில்லை. ஏனென்றால், இங்கே நாம் மதுவிலக்குத் திட்டத்திலே ஆர்வமாக





இருக்கிறோம். வேறு சில மாநிலங்களிலே அதைப்பற்றிக் கவலைப்படாமல், மது அங்கெல்லாம் தாராளமாக விநியோகிக்கப்படுகிறது. எனவே, இந்தியாவிலே--'ஏக இந்தியா' என்று சொல்லப்படுகிற இந்தியாவிலே--ஒரு மாநிலத்திலே மது தாராளமாக இருக்கிற அதே சூழ்நிலையில், இங்கே நாம் கள்ளச் சாராயம் விற்றார்கள் என்பதற்காக அவர்களைச் சுட்டுக் கொன்றுவிட முடியாது. பானைகளைத்தான் சுட முடியும். அவர்களைச் சுட முடியாது. ஆனால், அவர்களை எந்த முறையில அளவோடு தண்டிக்க வேண்டுமோ அந்த வகையிலே தண்டிக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. எல்லோரும் ஒத்துழைத்தால் கள்ளச் சாராயத்தைத் தமிழ்நாட்டிலிருந்து நிச்சயமாக ஒழிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எல்லோரும் என்றால், இங்கே இருக்கின்ற எல்லோரும் மாத்திரம் அல்ல, காவல் துறை உட்பட எல்லோரும் ஒத்துழைத்தால் கள்ளச் சாராயத்தை ஒழித்துவிட முடியும். கள்ளச் சாராயத்தினுடைய அடிப்படையிலேதான் காஞ்சிபுரத்திலே இந்தத் தகராறு நடைபெற்று இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் பயன்பட்டது என்ற அளவில் இத்துடன் இதை விட்டுவிடலாம் என்று தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

### (ஆ) உடுமலைப்பேட்டை திருமூர்த்தி அணையிலிருந்து மூன்றாவது மண்டலத்திற்கு உட்பட்ட விவசாய நிலங்களுக்குத் தண்ணீர் விடாமையால் தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளமை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு. உடுமலைப்பேட்டை திருமூர்த்தி அணையிலிருந்து 3-வது மண்டலத்திற்கு உட்பட்ட விவசாய நிலங்களுக்குத் தண்ணீர் விடாமையால் தென்னை மரங்கள் பாதிக்கப்படுவது பற்றி பேரவையில் எழுப்பி அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. செல்வராஜ், திரு வி.பி. சிங்காரவேலு, திரு. எஸ். ராஜு, திரு. ம. சண்முகம், திரு. கே. சுப்பராயன், திரு. எஸ்.எஸ். பொன்முடி ஆகியோர் என்னிடத்தில் ஒரு தீர்மானத்தைக் கொடுத்து இருக்கின்றார்கள். ஆளுங்கட்சி சார்பில் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசுமாறு அழைக்கின்றேன். திரு. டி. செல்வராஜ்.

**திரு. டி. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை தொகுதிக்குட்பட்ட திருமூர்த்தி அணையிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை 3-வது மண்டலத்திற்கு சுமார் 20,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசனத்திற்காக தண்ணீர் விடப்பட்டு வந்தது. இந்த ஆண்டு பருவ மழை தவறியதால், அணையில் போதிய தண்ணீர் இல்லாத காரணத்தால், மூன்றாவது மண்டலத்திற்குப் பாசனத்திற்குத் தண்ணீர் விடப்படவில்லை. இந்தப் பகுதியிலே உள்ள தென்னை மரங்கள், கிணறுகளிலே தண்ணீர் இல்லாத காரணத்தாலும், தண்ணீர் விடப்படாததாலும் கருகுகின்ற நிலையில் உள்ளதால், மூன்றாவது மண்டலத்திற்கு உயிர்த் தண்ணீர் விட்டு, தென்னை மரங்களைக் காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரைச் சுற்றியுள்ள கிராமங்களில், கோடை கடுமையான தாக்குதலைத் தொடுத்து இருக்கின்ற காரணத்தால், பல்வேறு விவசாயக் கிணறுகள் மற்றும் குடிநீர்க் கிணறுகளும் தண்ணீர் இல்லாமல் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பல்வேறு தொகுதிகளில் பொது மக்கள் குடிநீர் இல்லாத காரணத்தால் சாலை மறியல் உட்பட பல்வேறு நடவடிக்கைகளில் இறங்கி வருகிறார்கள். எனவே இந்த அவசர அவசியத்திற்கு மாநில அரசு உடனடியாக திருப்பூரினுடைய தெற்குப் பகுதியில் இருக்கக்கூடிய எல்லா குளம் குட்டைகளுக்கும் பி.ஏ.பி.யிலிருந்து தண்ணீர் விட்டு நிரப்ப முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், உடுமலை வட்டம் திருமூர்த்தி அணையிலிருந்து பரம்பிக்குளம் ஆழியாறு பகுதியிலே தண்ணீர் விடுவது குறித்து பல்வேறு உறுப்பினர்கள் இங்கே விண்ணப்பித்து இருக்கிறார்கள். தங்கள் மூலமாக அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டாம் மண்டல பாசனப் பகுதியான 98,000 ஏக்கரில் சுமார் 20,000 ஏக்கர் பரப்பில் உள்ள தென்னை மரங்களுக்கு உயிர்த் தண்ணீர் விடுவதற்காக 350 மில்லியன் கனஅடி





தண்ணீரும், பல்லடம், திருப்பூர், பொங்கலூர், காங்கேயம், தாராபுரம், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி ஆகிய வட்டங்களிலுள்ள கடுமையான குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க சுமார் 120 குளம் குட்டைகளுக்குத் தண்ணீர் விடுவதற்கு 300 மில்லியன் கனஅடி தண்ணீரும், தாராபுரம் வட்டத்திலுள்ள உப்பார் அணையின் ஆயக்கட்டுப் பகுதியான--6000 ஏக்கரில் பயிர் செய்யப்பட்டுள்ள பயிர்களைக் காப்பாற்றுவதற்காக 280 மில்லியன் கன அடி தண்ணீரும், 3-வது மண்டலப் பாசனப் பகுதியிலுள்ள சுமார் 12,000 ஏக்கர் தென்னை மரங்களுக்கு உயிர் தண்ணீருக்காக 250 மில்லியன் கன அடி தண்ணீரும்--இவைகளுக்காகத் தண்ணீர் விடப்படுகிறபோது, மொத்தம் சேர்த்து 1200 மில்லியன் கன அடி தண்ணீர் திறந்துவிடப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது திருமூர்த்தி அணையிலே உடுமலைப்பேட்டைக்கு குடிநீருக்குப் போக 1000 மில்லியன் கன அடி தண்ணீர்தான் இருக்கிறது. 10-4-1997 முதல் 14-4-1997 வரை சமமட்டக் கால்வாய் மூலம் 240 மில்லியன் கன அடி தண்ணீர் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். ஆகவே 1240 மில்லியன் கன அடி தண்ணீர்--தரப்போவது 1200 மில்லியன் கன அடி தண்ணீர் தந்துவிடுகிறோம். ஒரு குறிப்பைச் சொல்கிறேன். 14-4-1997 முதல் காட்டூர் கனால் ரிப்பேருக்கு எடுத்துக்கொள்ளப்படுகிற காரணத்தால் அதற்கு மேல் தண்ணீர் வராது. ஏனென்றால் அதிகமான 'ஸீபேஜ்' இந்த ஆண்டு ஏற்பட்டு விட்டது. எனவே, இந்தக் குளம் குட்டைகளுக்கு நீங்கள் மகிழத்தக்க வண்ணம் தண்ணீர் திறந்து விடப்படும்.

முற்பகல் 11-10

### (இ) கோமுகி, மணிமுத்தாறு அணைகளின் தண்ணீரை பழைய, புதிய ஆயக்கட்டுகளுக்கு அதிகம் விடுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, கோமுகி அணையிலும் மணிமுத்தார் அணையிலும் பழைய, புதிய ஆயக்கட்டுகளுக்கு மேலும் தண்ணீர் திறந்து விடவேண்டும் என்பது குறித்தும் விவசாயப் பயிர்கள் வாடிக்கொண்டு இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்தும் திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோமுகி அணையிலும், மணிமுத்தாறு அணையிலும் சுமார் 5000 ஏக்கர் நிலங்களில் மறுபயிர் செய்யப்பட்டு வாடிக்கொண்டு இருக்கின்றன. இந்தத் தண்ணீர் எல்லாம் நிறுத்தப்பட்டு இருக்கிறது. ஆகவே, இந்த 2 அணைக்கட்டுகளை நம்பி உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள், வாடிய பயிர்களுக்கு மீண்டும் தண்ணீர் திறந்து விடப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். ஆகவே, விவசாயப் பெருங்குடி மக்களுடைய துயரைத் துடைப்பதற்கும், வாடிய பயிர்களைக் காப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோமுகி அணையிலும், மணிமுத்தாறு அணையிலும் தண்ணீரை பழைய, புதிய ஆயக்கட்டுகளுக்கு திறந்துவிடுவார்களா? திறந்துவிட வேண்டும் எனவும் கேட்டு, அதுபற்றி தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில, சங்கராபுரம் வட்டத்தில் அமைந்து இருக்கும் மணிமுத்தாறு நதி அணையிலிருந்து புதிய, பழைய ஆயக்கட்டுகளுக்கு ஆண்டுதோறும் அக்டோபர் முதல் தேதி முதல் பிப்ரவரி கடைசி வரை, அதாவது 5 மாதங்களுக்கு ஒரு போக சாகுபடிக்கு தண்ணீர் அளிப்பது வழக்கம். அதன்படி 1996-97-ஆம் ஆண்டு 1-10-1996 முதல் 28-2-1997 வரை தண்ணீர் தந்துவிட்டு அணையையும் மூடி விட்டோம். ஆனாலும் விவசாயிகள் கூடுதல் தண்ணீர் கேட்டு விண்ணப்பித்து இருக்கிறார்கள். இவர்களுடைய கோரிக்கையில் கலைஞர் அவர்கள் கனிவுடன் கவனிக்க வேண்டும் என்று கட்டளை இட்டதால், வினாடிக்கு 70 மில்லியன் கனஅடி தண்ணீர் வீதம் 70 நாட்களுக்கு, அதாவது 10-3-1997 முதல் 18-5-1997 வரை தண்ணீர் திறந்துவிட அரசு உத்தரவிட்டு இருக்கிறது.

அதேபோல் விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில், கள்ளக்குறிச்சி வட்டத்தில் அமைந்துள்ள கோமுகி அணையில் இருந்து புதிய, மற்றும் பழைய ஆயக்கட்டு நிலங்களுக்கு பாசனத்திற்கு ஆண்டுதோறும் அக்டோபர் முதல் தேதியில் இருந்து பிப்ரவரி கடைசி தேதி வரை, அதாவது 5 மாதங்களுக்கு ஒரு போக சாகுபடிக்கு தண்ணீர் வழங்க வேண்டும்; அப்படியே தண்ணீர் குறைவின்றி இந்த ஆண்டும் வழங்கிவிட்டோம். ஆனால், மார்ச் முதல் ஜூன் முடிய பழைய ஆயக்கட்டுகளுக்கு இரண்டாம் போக சாகுபடிக்கு தண்ணீர் தர வேண்டும். சட்டப்படி பழைய ஆயக்கட்டுத்தாரர்களுக்கு இரண்டாம் போக சாகுபடிக்கு தண்ணீர் தருவதில் அரசுக்கு எந்தச் சிரமமும் இல்லை. ஆனால் கோமுகி பிரதான கால்வாய் மூலம் பயன்பெறும் புதிய ஆயக்கட்டு விவசாயிகளும் தங்களது முதல் போக சாகுபடிக்கு கூடுதல் நீர் தர வேண்டும் என்று கேட்கிறார்கள். இது சட்டப்படி சாத்தியம் இல்லை. என்றாலும் அறுவடை பாதிக்கக்கூடிய சூழ்நிலை உள்ளதால், மனிதாபிமான அடிப்படையில் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று கவனிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இட்ட கட்டளையை ஏற்று, வினாடிக்கு 70 மில்லியன் கன அடி வீதம் 10 நாட்களுக்கு நீர் வழங்கலாம் என்று அரசு முடிவு எடுத்து இருக்கிறது.





நான் இந்த நேரத்திலே ஒன்றைத் தெரிவிக்கிறேன். இந்த அரசு பொறுப்பு ஏற்றதிலே இருந்து எந்தப் பகுதி விவசாயத்திற்கும் நீரைத் தர முடியாது என்று மறுக்கவில்லை. சட்டப்படி தர முடியா விட்டாலும், மனிதாபிமான அடிப்படையில் பயிர்கள் காய்ந்துவிடக் கூடாது என்று எண்ணி, கூடியமட்டும் எல்லோருக்கும் நீரைத் தந்துகொண்டு இருக்கிறோம். ஆனால், இந்த அரசுக்கு விண்ணப்பிக்காமலேகூட, பல இடங்களில் சாலை மறியலில் ஈடுபடுவதும், கட்டை வண்டி மறியலில் ஈடுபடுவதும், இப்படி பல விவசாயிகள் ஈடுபடுவது விரும்பத்தக்கது அல்ல. எங்களைக் கேட்டு, நாங்கள் மறுத்து, அதற்குப் பிறகு போராட்டத்திற்குப் போனால்கூட அதிலே ஒரு அர்த்தம் உண்டு. எங்களைக் கேட்காமலேயே, 'தண்ணீர் தருவீர்களா இல்லையா' என்று கேட்காமலேயேகூட அரசினுடைய பதிலை எதிர்பார்க்காமல், சாலை மறியலில் ஈடுபடுவது அவ்வளவு நல்லது அல்ல. ஆனால் இதெல்லாம் செய்யப்படுவது, சில பேர் அரசியல் நோக்கத்திலே தூண்டிவிடுகிறார்கள். நான் விவசாயிகளுக்காக தெரிவித்துக்கொள்கிறேன். உங்கள் கோரிக்கைகளைக் கனிவோடு கவனிக்க கலைஞர் அரசு இருக்கிறது. கோரிக்கைகளைத் தெரிவியுங்கள். சில அரசியல்வாதிகளின் கைப்பாவையாக மாறிவிடக்கூடாது என்று விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நான் இந்தப் சபையின் மூலம் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். ஆனால் மிரட்டுவதன் மூலம் இந்த அரசைப் பணியவைத்துவிடலாம் என்று மட்டும் எவரும் கருதக்கூடாது என்ற எச்சரிக்கையையும் நான் விடக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று கூறி அமருகிறேன்.

*முற்பகல் 11-15*

### (ஈ) திருநெல்வேலி-பாளையங்கோட்டை அருகே வி.எம். சத்திரம் துணை மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திருநெல்வேலி-பாளையங்கோட்டை அருகே உள்ள வி.எம். சத்திரத்தில் இருந்த மின்வாரிய உப மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்துக் குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பை திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. இ. கணேசன் மற்றும் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் கொடுத்திருக்கிறார்கள். திரு. தீரன் அவர்கள் தீர்மானத்தைப் படித்தால் போதும்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி-பாளையங்கோட்டைக்கு அருகே உள்ள வி.எம். சத்திரத்தில், மின்வாரிய உப மின்நிலையத்தில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தால் ஏற்பட்ட பதட்டநிலை மற்றும் சுமார் 10 கோடி ரூபாய் மதிப்புள்ள டிரான்ஸ்பார்மர் எரிந்து நாசமானது தொடர்பாக ஏற்பட்ட பதட்டம் ஆகியவை குறித்து மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6-3-1997 அன்று திருநெல்வேலி-பாளையங்கோட்டை அருகேயுள்ள வி.எம். சத்திரத்தில் உள்ள மின்வாரிய துணை மின் நிலையத்திலிருந்த டிரான்ஸ்பார்மர் தீ விபத்தினால் பழுதாகிவிட்டது. பழுதடைந்த டிரான்ஸ்பார்மரின் மதிப்பு சுமார் 15 லட்சம் ரூபாய். இந்த விபத்தால் இரவு 8 மணியிலிருந்து இரவு 11 மணி வரை மின் விநியோகம் தடைப்பட்டது. மின் வினியோகம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மாற்று ஏற்பாடு செய்யப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. மேற்படி பழுதடைந்த டிரான்ஸ்பார்மருக்கு மாற்றாக அதே திறன்கொண்ட டிரான்ஸ்பார்மர் ஒதுக்கீடு செய்யப்பட்டு அது தொடர்பான வேலைகள் முன்னுரிமை அடிப்படையிலே நடைபெற்று வருகின்றன.



## (3) கவன ஈர்ப்பு

### வேலூர்-காட்பாடி சாலையில், பாலாற்றின் குறுக்கே பாலம் இடிந்து, போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளமை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, விதி 55-ன் கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்கு, திரு. சி. ஞானசேகரன் கொண்டுவருவார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேலூர்-காட்பாடி சாலையில் பாலாற்றின் குறுக்கே அமைக்கப்பட்டிருந்த பழைய பாலம் இடிந்து விழுந்து, போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

#### அறிக்கை

மேற்படி கவன ஈர்ப்பில் குறிப்பிட்டுள்ள கடலூர்--சித்தூர் சாலையில் கி.மீ. 192/6-ல் பாலாற்றின் குறுக்கே உள்ள வலுவிழந்த வளைவு பாலம் கடந்த வருடம், ஆகஸ்ட் திங்கள் முதல் தொடர்ந்து பெய்த மழையினாலும், பாலர்ற்றுப் படுகையில் நீர்வருவது அதிகரித்ததின் காரணமாகவும் இடிந்து விழுந்தது. இப்பாலம் 90 ஆண்டுகளுக்கு முன் பிரிட்டிஷ் அரசு காலத்தில் கட்டப்பட்ட 41 கண்களையுடைய செங்கற்களால் ஆன வளைவு பாலம் ஆகும். 1975-ஆம் ஆண்டு இந்தப் பாலம் வலுவிழந்த பாலம் என கணக்கிடப்பட்டு, இந்தப் பாலத்தின் கீழ்ப்புறம் புதிய பாலம் கட்டப்பட்டு போக்குவரத்திற்கு திறந்து விடப்பட்டது. அதற்கு பின்பு மேற்குறிப்பிட்ட பழைய வலுவிழந்த பாலத்தில் இரண்டு சக்கர வண்டிகள் போக்குவரத்து மற்றும் நடைபாதையாக

உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. கடந்த வருடம் 1996 செப்டம்பர் மாதம் 2, 3 மற்றும் 4-ஆம் தேதிகளில் தொடர் மழையினால் பழைய பாலத்தில் 41 கண்களில் 5 கண்களில் (34, 35, 36, 37 மற்றும் 38) விரிசல் ஏற்பட்டது. மேலும் 7-9-1996 பாலாற்றில் அதிக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால், 8-9-1996 அன்று பகல் 2 மணி அளவில் இடிந்து விழுந்து விட்டது. விபத்துக்களை தவிர்க்கும் பொருட்டு உடனடியாக, இப்பழைய பாலத்தில் இருபுறமும் செங்கற்களால் தடுப்புச் சுவர் கட்டப்பட்டு போக்குவரத்து தடை செய்யப்பட்டு விட்டது.

மேற்குறிப்பிட்டவாறு இடிந்து விழுந்து விட்ட பழைய பாலத்திற்கு பதிலாக ஏற்கெனவே புதியதொரு பாலம் 1975-ஆம் ஆண்டில் கட்டப்பட்டு போக்குவரத்திற்கு திறந்து விட்டபடியால் தற்போது போக்குவரத்திற்கு இடையூறு ஏதும் இல்லை. கைவிடப்பட்ட பாலம் என்பதால் பழைய பாலத்தை திரும்பக் கட்டுவதற்கு அவசியம் இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விவர அறிக்கையில் அடாத மழை, போன செப்டம்பர் மாதம் பெய்த காரணத்தாலே, அந்தப் பாலம் இடிந்து விழுந்திருக்கிறது என்ற கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். அந்தக் கருத்தோடு, அதற்கு மேலான காரணம் என்ன என்று சொன்னால், அந்தப் பழைய பாலம் பிரிட்டிஷார் காலத்தில், 90 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. அது கட்டப்பட்ட இடத்தில் இருக்கக்கூடிய மணலை அங்கே இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் எடுத்துவிட்ட காரணத்தால்தான். அதனுடைய ஆதாரம் தளர்ந்து வலுவிழந்து, அந்தப் பாலம் இடிந்து விழுந்திருக்கிறது. அதோடு, 1975-ல் அங்கே புதிய பாலம் ஒன்று கட்டப்பட்டு அது நடைமுறையில் இருந்தாலும்கூட, அங்கேயும் அதுபோல் மணல் எடுக்கப்பட்டு அதுவும் வலுவிழந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் பழைய பாலம் ஓரளவுக்கு உதவிகரமாக இருந்து வந்தது.

விருகம்பட்டு, தலையாரம்பட்டு, தண்டரம் கிருஷ்ணாபுரம், ஜாப்ராபேட்டை, கழிஞ்சூர் மற்றும் விஞ்சூர் போன்ற கிராமங்களிலிருந்து வரக்கூடிய மக்கள் அந்தப் பாலத்தைத்தான் போக்குவரத்திற்குப் பயன்படுத்தி வந்தார்கள். 34, 35, 36, 37 மற்றும்



38 என்ற எண் கொண்ட ஐந்து கண்கள் அங்கே விழுந்து விட்டது. அந்த ஐந்து கண்களையும் நீங்கள் உங்கள் கண்களாய்ப் பாவித்து அதையும் உடனடியாகச் சீர் செய்தால், இன்னொரு பாலம் எங்களுக்குக் கூடுதலாகக் கிடைக்கும். இல்லாவிட்டால் ஒரு புதிய பாலத்தை அமைத்துத் தந்து, காட்பாடிக்கு வேலூரிலிருந்து மக்கள் செல்லும் வகையில் அமைத்துத்தர அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காகப் புதிய பாலம் ஒன்று அங்கே கட்டப்பட்டு, அது செயல்முறையில் இருக்கிறது. அதிலேதான் போக்குவரத்து பெரும்பாலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பழைய பாலத்தை, நடந்து செல்பவர்கள் மட்டும் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதனால் இப்போது பெரிய பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. நிதிநிலை அதிகரிக்கிறபோது, உறுப்பினருடைய கருத்தைப் பரிசீலிக்கலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், உட்காருங்கள். அது எல்லாம் தேவையில்லை. இரண்டு கேள்விகளை ஒரே கேள்வியில் கேட்டுவிட்டீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** சரி.

## 4. வரவு-செலவுத் திட்டம், 1997-98, பொது விவாதம்--தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-98-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். 14 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. ஆகவே 10 நிமிடங்களுக்கு மேல் பேச எந்த உறுப்பினருக்கும் அனுமதி கிடையாது. முதலில் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

பிற்பகல் 11-20

*திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையின்மீது ஒருசில கருத்துக்களைத் தெரிவிக்க எனக்கு அனுமதி கொடுத்ததற்கு மனமுவந்து என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கைக்குப் போவதற்கு முன்னாலே இங்கே எல்லோரும் என்னை மூத்த உறுப்பினர், மூத்த உறுப்பினர் என்று சொல்லி என்னால் கேள்வி கூடக் கேட்க முடியவில்லை. வெளியே என்ன சொல்கிறார்கள் என்றால் நீங்கள் மூத்த உறுப்பினர். கேளுங்கள் என்று போன் மேலே போன் வருகிறது. சென்னையைப் பொறுத்தவரையில் 'எய்ட்ஸ்' நோய் அபாயத்தைப் பற்றி போன் மேலே போன் வந்து கொண்டேயிருந்தது. எனக்குக்கூட எரிச்சலாகப் போய்விட்டது. என்ன சொல்கிறார்கள் என்றால், இரண்டு பேர் ஆட்டோவில் சென்றால், இரண்டு பேர் பைக்கிலே வந்து ஊசி போட்டு விட்டு உனக்கு 'எய்ட்ஸ்' நோய் பரவ ஊசி போட்டிருக்கிறேன், நீ அந்த இடத்திற்கு வந்து விடு என்று சொல்லி மிரட்டி விட்டுச் செல்வதாக எனக்குத் தகவல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சென்னையைப் பொறுத்தவரையில் பல இடங்களில் பட்டப்பகலில் கொலை செய்யப்படுகிறார்கள். இப்படி கொலை நடக்கிறது. பல இடங்களில் திருட்டு நடக்கிறது. நான் 9-ஆம் தேதி இங்கேயிருக்கிற திருமங்கலம் சென்றிருந்தேன். அப்போது 7 மணி இருக்கும். நான் டாக்சியில் உட்கார்ந்திருந்தேன். என்னோடு இன்னொரு அம்மையாரும் உட்கார்ந்திருந்தார்கள். அப்போது ஒருவர் சட்டை இல்லாமல் ஓடி வந்தார். அங்கே பக்கத்தில் போலீஸ் நிலையம் கூட இருக்கிறது. என்னவென்று விசாரிக்கும்போது, அவர்கள் 4, 5 பேர்கள் நின்று பேசிக் கொண்டிருந்தார்களாம். அப்படி பேசிக்கொண்டிருக்கிறபோது 2 பேர் பைக்கிலே வந்து இவரைக் கூப்பிட்டுப் போய் இவர் போட்டிருந்த மோதிரம், கடிகாரம், சங்கிலியை எல்லாம் அவிழ்த்துக்கொண்டு, ஆயிரம் ரூபாயையும் எடுத்துக்கொண்டு, சட்டையைக் கிழித்து விட்டு, ஓடுடா என்று சொல்லிவிட்டு, ஆட்டோவிலே போய் விட்டார்களாம்.



இப்படிப்பட்ட நிலைமை நாட்டிலே வரக்கூடாது. நீங்கள் நல்ல நிலைமையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். சிறப்பான ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மகாத்மா காந்தி ஒருமுறை சொன்னார்கள். "நான் விரும்பும் சுதந்திர இந்தியாவிலே 20 வயதுடைய அழகான மங்கை, தன்னுடைய உடம்பெல்லாம் வைரத்தையும், வைடூரியத்தையும் போட்டுக் கொண்டு, இரவு 12 மணி அளவில் தன்னந்தனியாகப் பயமின்றி செல்ல வேண்டும்", அந்த சுதந்திர இந்தியாவைத்தான் நான் விரும்புகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் ஆனபிறகு இன்றைக்கு....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி அவர்கள் ஒரு பெண் தனியாக நள்ளிரவில் செல்ல வேண்டுமென்றுதான் சொன்னார்கள். வைரத்தையும் வைடூரியத்தையும், போட்டுக் கொண்டு செல்ல வேண்டுமென்று சொன்னதாகத் தெரியவில்லை. *(சிரிப்பு)*

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** தலைவர் அவர்களே, அதாவது அந்த 20 வயது மங்கை, அழகான மங்கை, வைரத்தையும் வைடூரியத்தையும் போட்டுக் கொண்டு போனால்கூட அவர் யாராலும் தீண்டப்படக் கூடாது என்றுதான் மகாத்மா காந்தி அவர்கள் நினைத்தார்கள். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் குறிப்பிட்டு சொன்னதைப்போல வைரத்தையும், வைடூரியத்தையும் அணிந்து வர வேண்டுமென்று சொல்லவில்லை. ஒரு பெண் தனியாக தகுந்த நகையுடன் வர வேண்டுமென்று சொனனார்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** தலைவர் அவர்களே, என்ன சொல்கிறேன் என்றால், நமக்கு நல்ல போலீஸ் அதிகாரிகள் இருக்கிறார்கள். எந்தத் திருட்டையும் கண்டுபிடிக்கக்கூடிய சக்தி வாய்ந்தவர்களை முதல்வர் அவர்கள் கையிலே வைத்திருக்கிறார்கள். ஆகவே அவர்களை வைத்து யார் யார் என்ன தவறு செய்தாலும், அவர்களை உடனடியாகப் பிடித்து, இப்படி மானபங்கப்படுத்தக்கூடிய

அளவிலே, கொலை செய்யக்கூடிய அளவிலே இருக்கக்கூடியவர்களுக்கு, தவறு செய்பவர்களுக்கு ஏன் நாம் தூக்கு தண்டனை வழங்கக்கூடாது? அப்படி இரண்டு இடத்தில் நீங்கள் செய்தீர்களானால் நிச்சயமாக ஒரு நிம்மதியான சூழ்நிலை உருவாகும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தூக்குத் தண்டனையை அரசாங்கமா வழங்க முடியும்?

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டுள்ள இந்த பட்ஜெட்டிலே 30 பொருள்களுக்கு முழுமையாக வரியை ரத்து செய்துள்ளார்கள். 100 பொருள்களுக்கு பாதி வரி விதிக்கப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல, நம்முடைய தந்தை பெரியார் அவர்களுடைய பெயரால் சேலத்தில் ஒரு பல்கலைக் கழகம் ஆரம்பிப்பதற்கு இங்கே அனுமதி அளித்திருக்கிறோம். இன்னொன்று, 5000 பெண்களை காவல் துறையில் நியமனம் செய்வதற்கும், 10,000 பேர்களை சாலைப் பணியாளர்களாக நியமனம் செய்வதற்கும், 1989-90, ஆம் ஆண்டில் நம்மால் கிராம நலப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள் நீக்கப்பட்ட பிறகு, அவர்களில் 35,000 பேர்கள் பணியில் அமரக்கூடிய அளவில் செய்வதற்கும் உதவும் வகையில் இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது. மொத்தமாகப் பார்த்தால், கிட்டத்தட்ட 50 ஆயிரம் குடும்பங்களை வாழ வைக்கிற அளவிலே இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது. ஆகவேதான் தமிழகத்தில் இருக்கிற மக்கள் அனைவரும் இந்த பட்ஜெட்டை வரவேற்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டுகிறார்கள். எனக்கு அடுக்கு மொழியெல்லாம் சொல்லிப் பாராட்டத் தெரியாது. அது தெரிய எனக்கு வாய்ப்பு இல்லை. ஆகவே, நானும் நீங்கள் செய்யக் கூடிய பணி சிறக்க வேண்டுமென்று கூறுவதோடு, உங்களுடைய பணி சிறந்து, இன்னும் பல ஆண்டுக்காலம் வாழ்ந்து, இந்தப் பணியை ஏற்று, நீங்கள் மக்கள் பணியாற்ற வேண்டுமென்று ஆண்டவனைத்தான் நான் பிரார்த்தனை செய்ய முடியும். ஆகவே நீங்கள் இடைக்காலத்தில் இவ்வளவு பணிகளைச் செய்திருந்தும்கூட, பல பிரச்சினைகள் நமக்கு வந்து கொண்டேயிருக்கின்றன. உள்ளாட்சித் துறையில் என்னை போட்டி இல்லாமல் ஒரு சேர்மன் ஆக்கிவிட்டார்கள். அந்தக் கவுன்சிலர்கள் எல்லாம், ஏங்க்கா, என்னக்கா, எங்களுக்கு ஒன்றும் அதிகாரம்



இல்லை என்று சொன்னார்கள். நான் உடனே சொன்னேன். ஏதோ இந்த பட்ஜெட்டிலே கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள், ஆகையினால், நீங்கள் பொறுமையாக இருங்கள் என்று அவர்களிடத்திலே நான் கேட்டுக்கொண்டேன். இருந்தாலும் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையிலே செய்யக்கூடிய நிலைமையில், கேளிக்கை வரியிலேகூட முதலிலே 60 சதவீதம், 70 சதவீதம் கொடுக்கலாம் என்று இருந்ததை. இன்றைக்கு 90 சதவீதம் கொடுக்கலாம் என்று நீங்கள் ஆக்கியிருக்கிறீர்கள். அது பாராட்டக் கூடிய ஒன்று.

முற்பகல் 11-25

அதுமாத்திரம் அல்ல. உள்ளாட்சித் துறைதான் கிராமங்களில் குடிநீர் கொடுப்பது, லைட் வசதி செய்வது, ரோடு வசதி செய்வது, ஆஸ்பத்திரி வசதி தருவது, சத்துணவுக் கூடத்தைப் பார்ப்பது, கட்டிட வசதி செய்வது, ஆகிய இவற்றை எல்லாம் செய்கிறது. அவர்களுக்காக இப்போது 1174 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறீர்கள். அந்தப் பணம் போதாது. எனவே, அந்தப் பணத்தை 1500 கோடி ரூபாயாக ஒதுக்கி, அவர்கள் செய்ய வேண்டிய பணியினை, ஆற்ற வேண்டிய பணியினைச் செய்வதற்கு இந்த அரசு வழிவகை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு எம்.எல்.ஏ.-க்களுக்கு 25 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். பாராளுமன்றத்தில் உள்ள எம்.பி.க்களுக்கு அவர்கள் 1 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இன்றைக்குக்கூட ஒரு பெரிய தலைவர், அதுவும் சங்கரய்யா போன்றவர்கள் எல்லாம் இது தேவைதானா என்று கேட்கிறார்கள். ஏதோ, எம்.எல்.ஏ.விற்குக் கொடுத்து, பொன்னம்மா அக்கா கொண்டு போய், இந்த 25 லட்சத்திலே 2 பங்களாக்கள் வாங்குவதற்குக் கொடுத்த மாதிரி நினைத்து பேசி விட்டார்களோ என்று தெரியவில்லை. பாராளுமன்றத்தில் உள்ள எம்.பி.க்களுக்குக் கொடுக்கின்ற ஒரு கோடி ரூபாயில்--எங்களுடைய அன்புத் தம்பி, சித்தன் அவர்களிடம் கேட்டேன், தம்பி, உங்களுக்கு 6 தொகுதி இருக்கின்றது, 12 யூனியன்கள் இருக்கின்றன. நீங்கள் 8, 8 லட்சம் என்று சொன்னாலும்கூட, இந்த அக்காவிற்கு 10 [illegible] ங்கள் என்று கேட்டு--நிலக்கோட்டை [illegible] அவர்கள் 10 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். [illegible] 5 பள்ளிக்கூடக் கட்டடங்கள்

D
Y211,31 N97
N97.212
216645
சென்னை-600 009

கட்டுவதற்கு 10 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல் வத்தலகுண்டிற்கு 8 லட்சம். அதிலே 4 கட்டிடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. நீங்கள் எம்.எல்.ஏ.விற்கு என்று கொடுக்கின்ற பணத்திலேகூட எங்கெல்லாம் கட்டிடங்கள் இல்லையோ, அங்கெல்லாம் கட்டிடங்கள் கட்டுவதற்கு, கலெக்டர் இடத்திலே மனுவைக் கொடுத்து, அவர்கள் மூலமாக சாங்ஷன் செய்து, அந்தக் கட்டிடத்தைக் கட்ட இருக்கிறோம். இப்படியிருக்கும்போது, ஒரு முதிர்ந்த அரசியல்வாதி எம்.எல்.ஏ.விற்கு என்ன 25 லட்சம், இதெல்லாம் எதற்கு என்று சொல்வது, அவ்வளவு நியாயமாகப் படவில்லை. நான் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களுக்குச் சொல்கிறேன். இது நியாயமில்லை. நமக்காகக் கொடுக்கவில்லை மக்கள் பணி ஆற்றுவதற்காகக் கொடுக்கிறார்கள். (குறுக்கீடு) இல்லை. நான் சங்கரய்யாவைத்தான் சொல்கிறேன். அவர்கள் பெரிய, சிறந்த அரசியல்வாதி. அவர் இந்தப் பணம் எதற்கு என்று சொல்வது நியாயமாக எனக்குத் தெரியவில்லை என்பதற்காக நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமாத்திரம் அல்ல. இன்றைக்கு நீர்பாசனத் துறையை எடுத்துக் கொண்டால்கூட பல்விதமான சூழ்நிலைகள் வந்துகொண்டு இருக்கின்றன. நான் பலமுறை இந்த மன்றத்திலேயே சொல்லியிருக்கிறேன். நான் மீண்டும் தலைவர் அவர்கள் மூலமாக நம்முடைய மதிப்பிற்குரிய முதல்வர் அவர்களுக்கும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 1964-ஆம் ஆண்டு சிறுமலையிலே வெள்ளம் வந்தது. அப்படி வெள்ளம் வந்தபோது, I was M.L.A. from Sholavandan constituency, சோழவந்தானிலே நான் இருக்கும்போது எனக்கு இரவு 11 மணிக்குப் போன் வந்தது. நான் போன் வந்தவுடனே ஓடி வருகிறேன். திருவனந்தபுரம் ரயில் கவிழ்ந்து, அடுத்த நாளைக்கு அடுத்து நாள் அந்தப் பிணங்களை எல்லாம் எடுக்கும்போது 310 பேர்கள் அங்கே இறந்திருந்தார்கள். இப்படி 310 பேர்கள் இறந்தபோது, சிறுமலைத் திட்டத்திற்காக எவ்வளவு எஸ்டிமேட்-மதிப்பீடு-போட்டோம் என்றால் 1 கோடியே 23 லட்சத்திற்கு. எப்போது, 1964-லே. ஆனால், அதன்பிறகு, 1966-67-லே தேர்தல் வந்தது. தேர்தல் வந்தபோது, உங்களிலே பல பேர்கள் ரொம்ப சின்னப் பிள்ளைகளாக இருந்திருப்பீர்கள் அப்போது. அந்த சமயத்தில், 'அய்யய்யோ பொன்னம்மா அரிசி விலை என்னம்மா; சோழவந்தான் பொன்னம்மா சோளம் விலை என்னம்மா;



நிலக்கோட்டை பொன்னம்மா நெல் விலை என்னம்மா; பக்தவச்சலம் அண்ணாச்சி பருப்பு விலை என்னாச்சு; வெங்கட்ராமன் அண்ணாச்சி, வெங்காயம் விலை என்னாச்சு; என்று பாட்டைப் பாடியபோது, எங்களுக்கு இதற்கு மாற்றுச் சொல்லத் தெரியவில்லை. மேலும், 'உடனே ஒரு படி, படிப்படியா 3 படி, இல்லாவிட்டால் முச்சந்தியிலே நிறுத்தி சவுக்காலே அடி' என்று அன்றைக்குப் பேசினார்கள். அது எங்களை ரொம்ப பாதித்துவிட்டது. நான் மேடையேறிப் பேசும்போது, 'என்ன, அவர்கள் ஒரு படி போடுகிறோம் என்று சொல்கிறார்களே, 3 படி போடுகிறோம் என்று சொல்கிறார்களே, நீங்கள் என்ன செய்வீர்கள்' என்று கேட்டார்கள். நான் சொன்னேன். 'ஒருபடி அரிசி விலை 5 ரூபாய்க்கு விற்க வேண்டும். அதை வாங்கக்கூடிய சக்தியை மக்களுக்கு உண்டாக்க வேண்டும். இதுதான காங்கிரஸ் கட்சியினுடைய பொருளாதாரம்' என்று சொன்னேன். இதனால் மிகவும் பாதிப்பு ஏற்பட்டது. நானும் தோற்றுப் போய்விட்டேன். பெருந்தலைவர் காமராஜ் அவர்களும் தோற்றுப் போய்விட்டார்கள். நாங்கள் எல்லாம் வெளியே வந்துவிட்டோம். பிறகு 30 ஆண்டுக்காலமாக திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், திராவிடக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மாறிமாறி ஆட்சி செய்து, இன்றைக்கு நீங்கள ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். இப்போது விலைவாசி ஏறிக்கொண்டேயிருக்கிறது. விலைவாசி ஏறிக் கொண்டிருக்கிற சூழ்நிலையிலேதான், குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. எனவே, இந்தச் சிறுமலை அருவித் திட்டம்..... (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிலக்கோட்டைக்கு அன்றைக்கு கைதட்டினீர்கள். நன்றி சொல்லாமலேயே நீங்கள் பேசிக் கொண்டு இருக்கிறீர்களே.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** நன்றி சொல்கிறேன். அதுவும் சேர்ந்திருக்கிறது. ஆனால் இந்த வருடம் எடுத்துக் கொள்ள வேண்டும் அல்லவா? 67 கோடி என்று பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாம் வட்டிக் கணக்கு பார்க்க வேண்டாம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். அதிலே பெனிபிசியரிஸ 100 பேர்கள் இருந்தால்கூட போதும் என்று சொன்னார்கள். அதை ஒரு மிகப் பெரிய வேதவாக்காக நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். ஆகையினாலே, இந்த நடப்பாண்டிலே -நீங்கள் ஒரே ஆண்டிலேகூட முடிக்கலாம்;

அப்படிக்கூட முடிக்க வேண்டாம் - ஆனால், இதை 5 ஆண்டுகளிலேயாவது முடிப்பதற்கான முயற்சியை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மிகப் பணிவன்போடு எங்களுடைய ஏழைத் தொகுதி மக்களின் சார்பிலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி Delay is always dangerous. நாம் குடிதண்ணீர் கொடுக்கிறோம். சென்றமுறை நான் பேசினேன். வத்தலக்குண்டிற்கு குடிநீர் கொடுப்பதற்கு பேரணையிலிருந்து தண்ணீர் கொண்டு போக வேண்டும்: அதிலே கிணறு போட்டு தண்ணீர் கொண்டு போவதற்கு 2 கோடியே 20 லட்சம் ரூபாய்தான் சாங்ஷன் செய்து ஒதுக்கினோம். ஆனால் இன்றைக்கு அது எவ்வளவு ஆகிறது என்று பார்த்தால் ரூ.3.35 கோடி. அந்த அளவிற்கு அதற்கு மதிப்பீடு தயார் செய்து அனுப்பியிருக்கிறார்கள். 'டிலே செய்ய டிலே செய்ய' - காலதாமதப்படுத்த. காலதாமதப்படுத்த. அதற்கு ஒதுக்கப்பட்ட பணம் போதாமல், அதிகப்படியான தொகை தேவைப்படுகின்றது. ஆகையால் தயவுசெய்து இந்த நடப்பாண்டிலே எந்த ஊராக இருந்தாலும் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும்.

முற்பகல் 11-30

மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் சொன்னார்கள். போராட்டம், பஸ் மறியல் ஆகியவற்றை நான் கடுமையாக எதிர்ப்பவள். என்னுடைய தொகுதியில் குறும்பபட்டி என்ற ஊர் இருக்கிறது. அந்த குறும்பபட்டியில் இரண்டு கிணறுகள் இருக்கின்றன. அங்கே இரண்டு ஜாதி மக்கள் இருக்கிறார்கள். குடியானவ மக்கள் இருக்கிறார்கள். அரிஜன மக்கள் இருக்கிறார்கள். இந்த இரண்டு ஜாதிக்கும் இரண்டு குடிநீர் கிணறுகள் இருக்கின்றன. நான்கு போர் போட்டுக் கொடுத்திருக்கிறோம். இந்த 4 போரிலே ஒன்றில் கொஞ்சம் தண்ணீர் வருகிறது. மீதியுள்ள மூன்று போரில் தண்ணீர் நிறைய வருகிறது. அவர்கள் நான் அங்கு இருக்கும்போதெல்லாம் போராட்டம் நடத்துவதில்லை. நான் அங்கேயிருந்து சென்னைக்கு வந்தவுடனே போராட்டம் செய்கிறார்கள். நான் இருந்தால் உடனே அரெஸ்ட் பண்ணச் சொல்லியிருப்பேன். நான் பயப்படுவது இல்லை. ஏனென்றால் மூன்று போரிலே நல்ல தண்ணீர் கிடைக்கிறது. மூன்று போரிலும் நல்ல தண்ணீர் கிடைத்து. கிணற்றிலே தண்ணீர் இருந்தும் அவர்கள் போராட்டம்



நடத்துவார்களேயானால், அது மிகவும் கொடூரமான ஒரு செய்கை. அனாவசியமாக யாராவது போராட்டம் நடத்துவார்களென்றால் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். நான் ஒரு டவுன் பஸ்ஸில், உதாரணமாக நான் ஒரு விழாவிற்குப் போகிறேன், அல்லது ஒரு ஆஸ்பத்திரிக்குப் போகிறேன். அப்படிப் போகும்போது, நான் அந்த பஸ்ஸிலே வரும்போது அப்போது அந்த பஸ்ஸை மறித்து விடுவார்களேயானால், அது மிகப் பெரிய கொடூரமான செய்கை. அனாவசியமாக பஸ் மறியல் செய்பவர்களை, போராட்டம் நடத்துபவர்களை, உடனடியாக எந்தவித விசாரணையும் இன்றி உள்ளே பிடித்துப் போட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். இன்னும் இரண்டு நிமிடத்திலே தொகுதியைப் பற்றி சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது வரைக்கும் என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள்? 11-30க்குள் முடித்துவிட வேண்டுமென்று சொன்னேன் இல்லையா? இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** இன்னும் இரண்டு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். நான் ஏற்கெனவே சொன்னதுபோல என் தொகுயில் பெரிய ஓடைத் திட்டத்திற்கு என்று ரூ.45 லட்சத்திற்கு சாங்ஷன் செய்யப்பட்டது. அதை இன்னும் எடுக்கவில்லை. ஓணான்ஊத்து என்ற சிறு திட்டம், ரூ.6 இலட்சத்திற்கு சாங்ஷன் ஆகி. அதில் இன்னும் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. (குறுக்கீடு) அதெல்லாம் பற்றி உங்களுக்குத் தெரியாது. சார். நீங்கள் விவசாயி அல்ல. நான் விவசாயி (சிரிப்பு) நான் விவசாயி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரை 'சார்' என்று கூப்பிடுகிறீர்கள்?

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** தம்பியை. பொதுப்பணித் துறை அமைச்சரை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த தம்பி, சார் எல்லாம் வெளியிலே வைத்துக்கொள்ளுங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** பொதுப்பணித் துறை அமைச்சரிடம் நான் இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்தத் தண்ணீர் இல்லாத காரணாத்தினாலேதான் நான் எல்லாம் ஒரு பெரிய விவசாயியாக இருந்தாலும்கூட, 4, 5 கிணறுகள் இருந்தும்கூட, இன்னும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருந்து கொண்டிருக்கிறேன். அதற்குக் காரணம் என்ன? எங்கெங்கெல்லாம் தண்ணீரைத் தேக்க முடியுமோ, அங்கெல்லாம் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கான ஒரு முயற்சியினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இவ்வளவு கொடூரமான நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. ஆகையால் இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவதற்கு நாம் எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும்.

குடிநீருக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். குடிநீருக்கு முன்னுரிமை கொடுத்து, இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து எல்.எம். பாங்க்-நில அடமான வங்கி. அங்கேயெல்லாம் கடன் வாங்கப் போகிறோம். வத்தலகுண்டு பிரச்சினை பற்றி அமைச்சருக்குத் தெரியும். என் தம்பி அமைச்சருக்கு - தம்பி என்று சொல்லக் கூடாது என்பதை மறந்துவிட்டேன் - மாண்புமிகு அமைச்சருக்கு தெரியும். வத்தலகுண்டு யூனியனில் இருப்பவர்கள் எல்.எம். பாங்கில் கடன் வேண்டுமென்றால், அவர்கள் கொடைக்கானலுக்குச் செல்ல வேண்டும். கொடுமையில்லையா இது? தலைவர் அவர்களே, மிகப் பெரிய கொடுமை. நிலக்கோட்டையில் உள்ளவர் எல்.எம். பாங்கில் கடன் வாங்க வேண்டுமென்றால், அந்த நிலத்தைக் காட்டி இந்த நிலத்திற்குக் கடன் வேண்டுமென்று கேட்க வேண்டுமென்றால் அங்கேயிருந்து திண்டுக்கல் செல்ல வேண்டும், இப்படிப்பட்ட ஒரு நிலைமை. ஏற்கெனவே வத்தலகுண்டும், சோழவந்தானும் ஒரே தொகுதியாக இருக்கும்போது, சோழவந்தானில் ஒரு எல்.எம். பாங்க் இருந்தது. அலங்காநல்லூரில் ஒரு எல்.எம். பாங்க் இருந்தது. அப்போது அந்த இரண்டும் சேர்ந்து இருந்தது. இன்றைக்கு இரண்டும் பிரிந்து மதுரை ஜில்லாவிற்குப் போய்விட்ட காரணத்தால், எங்களுக்கு வத்தலகுண்டில் ஒரு எல்.எம். பாங்க்கை உடனடியாக அமைத்துக் கொடுப்பதற்கான ஒரு ஏற்பாட்டை மாண்புமிகு முதல்வர் அவர்கள்



செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஒன்றே ஒன்று மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன்.

அடுத்து சிறுமலை குறித்து என்னுடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு திண்டுக்கல் உறுப்பினர் மணிமாறன் அவர்கள் அழகாகவும், நன்றாகவும் பேசினார்கள். இப்போது சிறுமலையிலே தனியாரிடத்திலே உள்ள காய்ந்த விறகுகளை, அரசாங்கத்திலே பர்மிஷன் வாங்கி வெட்டுபவர்கள் அதைக் கிரயத்திற்கு வாங்கி, அதை வெட்டிவிட்டார்கள். வெட்டிய பிறகு நம்முடைய மதிப்பிற்குரிய ஃபாரஸ்ட் இலாக்கா அமைச்சரவர்கள் அந்த விறகை எடுக்கக் கூடாது என்ற உத்தரவைப் போட்டுவிட்டார்கள். அந்த விறகை எடுக்காமல் அது அப்படியே அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது; 6, 7 மாதங்களாக. அந்த விறகு அப்படியே இருந்தால் நமக்கு வருகிற வரியும் வராது. எவன் வாங்கினானோ அவனுக்கும் ஒன்றும் பயன் இல்லாமல் போய்விடும். யார் அந்த மரத்தைக் கொடுத்தார்களோ அவர்களுக்கும் ஒன்றும் இல்லாமல் போய்விடும். ஏனென்றால் காய்ந்த அந்த விறகு ஒன்றுமில்லாமல் போய்விடும். ஆகவே தயவு செய்து மாண்புமிகு முதல்வர் அவர்களோ, அல்லது மற்ற அமைச்சர்களோ நேரடியாகச் சென்று பார்வையிட்டுக்கூட, அதில் உடனடியாக நடவடிக்கை எடுத்து, ஏற்கெனவே பர்மிஷன் வாங்கி வெட்டிய மரங்களை, உடனுக்குடன் அவர்கள் எடுத்துச்செல்வதற்கு ஒரு அனுமதி வழங்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் மிக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-35*

அது மாத்திரம் அல்ல, வெள்ளத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகின்றேன். ஏனென்றால் நான் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றேன் சார். வருசை நாட்டில் பெய்கிற, உங்கள் ஊர்ப்பக்கம் பெய்கிற மழைத் தண்ணீர் வந்தால், நிலக்கோட்டைத் தொகுதி முழுவதும் பாதிக்கப்படுகிறது. நிலக்கோட்டைத் தொகுதி முழுவதும் பாதிக்கப்பட்டு, அந்தக் கரை உடைந்து, தண்ணீர் வயலுக்குள்ளே விழுந்து, மணல் மேவி நிலத்தை நிரப்பி விடுகிறது. பாதிக்கப்பட்ட நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு 500 ரூபாய் கொடுக்கிறோம். மணலாக அடித்துக் கொண்டு போகக் கூடிய அந்த நிலங்களிலே, அந்த நிலத்தினுடைய பயிரும் போய்,

அந்த மணல் அடித்து இருக்கின்ற நிலத்திற்கு, அந்த மணலை ரிமூவ் பண்ணுவதற்கு, அந்த மணலை அள்ளுவதற்கு நாம் 500 ரூபாய் கொடுக்கிறோம். ஆனால், 500 ரூபாய் கொடுத்தாலும் அள்ள முடியவில்லை. 5,000 ரூபாய் கொடுத்தால்கூட ஒரு ஏக்கர் நிலத்தின் மணலை அள்ள முடியவில்லை. ஆகையினாலே, நிலக்கோட்டைத் தொகுதியில், அதாவது குன்னுவாரன் கோட்டையிலிருந்து பேரணி வரைக்கும் தடுப்புச் சுவர் கட்ட வேண்டும். அதற்குக்கூட 1 கோடியே 30 லட்ச ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்து இங்கே அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், அந்தத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு முயற்சியைச் செய்வார்களேயானால், காலம் எல்லாம் நாங்கள் நன்றியோடு இருப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையினாலே, இந்த வேலைகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று ரொம்ப அன்போடும், பணிவோடும் நான் கேட்டுக்கொள்கிறேன். எல்.எம். பேங்க் சொல்லியாகிவிட்டதா? அப்புறம்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாம் சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இப்போது மாண்புமிகு கலைஞர் அவர்கள் செய்ததற்கே நீங்கள் காலம் எல்லாம் நன்றியோடு இருக்க வேண்டும். ஏனென்றால், உங்கள் மாவட்டத்திலே இதுவரையிலே கட்டப்பட்டிருக்கின்ற எல்லா அணைகளும் பாலாறு, புரந்தலாறு, பரம்பலாறு, மருதாநதி, வராமநதி, அதற்கு அப்புறம் குதிரையாறு மற்றும் குடகனாறு ஆகிய எல்லா அணைகளையும் கட்டியவர் அவர்தான். இன்னும் மூன்று இருக்கிறது. அதைக் கட்டப்போகிறவரும் அவர்தான். ஆகையினாலே, இதற்கே காலம் எல்லாம் நீங்கள் நன்றியோடு இருக்க வேண்டும். இனிமேல் இருந்தால் 'போனஸ்' ஆகிவிடும். (சிரிப்பு)

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** அது காங்கிரஸ்தான் செய்தது. அது எனக்கு இல்லை. இன்னொரு திட்டம் கிராம.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் இந்த அம்மா பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்துக் கொண்டேயிருக்கிறார்கள். நான் உட்காரச் சொல்லிக் கொண்டேயிருக்கிறேன். நீங்கள் என்னவோ பேசுகிறீர்கள். அவர்களும் நேரம் எடுத்துக் கொள்கிறார்கள்.



**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரில் 234 தொகுதிகளிலும் 234 கிராமங்களை எடுத்து, அதற்கு வேண்டிய அத்தனை வசதிகளையும் செய்து கொடுக்கப்போவதாக குறிப்பிலே இருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். அதே நேரத்தில், இந்த நாட்டினுடைய விடுதலைக்காகப் பாடுபட்ட, நாட்டிற்கு விடுதலை வாங்கிக் கொடுத்து, உங்களையும், என்னையும் இந்த ஆசனத்தில் அமர வைத்தானே ஒரு தலைவன், தென்கோடியிலே பிறந்த ஒரு தலைவன், கறைபடாத கரம் கொண்ட தலைவன், காமராஜர் அவர்களுடைய பெயரிலும் வசதிகளைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு தொகுதியிலும் இரண்டு கிராமங்களை எடுங்கள். ஒரு கிராமம் எடுப்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால், இன்னொரு கிராமத்தையும் எடுத்து, தலைவர் காமராஜரை மறந்து விடாமல் அவர் பெயரைச் சூட்டுங்கள். அவர் உட்கார்ந்த சீட்டில் முதல்வர் அவர்கள் அமர்ந்து இருக்கிறார்கள். அவர்கள் செய்த தியாகத்திற்காக இரண்டு கிராமங்களை எடுத்து, ஒன்றிற்கு அண்ணாவின் பெயரையும், இன்னொன்றுக்கு தலைவர் காமராஜர் அவர்களுடைய பெயரையும் வைத்து இந்த வேலைகளை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு, நேரம் கொடுத்ததற்காக உங்களுக்கு மனப்பூர்வமாக நன்றி கூறி, முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்ததாக, திரு. சி.டி. தண்டபாணி.

***திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து, எந்த லட்சியத்திற்காக பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறேன் என்பதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய உரையினுடைய கடைசிப் பகுதியிலே சுட்டிக்காட்டி, அந்த அடிப்படையிலே இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கை தயார் செய்யப்பட்டு இருக்கிறது. சாதாரண, ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள், உழைக்கின்ற வர்க்கம், மகளிர், இளைஞர் என்ற பல்வேறு வகையினருக்கும் பயன்படுகின்ற வகையிலே, இந்த நிதிநிலை அறிக்கை தயார் செய்யப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மகளிர் மேம்பாடு என்ற வகையில் யாரும் எண்ணிப் பார்க்காத அளவுக்கு சிறப்பாகத் திட்டங்கள் இதிலே தீட்டப்பட்டிருக்கின்றன. இந்த நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் படிக்கின்ற நேரத்தில் உலகத்திலே இருக்கக்கூடிய அரசியல்வாதிகள், பொருளாதார நிபுணர்கள், தமிழ்ச் சமுதாயம், அத்துணைப் பேரும் காண்கின்ற வகையில் Cyber Globe India Limited என்கின்ற அந்த நிறுவனம் தலைவருடைய பேச்சை ஒளிபரப்பியது மட்டும் அல்லாமல், நம்முடைய இந்திய தூர்தர்ஷனும் அதை ஒளிபரப்பி இருக்கிறது. உலகம் பூராவும் அவருடைய கருத்துக்களைக் கேட்டு, பெருமை சேர்க்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது மட்டுமல்லாமல் அந்தப் பெருமை தமிழகத்திற்கு-நமக்கும் சேரும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இங்கே இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இன்றைக்கு அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய கருத்துக்கள் பெரும்பாலும் கிராமத்தினுடைய பொருளாதாரததை மேம்படுத்த வேண்டும் என்று கூறிய மகாத்மா காந்தி அவர்களுடைய கருத்துக்களும். சமுதாய சீர்திருத்தம் முழுமையாக நாட்டில் ஏற்பட வேண்டும் என்கின்ற கருத்தைச் சொல்லிய நம்முடைய தந்தை பெரியாருடைய கருத்துக்களும், அரசியலும், பொருளாதாரம் சமுதாயம் ஒன்றாக இணைந்து ஒரு சிறப்பான இடத்தை தமிழகம் பெற வேண்டும் என்ற கருத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று தனி இடம் இந்திய துணைக் கண்டத்திலே வேண்டும் என்று சொன்ன டாக்டர் அம்பேத்கர் அவர்கள் கருத்துக்களும் இன்றைக்கு இதிலே அடங்கியிருக்கின்றன.

*முற்பகல் 11.40*

இந்தியாவிலே இன்றைக்கு இரண்டு வகையான வரவு-செலவுத் திட்டங்கள் போடப்பட்டு அதுவும் இரண்டு தமிழர்களாலே போடப்படடு பாராட்டப்பட்டிருக்கிறது. இங்கே நம்முடைய தலைவர் அவர்கள் இந்த வரவு-செலவுத் திட்டத்தை தாக்கல் செய்திருப்பதை அத்தனை பேருமே இன்றைக்குப் பாராட்டியிருக்கிறார்கள்; ஒரு சிலரைத் தவிர. ஒரு காலத்திலே திரை உலகிலே பியூட்டி குயினாக இருந்தவர்கள் அரசியலிலே பூடி குயினாக மாறியதை நம்மாலே பார்க்க முடிகிறது. அவர்கள் ஒருவரைத்தவிர அத்தனை பேருமே இன்றைக்கு இதைப் பாராட்டி இருக்கிறார்கள். நம்முடைய மத்திய சர்க்காருடைய வரவு-செலவுத்



திட்டத்தை பொறுத்தவரையிலேகூட திரு. சிதம்பரம் அவர்கள் பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறார். 1950-ஆம் ஆண்டில் ஜெர்மன் நாட்டிலே கொண்டுவரப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்கள், அமெரிக்காவிலே ஜனாதிபதி ரீகன் அவர்கள் கொண்டு வந்த பொருளாதாரச் சீர்திருத்தங்கள், தாட்சர் அவர்கள் இங்கிலாந்திலே கொண்டு வந்த பொருளாதாரச் சீர்திருத்தங்கள், சிங்கப்பூரிலே அந்த பிரதமர் கொண்டு வந்த சீர்திருத்தங்கள் அத்தனையும் அதிலே அடங்கியிருப்பதை நம்மாலே பார்க்க முடிகிறது. ஆனால் நம்முடைய தமிழகத்தினுடைய வரவு-செலவு திட்டத்தை பொறுத்தவரையில் என்னதான் ஒரு மாநில சர்க்கார் பல்வேறு காரியங்களைச் செய்தாலும்கூட இன்றைக்கு மாநில, மத்திய அரசினுடைய நிதி ஆதாரங்கள் என்பது ஒன்றையொன்று இணைந்து இருப்பதை நம்மாலே பார்க்க முடிகிறது. மாநில அரசுக்கு அதிகப்படியான தொகையை இந்த முறை நம்முடைய மத்திய சர்க்கார் வழங்கியிருந்தாலும்கூட மொத்த வருமானத்தில் வரக்கூடிய நேரடியான வரியில்-டைரக்ட் டாக்ஸில்-14.7% கொடுத்தாலும், அது 16.5% கொடுக்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால் அதே நேரத்தில் நம்முடைய தலைவர் முதல்வர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல, நிதி ஆதாரங்களைப் பொறுத்தவரையில் மாநில அரசுகளுக்கு மத்திய சர்க்கார் வசூல் செய்கின்ற அனைத்து நிதியிலேயும் அவர்கள் கொடுக்கப்பட வேண்டிய முழுத் தொகையையும் தரப்பட வேண்டும் என்று குறிப்பிட்டதே மொத்த வருமானத்தில் கிட்டத்தட்ட 29% மாநிலங்களுக்குக் கொடுத்தாலொழிய மாநிலங்களுடைய தேவைகள் நிச்சயமாக பூர்த்தியாகாத அளவுக்குத்தான் என்றைக்கும் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்றைக்கும் எடுத்துச் சொல்வதைப்போல் இன்றும் எதிர்காலத்தில் நம்முடைய கருத்துக்கள் மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் சட்டம் 12-வது பகுதியிலே இருக்கக்கூடிய கிட்டத்தட்ட 29 பிரிவுகள் முழுமையாக ஆராயப்பட்டு மாநில சர்க்கார்களுக்கு உரிய பங்கை மத்திய சர்க்கார் கொடுப்பதற்கு எதிர்காலத்திலே மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த மன்றத்தின் சார்பாக நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கக்கூடிய ஒரே ஒரு சங்கடம் லிபரலைசேஷன், குளோபலைசேஷன் என்கின்ற இந்தக் கருத்துக்கள் நாட்டிலே பரவி வருகின்ற காரணத்தினால் மத்திய சர்க்காருடைய தொழில்கள் எந்த மாநிலத்திற்கும் இனிமேல் வராது என்பதுதான்

அர்த்தம். ஆகவே, அந்த அந்த மாநில அரசுகள் தங்களுடைய சக்திக்கு ஏற்ப தொழில்களைத் துவங்கி வேலைவாய்ப்பை உண்டாக்க வேண்டுமென்ற ஒரு முறை இன்றைக்கு வந்து விட்டதற்குப் பின்னால் நிச்சயமாக மாநில அரசுகளுக்கு எந்த அளவுக்கு அவர்களுக்கு உதவி செய்ய முடியும் என்பதை நம்முடைய மத்திய அரசு பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-45

கடந்த நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய தலைவர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்குப் பின்னால் பல்வேறு திட்டங்களை இந்தப் பகுதிக்கு, நம்முடைய தமிழகத்துக்கு அறிவித்து இருக்கிறார்கள். வேலைவாய்ப்புத் திட்டங்கள் ஆனாலும், அதேபோல் தொழில் முன்னேற்றம் என்றாலும் இவைகளை எல்லாம் அதிலே அறிவித்து இருக்கிறார்கள். அந்தத் திட்டங்கள் அத்தனையும் தொடர்ந்து இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வழக்கமாகச் சொல்லுவது உண்டு. This year's Budget is last year's Budget என்று சொல்லுவார்கள். ஆகவே, இந்த வருடம் போடப்பட்டிருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கை என்பது கடந்த ஆண்டில் சொல்லப்பட்ட கருத்துக்கள், செலவுகள் அத்தனையையும் சேர்த்து போடப்பட்டிருந்தாலும்கூட, தொடர்ந்து அந்தப் பணிகளை இங்கே செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நம்மால் பார்க்க முடிகிறது.

இந்த நிதி ஆதாரத்தைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 2 முறை வெள்ளம் வந்தது, தென் மாநிலங்களில் வறட்சி ஏற்பட்டது. இத்தனைக்கும் பணம் ஒதுக்கிய பின்னால் இங்கே உள்ளாட்சித் துறையிலிருந்து பல்வேறு துறைகளுக்கு, கல்வி உட்பட ஒதுக்கப்பட்டு இருக்கக்கூடிய தொகை கிட்டத்தட்ட 8300 கோடி ரூபாய்க்கு மேல் இன்றைக்கு நம்முடைய அரசு ஒதுக்கியிருக்கிறது. எதிர்காலத்தில் புதிய திட்டங்களுக்கு 7200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தாலும்கூட, ஏற்பட்டு இருக்கக்கூடிய பற்றாக்குறை மிக குறைவு. இன்னும் சொல்லப்போனால் கிட்டத்தட்ட 3 சதவீதத்திற்குக் கீழேதான் இன்றைக்கு பற்றாக்குறை என்று ஏற்பட்டிருக்கிறது. 328.38 கோடி ரூபாய்தான் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இன்னும் எதிர்காலத்தில் அப்படிப்பட்ட ஒரு நிலை இருந்தாலும்கூட, ஒரு பற்றாக்குறை இருந்தாலும்கூட, அதை சரி செய்யக்கூடிய அளவுக்கு இங்கே ஆட்சிப் பொறுப்பை



நம்முடைய தலைவர் அவர்கள் நடத்துவார்கள் என்ற உதாரணத்தை நாம் பார்த்தோம். போனமுறை 1996-97-ஆம் ஆண்டில் 334.89 கோடி ரூபாய் இங்கே பற்றாக்குறை இருந்தது. ஆனால் திருத்தப்பட்ட மதிப்பீடு 156.22 கோடி என்று இருந்தது. கடந்த காலத்தில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் நீங்கள் பார்த்தால் பற்றாக்குறை என்பது பல சதவீதங்களாக இருப்பதை நம்மால் பார்க்க முடியும். 1991-92-ஆம் ஆண்டில் அந்த ஆட்சியில் ஏற்பட்ட பற்றாக்குறை 12.57 சதவீதம்; 1992-93-ஆம் ஆண்டில் 11.15 சதவீதம்; 1993-94-ஆம் ஆண்டில் 15.79 சதவீதம், 1994-95-ஆம் ஆண்டில் 13.64 சதவீதம். அதே போல் 1995-96-ஆம் ஆண்டில் 9.33 சதவீதம் என்று இப்படி கடந்த காலத்தில் போடப்பட்ட இந்தப் பற்றாக்குறை பட்ஜெட்டுகள் தொடர்ந்து ஒரு சர்க்காரைப் பாதிக்கும் என்று இருந்தாலும்கூட, அவைகளை எல்லாம் மீறி இன்றைக்கு ஒரு புதிய நிலையை உண்டாக்கியிருப்பது உள்ளபடியே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திறமையையும், ஆற்றலையும் இன்றைக்கு எடுத்துக் காட்டுகிறது.

அதேபோல் இன்றைக்கு இங்கே போடப்பட்டு இருக்கக்கூடிய இந்த வரவு-செலவுத் திட்டத்தில் எங்களுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் சில திட்டங்களை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருப்பதற்காக கோவை மாநகர மக்கள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கோவை மாநகருக்கு இடையே செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் ஒரு புற வழிச் சாலை அமைக்க 78 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதற்காகவும், கோவையில் ஒரு கணினி தகவல் சாதனப் பூங்கா ஏற்படுத்த நிதி ஒதுக்கீடு செய்து இருப்பதற்காகவும் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11.50

அது மட்டுமல்லாமல், "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" என்ற ஒரு திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தொகுதியிலேயும் ஒரு கிராமத்தை எடுத்து, அந்தக் கிராமத்தில் அனைத்து வசதிகளும் செய்து தருவதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், எங்களைப் போன்று நகரத்திலேயிருந்து வரக்கூடியவர்களுடைய நிலை என்ன என்று தெரியவில்லை. உதாரணத்திற்குச் சொல்லப்போனால், கோவை மாநகரத்திலே இருக்கக்கூடிய வட்டங்கள்-பலவட்டங்கள்-

கிராமத்தைவிட மோசமாக இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களையும் இந்தத் திட்டத்திலே இணைத்து அவைகள் மேம்பாட்டுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, கோவை நகரிலே 40,000-க்கும் மேற்பட்ட தங்கம், வெள்ளி நகைகளைச் செய்யக்கூடிய தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு முறையான ஒரு பயிற்சி இருக்குமேயானால், அந்த நகைகளைச் செய்து அவைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு வாய்ப்பு இருக்கும். பம்பாய் நகரத்திலே அப்படியொரு பயிற்சிக்கூடம் இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு பயிற்சிக் கூடத்தை, கோவை மாநகரில், குறிப்பாக, மேற்கு சட்டமன்றத் தொகுதியிலே ஏற்படுத்துவதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

கோயம்புத்தூரிலே இருக்கக்கூடிய அரசு மருத்துவமனை நூறு ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்ட மருத்துவமனை. அவ்வளவு பெரிய நகரத்திற்கு ஒரேயொரு அரசு மருத்துவமனைதான் இருக்கின்றது. எனவே, இன்னொரு புதிய மருத்துவமனையை மேற்குப் பகுதியிலே கட்டுவதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்களும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களும் ஆதரவு தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

கோவை மாநகரத்திலேயும், கோவை மாவட்டத்திலேயும் கிட்டத்தட்ட 13 பஞ்சாலைகள் இன்றைக்கு மூடிக்கிடக்கின்றன. இந்த 13 பஞ்சாலைகளும் மூடிக்கிடப்பது மட்டுமல்லாமல், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இதிலே வேலையிழந்து, வறுமையிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தப் பஞ்சாலைகளைத் திறப்பதற்கு ஏதாவது ஒருவகையிலே உதவி செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

நம்முடைய நண்பர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஒரேயொரு கருத்தை மட்டும் சொல்லி என் உரையை முடித்துக்கொள்ள ஆசைப்படுகின்றேன். விலைவாசியைப் பற்றி இங்கே குறிப்பிடப்பட்டது. விலைவாசி உயரக்கூடாது என்கின்ற ஒரேயொரு காரணத்திற்காக நம்முடைய தலைவரவர்கள் இன்றைக்கு இருக்கக்கூடிய அரிசி விலையைக்கூட அதிகமாக உயர்த்தாமல், விலைவாசியைக் குறைக்கின்ற அளவிற்கு, மத்திய சர்க்கார்



உயர்த்தினாலும், இன்றைக்கு அதைக் குறைத்துத்தான் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அகில இந்திய அளவிலே நாம் பார்ப்போமேயானால், எல்லாப் பொருட்களினுடைய விலையும் இன்றைக்கு உயர்ந்திருக்கின்றன. எரிபொருளினுடைய விலை கடந்த ஆண்டு மட்டும் 17.4 சதவீதம் விலை உயர்ந்திருக்கிறது. நிலக்கரியினுடைய விலை 12 சதவீதம் உயர்ந்திருக்கிறது. உரத்தினுடைய விலை 10 சதவீதம் உயர்ந்திருக்கிறது. 30 அத்தியாவசியப் பொருட்களினுடைய விலை கிட்டத்தட்ட 12.4 சதவீதம் அகில இந்திய அளவிலே உயர்ந்திருக்கிறது. ஆக, இப்படியொரு சூழ்நிலை அகில இந்திய அளவிலே இருக்கின்றபொழுது, தமிழ்நாட்டிலே மட்டும் விலை குறையும் என்று சொன்னால்கூட மிகவும் கவலை எடுத்து, அக்கறை எடுத்துக்கொண்டு, விலையைக் குறைப்பதற்கு அத்தனை நடவடிக்கைகளையும் எடுத்தாலும்கூட, அகில இந்தியாவினுடைய பொருளாதாரத் தாக்கம் தமிழ்நாட்டையும் இன்றைக்கு அலைக் கழித்துக் கொண்டிருக்கிறது என்கின்ற உண்மையையும் நாம் இந்த நேரத்திலே மறந்து விடலாகாது. ஆக, அப்படிப்பட்ட சூழ்நிலையில் இதற்கு ஏதாவது ஒரு வழி கண்டு பிடிக்க வேண்டும். இங்கிலாந்து நாட்டிலே இருப்பதைப்போல, 'பிரைசஸ் கமிஷன்' என்று சொல்லி, விலைக் கட்டுப்பாடுக் குழு என்று அகில இந்திய அளவிலே இல்லாவிட்டாலும்கூட இன்றைக்குத் தமிழ்நாட்டிலேயாவது கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

கடைசியாக ஒன்றே ஒன்று. மத்திய சர்க்கார் இப்பொழுது இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியைத் தனியாருக்குத் தரலாம், வெளி நாட்டிற்குத் தரலாம் என்று அறிவித்திருக்கின்றார்கள். நம்முடைய மாநில சர்க்காரே, இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி துவங்குவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். அப்படி நாம் இங்கே துவங்குவோமேயானால், மாதச் சம்பளம் வாங்கக் கூடியவர்கள், கூலி வேலை செய்யக் கூடியவர்கள் அத்தனை பேருக்கும் கட்டாயமாக இன்ஷ்யூரன்ஸ் செய்யப்பட வேண்டும் என்கின்ற ஒரு நிலை ஏற்பட்டால் இங்கே இருக்கக்கூடிய மக்களுக்குப் பாதுகாப்பாகவும், இந்த முறையும் சரியாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

நம்முடைய தலைவரவர்கள் பலமுறை குறிப்பிட்டிருக்கிறார்கள். மாநில சர்க்காரே ஒரு வங்கியைத் துவங்கலாம்; ஒரு கமர்ஷியல் பேங்கைத் துவங்கலாம்' என்று பலமுறை குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இதற்கு மத்திய சர்க்கார், எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று சொல்லி, 1969-லேயே. அப்பொழுது சட்டத்துறை அமைச்சராக இருந்த பனம்பள்ளி கோவிந்த மேனன் அவர்கள் நாடாளுமன்றத்திலே அறிவித்திருக்கின்றார்கள். நாம் அதைத் துவங்க வேண்டும். நான் இதைக் குறிப்பிடுவதற்கு ஒரேயொரு காரணம், எதிர்காலத்திலே மத்திய சர்க்கார் இனிமேல் அவர்களுடைய பற்றாக்குறைக்கு கவலைப்பட போவதில்லை. அதற்கு ஒரே காரணம். Adhoc Treasury Bill என்கிற அந்த முறையை இப்போது ரத்து செய்துவிட்டார்கள். அதற்குப் பதிலாக Ways and Means என்கிற ஏற்பாட்டைச் செய்து, மத்திய சர்க்காரில் எவ்வளவுதான் பற்றாக்குறை இருந்தாலும்கூட, அந்தப் பற்றாக்குறையைச் சரி செய்வதற்கு ரிசர்வ் வங்கி இன்றைக்குத் தயாராக இருக்கிறது. ஆக, அப்படிப்பட்ட நிலையில் நாமும் ஒரு வங்கியைத் துவக்கி சர்க்கார் அதற்கு முதலீடு செய்ய வேண்டும். *(மணியடிக்கப்பட்டது)* சர்க்கார் முதலீடு செய்வதால் பொது மக்கள் நிச்சயமாக, சர்க்காருடைய வங்கி என்கிற காரணத்தினால், அதிகப்படியான முதலீட்டை இங்கே செய்வார்கள். முழுமையாக ரிசர்வ் வங்கி என்று இல்லாவிட்டாலும், நோட் அடிக்கின்ற அதிகாரத்தை வைத்திருக்காவிட்டாலும், இந்த அரசுக்கு ஏற்படுகின்ற சில தொய்வுகளுக்கு அந்த வங்கியிருந்து பயன்படுத்த முடியும் என்கிற என் கருத்தைச் சொல்லி, இங்கே பேசுவதற்கு வாய்ப்பை வழங்கிய தலைவருக்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*முற்பகல் 11.55*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்):** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்து, என்னுடைய தொகுதியின் தேவைகளை எடுத்து வைக்க ஆசைப்படுகின்றேன்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்."

என்ற குறள் வேந்தனின் கூற்றுக்கேற்ப கடந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருந்தது. தமிழ்ப் பெருங்குடி மக்களுக்காக தமது 60



ஆண்டு பொது வாழ்வில் அனைத்துத் தரப்பு மக்களின் உயர்வுக்கும், உரிமைக்கும் இந்த 73 வயதிலும் 23 வயது இளைஞரைப் போல் செயல்படும் தமிழக முதல்வரால் தாக்கல் செயயப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கை மிகவும் சிறப்பானது என்று இந்த நாடு உணர்ந்துள்ளது.

'நமக்கு நாமே திட்டம்' என்பது இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் தமிழக முதலமைச்சரால் முதன்முதலாக அறிமுகப்படுத்தப் பட்டிருக்கின்றது. இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதை நான் மிகவும் வரவேற்கிறேன். அதே நேரத்திலே இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே மாவட்டந்தோறும் மனு நீதி நாட்கள் அமைக்கும்போது. அதைக் கூட்டும்போது, அந்த இடத்தில் மாவட்டத்தின் அமைச்சர் என்ற முறையிலே, அந்தந்த மாவட்ட அமைச்சர்கள் இருந்து மனு நீதி நாளை நடத்தினால் மிகவும் சிறப்பாக இருக்கும். ஏனென்று சொன்னால் அந்த நேரத்திலே கொடுக்கப்படும் மனுக்கள்மீது விசாரணை நடத்தி உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அவர்கள் உத்தரவிட வாய்ப்பாக இருக்குமென்ற காரணத்தினால் இந்தத் திட்டதசை நான் வரவேற்கிறேன்.

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழே எனது தொகுதியிலுள்ள சேத்தியாதோப்பு மற்றும் பரங்கிப்பேட்டை பேரூராட்சிகளை எடுத்துக் கொண்டு அந்த நகரங்களின் வளர்ச்சிக்கு, அபிவிருத்திக்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த வெள்ள நேரத்திலே மிகுந்த பெருத்த பாதிப்புக்குள்ளானது தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம். அந்த மாவட்டத்திலே மிகவும் பாதிப்புக்குள்ளானது புவனகிரி தொகுதிதான். எனவே, அந்த மாவட்டத்தை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்று அறிவித்து, அங்கு நிலவரியை ரத்து செய்து அறிவிக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். புவனகிரி தொகுதியிலே இருக்கக்கூடிய சாலைகளெல்லாம் மிகவும் மோசமான நிலையிலே பாதிக்கப்பட்டுவிட்டன. இன்னும் அதை சரியான முறையில் சீர்படுத்தாத காரணத்தினால், போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு பகுதிக்கும் பஸ் செல்வது என்பது இன்றைக்கு சிரமமாக இருக்கிறது. பட்டை

உடைகிறது, டயர் அடிக்கிறது, டயர் வெடிக்கிறது என்றெல்லாம் காரணம் சொல்லி, போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த பஸ்கள் நிறுத்தப்பட்டு விடுகின்றன. எனவே, நமது தமிழக அரசு சிறந்த கவனத்தைச் செலுத்தி இந்தச் சாலைகளை எல்லாம் சீர்படுத்த வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, வெள்ள நேரத்திலே, ஆற்றில் தண்ணீர் வருகிறபோது வயல்களில் எல்லாம் மணல் அடித்து, வயல்களின் மீது மேடிட்டு இன்றைக்கு வயல்கள் உழுவதற்கு லாயக்கில்லாத நிலையில், விவசாயம் புரிவதற்கு லாயக்கில்லாத நிலையில் இருக்கின்றன. எனவே, தமிழகத்தில் அந்த விவசாயிகளின் துயரைத் துடைக்கும் வண்ணமாக தமிழக அரசு அதற்குண்டான தகுந்த இயந்திரங்களை அளித்து, வயல்வெளிகளில் இருக்கக்கூடிய மணல்களை அகற்றுவதற்கு உதவி புரிய வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு வெள்ள நிவாரணம் இன்னும் சரியான முறையில் வழங்கப்படவில்லை. தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டத்தில் இன்னும் அந்தக் குறை இருந்து கொண்டிருக்கிறது. இந்த வெள்ள நிவாரணத் தொகை மிகவும் குறைந்த அளவுத் தொகையாகயிருந்தாலும், அந்த மக்களுக்கு, அந்த விவசாயிகளுக்கு உரிய காலத்தில் கிடைத்தது என்று சொன்னால் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள்.

நண்பகல் 12.00

ஆனால், இன்றைக்கு அது தாமதப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த வகையிலே எனது தொகுதியில் இருக்கக்கூடிய, பின்னத்தூரின் மேற்குப் பகுதியில் இருக்கக்கூடிய கிராமங்களுக்கு எல்லாம் இன்னமும் அந்த வெள்ள நிவாரணத் தொகை வழங்கப்படவில்லை. மற்ற எல்லா பகுதிகளுக்கும் இந்த வெள்ள நிவாரண உதவித் தொகை பெரும் அளவில் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகள், முஸ்லீம் விவசாயிகள் என்ற ஒரே காரணத்தினால், அவர்களுக்குத் அந்தப் பணம் தேவை இருக்காது என்றும், அவர்கள் பணக்காரர்கள் என்றும் அந்த அதிகாரிகள் முடிவு செய்து இன்றைக்கு அந்த உதவித்தொகை வழங்கப்படவில்லை. 237 ஹெக்டேர் பாதிக்கப்பட்டிருந்தாலும், 11



ஹெக்டேருக்குத்தான் அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்கபபட்டிருக்கிறது.

கடந்த 20 ஆண்டு காலமாக திட்ட மதிப்பீடு செய்யபபட்டிருக்கின்ற கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டத்தின்கீழ் வரும் டி. முட்லூர், பி. முட்லூர் இணைப்புப் பாலம் திட்டத்தை இந்த அரசு உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். அந்தப் பாலத்தினால், 20 மைல் சுற்றிக் கொண்டு செல்லக கூடியவர்களின் சிரமமும் குறையும். எனவே இதனால் எரிபொருளும் மிச்சமாகும், நமது செலவினங்களும் குறைவாகும் என்ற அடிப்படையிலே, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய அரசுக் கல்லூரிக்குச் செல்லக் கூடியவர்களுக்கும் அது ஒரு வாய்ப்பாகும். எனவே அந்தப் பாலத்தை விரைவில் கட்டித்தர வேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக் கொள்கின்றேன்.

அதேபோல், பரங்கிப்பேட்டையிலே இன்றைக்குக் கோர்ட் இருக்கின்றது. பரங்கிப்பேட்டைக்குத் தெற்குப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள், வெள்ளாற்றுக்குத் தெற்குப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள், கிள்ளைப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் பரங்கிப்பேட்டை கோர்ட்டுக்கு வர வேண்டியிருக்கிறது. அப்படி வரவேண்டும் என்று சொன்னால் அவர்கள் சுமார் இரண்டு பஸ்கள் மாறி, 30 கிலோ மீட்டர் சுற்றி வரவேண்டியிருக்கிறது. எனவே, தயவு செய்து அந்தச் சிரமத்தைக் குறைக்கும் வண்ணமாக பரங்கிப்பேட்டைக்கும் பெண்ணாத்தூருக்கும் நடுவிலே ஒரு பாலத்தை அமைத்துத் தர வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் வாயிலாக தமிழக அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல், இன்றைக்கு இராஜாஜி மண்டபம் மற்றும் காந்தி மண்டபம் ஆகியவற்றில் அந்தத் தலைவர்களுக்கு மார்பளவுச் சிலை வைத்திருக்கிறோம் என்று அறிவித்துள்ளதோடு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நினைவிடத்திற்கு முன்பும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நினைவிடத்திற்கு முன்பும் மார்பளவுச் சிலை வைக்க வேண்டும் என்று அரசு அறிவித்திருப்பதை நான் வரவேற்கின்றேன். அதேபோல், தமிழக சமுதாயத்தின், தமிழகத்தின் தன்மானத்தை உயர்த்தி, சுயமரியாதையோடு வாழ வேண்டும் என்று தொடங்கப்பட்ட ஒரு மாபெரும் இயக்கத்தின் வித்தகர்களில் ஒருவர், தமிழகத்தில் நீதிக்காக குரல் கொடுத்த மாமேதைகளில் ஒருவர்,

ஜஸ்டிஸ் கட்சியை உருவாக்கி தமிழக மக்களைச் சிந்திக்க வைத்த சிந்தனையாளரான, பிறமொழி ஆதிக்கம் இந்தத் தமிழகத்திலே அறவே இருக்கக்கூடாது என்று குரல் கொடுத்த தமிழக மக்களின் அன்பிற்குப் பாத்திரமான தமிழக வீரர் பி.டி. இராஜன் என்ற மாபெரும் மேதைக்கு. அந்தப் பெருந்தகைக்கு வெள்ளிவிழா கொண்டாடும் இந்த நேரத்திலே, கூடல் மாநகரிலே, மதுரையிலே சிலை ஒன்று அமைத்திட இந்த அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். சிலை வைக்க வேண்டும் என்பது இஸ்லாமியக் கொள்கைக்கு முரண்பாடாக இருந்தாலும், இன்றைக்குத் தமிழகத்திலே தலைவர்களுக்குச் சிலை வைப்பது ஒரு கௌரவச் செயல் என்று இருக்கின்ற காரணத்தினாலே, அவர்கள் மதிக்கப்படுகிறார்கள் என்ற காரணத்தாலே அந்த மாபெரும் தலைவருக்கு. பி.டி.. இராஜன் அவர்களுக்கு நீங்கள் சிலை வைத்து அவர்களைக் கௌரவப்படுத்த வேண்டும் எனறு இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுடைய பிறந்த நாள் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். அந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி அவர்களுக்கு மரியாதை செய்யும் விதத்திலே, அவர்களுடைய பெயரைத் தாங்கிய கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் மாவட்டத்தின் வடக்கு எல்லையான ஆணைக்காரன் சத்திரத்திலே, அவருடைய பெயராலே ஒரு நுழைவு வாயிலை அமைப்பது அவருக்கு பெருமையைச் சேர்ப்பதாக அமையும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

10,000 சாலைப் பணியாளர்களை நியமித்துள்ளதை வரவேற்கின்ற அதே நேரத்திலே, பணி ஓய்வு பெற்ற பாசன உதவியாளர்களுக்குப் பதிலாக புதிய பாசன உதவியாளர்கள் இதுவரை நியமிக்கப்படாமல் உள்ளது. நீர்ப்பாசனத்தின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு ஒரு மைலுக்கு ஒருவராக ஏற்கெனவே இருந்தபடி. இன்றைக்கு 10 மைல்களுக்கு ஒருவராக இருப்பதைக் குறைத்து, ஒரு மைலுக்கு ஒருவர்..(மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிஷம். ஒரு மைலுக்கு ஒருவராக நியமித்து, விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் விதமாக. உத்தரவிட வேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக் கொள்கின்றேன்.



புதிய பேருந்துகளை வாங்கி நலிவுற்ற போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்குப் பெரும்பான்மையான போக்குவரத்துக் கழகங்களிலே பஸ்கள் எல்லாம், பக்கத்திலே செல்பவர்களுடைய ஆடைகளைக் கிழிக்கும் வண்ணமாகவும், அவர்களுடைய உடலை அறுத்துவிட்டு செல்லும் வண்ணமாகவும், தகடுகள் எல்லாம் வெளியில் நீட்டிக்கொண்டு மிகவும் மோசமான நிலையிலும் இருக்கின்றன. மழைக் காலங்களில் அந்த பஸ்களில் அமர்ந்து செல்ல முடியவில்லை. நமது ஆட்சி ஏற்பட்டு இன்றைக்கு 9 மாதங்கள் ஆகியும் இன்னும் அது சீர்செய்யப்படாமல் இருப்பது வருந்தத்தக்கது. எனவே, நமது தமிழக அரசும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் இதில் தனிக் கவனம் செலுத்தி, விரைந்து அப்படிப்பட்ட வாகனங்களையெல்லாம் தற்சமயம் நிறுத்தியாவது அதைச் செப்பனிட்டுச் சீர்செய்து போக்குவரத்துக்கு விட வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். புதிய வாகனங்களை வாங்கும்போது, எனது தொகுதிக்கு உட்பட்டு இருக்கக்கூடிய சிதம்பரம் தாலுகா, காட்டுமன்னார்கோயில் தாலுகா மக்களும் பயனடையும் வகையிலே, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக டெப்போவுக்குக் குறைந்தபட்சம் 25 பஸ்களையாவது வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

அதேபோல, ஏற்கெனவே பரங்கிப்பேட்டைக்கும் சென்னைக்கும் இடையே இயங்கி வந்த தங்கை பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்தை மீண்டும் இயக்கி அந்தப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). கடைசியாக ஒரே ஒரு வார்த்தை.

இஸ்லாமியப் பெருமக்களின் நீண்டநாள் கோரிக்கையாக, முஸ்லீம் சமுதாய மக்களுக்கு வேலைவாய்ப்பிலும், கல்வியிலும் 10% இட ஒதுக்கீடு வழங்கிடவேண்டும் என்ற கோரிக்கை இருந்து வருகிறது. அதற்குத் தமிழக முதலவர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று, சேத்தியாதோப்பைச் சுற்றி 60 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். அந்தப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் மட்டும்தான் உள்ளது. அதுவும் மிக மோசமான

நிலையில் இருக்கிறது. அதுபோன்று புவனகிரியிலும் அப்படித்தான் இருக்கிறது. எனவே, அந்த இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களையும் அரசு மருததுவமனையாகத் தகுதி உயர்த்தித் தரவேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சட்டப்படிப்பை எடுத்துவிட்ட காரணத்தால், புவனகிரித் தொகுதியில் சட்டக் கல்லூரி ஒன்றை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த நல்ல வாய்ப்பினை அளித்த தலைவர் அவர்களுக்கு எனது நன்றியை உரித்தாக்கி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் : [பகம்பொன் திரு. தா. கிருட்டிணன்]**

அடுத்து திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது என்னைப் பேச அழைத்த தங்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான, நன்றி கலந்த வணக்கத்தைச் சொல்லிக்கொண்டு, "தமிழன் என்றொரு இனம் உண்டு, தனியே அவனுக்கொரு குணம் உண்டு" என்ற நாமக்கல் கவிஞரின் பாடலுக்கேற்ப, தன் செயலாலும், அறிவாற்றலாலும், தெளிந்த நீரோட்டம் போன்ற பகுத்தறிவுச் சிந்தனையாலும் இந்த நிதிநிலை அறிக்கையைத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த அவையிலே அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிகையைப் பற்றி நாட்டிலுள்ள நல்லவர்கள், வல்லவர்கள், நல்லிதயம் படைத்தவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். ஆனால் ஒருசில கட்சியில் இருக்கக்கூடிய நண்பர்களும் அவர்களுடைய தலைவி அவர்களும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பாராட்டாமல் விட்டிருந்தாலும், அவர்கள் பாராட்டாமல் விட்டதைப் பற்றி ஏழைகள் கூறுகிறார்கள்.

திடீரென்று ஒரு மகனைக் கண்டுபிடித்து, அந்த மகனுக்கு 100 கோடி ரூபாய் செலவில் திருமணம் செய்தவர்களும், கொடநாடு எஸ்டேட் வாங்கியவர்களும், சென்னையில் மட்டும் 80 பங்களாவுக்கும் மேலே வைத்திருப்பவர்களும், 10 ஆயிரம் பட்டுச் சேலைகளையும், 700 ஜோடி செருப்புகளையும் வைத்திருப்பவர்களும் மற்றும் வைரம், வைடூரியம், பவளம், கோமேதகம் போன்ற விலை மதிப்பற்ற பொருட்களை வைத்திருப்பவர்களும் இந்த நிதிநிலை அறிக்கையைப்



பற்றிப் பாராட்டாமல் விட்டாலும், ஏழை எளிய மக்களுக்காகப் பாடுபடும் பாட்டாளிக்காக வழங்கப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கையை நான் உளமார மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய தங்கத் தலைவர், தமிழினத்தின் இரும்பு மனிதர் டாக்டர் இராமதாஸ் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை உளமார, மனமாரப் பாராட்டியிருக்கிறார்கள். அவர் சொல்கிறார். "ஒரு நீரோடையிலே இருக்கக்கூடிய ஆல மரத்தின் நிழலிலே அமர்ந்து இருபபதைப் போன்ற ஒரு குளிர்ச்சியான நிதிநிலை அறிக்கையை, டாக்டர் கலைஞர் அவர்கள் தந்திருக்கிறார்கள்" என்று சொல்லி, பெருமை சேர்த்திருக்கிறார். அந்த நல்லவருக்கு இந்த நேரத்தில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோன்று இங்கே இருக்கக்கூடிய, இந்தியாவைச் சுற்றி இருக்கக்கூடிய, உலகம் முழுவதும் இருக்கக்கூடிய 9 கோடித் தமிழ் மக்களும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டியிருக்கிறார்கள். அத்துடன் கலைஞர் அவர்கள் தமிழ் நாட்டிலேயுள்ள ஏழையெளியவர்கள், பாட்டாளிகள், விவசாயிகள், தாய்மார்கள் பயன்படுத்தக்கூடிய 75 பொருள்களுக்கு வரி நீக்கம் செய்திருக்கிறார்கள். ஏழையெளியவர்கள் மனம் எல்லாம் மகிழ்ச்சியடையச் செய்திருக்கிறார்கள் என்று சொல்லும்போது தமிழ்நாடே பெருமிதத்தில் ஆடிக்கொண்டிருக்கிறது.

பிற்பகல் 12-10

ஈரோட்டுச் சிங்கம், வெண்தாடி வேந்தர், பகுத்தறிவுப் பகலவன் ஈ.வெ.ரா. பெயரிலே ஒரு பல்கலைக் கழகம் தந்திருக்கக்கூடிய அந்தத் தங்கத் தலைவனை, கலைஞரை பாராட்ட எனக்கு வயது இல்லாவிட்டாலும், என்னுடைய தலைவர் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். பெரியாருடைய பெயரிலே தமிழ்நாட்டிற்கு ஒரு பல்கலைக் கழகத்தினைத் தந்திருக்கிறார்கள். பாடுபடக்கூடிய ஏழைகள், பொது அறிவற்ற நிலையிலே, பகுத்தறிவு அற்ற நிலையிலே உள்ளவர்களின் குழந்தைகள் படிக்கும்போது, ஆரம்பப் பள்ளியிலேயே அவர்களுக்கு விவசாயக் கல்வியை ஊட்டுவதற்கான ஒரு தகவலை இந்த வரவு-செலவுத் திட்டத்திலே தந்திருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களை உளமார, மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையின் 185-பத்தியிலே நம்முடைய கலைஞா அவர்கள் சொல்கிறார்கள். "வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்" என்ற அற்புதமான வரியை இதிலே சொல்லியிருக்கிறார்கள். அத்துடன், "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்று சொன்ன பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரால், தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய 234 தொகுதிகளிலும் ஒவ்வொரு கிராமத்தினைத் தேர்ந்தெடுத்து, அக்கிராமங்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து தரக்கூடிய ஒரு திட்டத்தினைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக அவர்களை உளமார, மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு தொகுதியிலும் சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரையோடு ஏழையெளியவர்கள் வாழக்கூடிய ஒரு கிராமத்தினைத் தேர்ந்தெடுத்து அதனை அனைத்து வசதிகளையும் கொண்ட கிராமமாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று மனப்பூர்வமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நம்முடைய அன்பார்ந்த பெரியவர், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் 24-வது பத்தியிலே சொல்லியிருக்கிறார்கள். குடிநீர் வசதி, மருத்துவ வசதி, வீடற்ற ஏழைகளுக்கு வீட்டு வசதி, ஏழைக் குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு, ஒவ்வொரு கிராமத்திற்கும் நியாய விலைக் கடை, கட்டாய ஆரம்பக் கல்வி, கிராமங்கள் அனைத்திற்கும் சாலை வசதி என்ற 7 திட்டங்களை, ரத்தினத்தினைப் பொறுக்குவதுபோல, தமிழகத்திற்குத் தேவையான 7 திட்டங்களை பொறுக்கி இங்கே அறிவித்திருக்கிறார்கள். அரசாங்க அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இந்தத் திட்டங்கள் நிறைவேறிவிட்டால், தமிழகம் பொன் விளையும் பூமியாக மாறிவிடும் என்று நான் ஆணித்தரமாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புளிச்சநாற்றுக் கயிற்றுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியை விலக்க வேண்டுமென்று டாக்டர் கலைஞர் அவர்களை உளமார, மனமாரக் கேட்டுக்கொள்கிறேன். 75 பொருள்களுக்கு வரி நீக்கம் செய்திருக்கிற டாக்டர் கலைஞர் அவர்கள்...

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஒவ்வொரு முறையும் உளமார, மனமார என்று சொல்கின்றாரே, இரண்டுக்கும்



இரண்டு பொருள்கள் இருக்கிறதா என்பதை அமைச்சர் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் ஒரு நல்ல வினாவை இங்கே தொடுத்திருக்கிறார்கள் என்றே கருதுகிறேன். ஏனென்று கேட்டால் நீண்ட, நெடுங்காலமாக பல பேருக்கு இதில் ஒரு மயக்கம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் சரியாகவே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சரி என்று சொல்வதற்குக் காரணம், 'ஆர்தல்' என்பது--ஆறுதல் அல்ல-- 'ஆர்தல்' என்பது பெருகிய, மிகையான என்கின்ற பொருளைத் தருகிறது. (குறுக்கீடு) குழப்பாதீர்கள். 'ஆர்தல்' என்பது மிகையான, அதே நேரத்தில் கூடுதலான பயனைத் தருகின்ற ஒரு சொல். அந்த அடிப்படையிலேதான் 'உளமார, மனமார' என்று அந்த இடையின ரகத்தைப் போட்டு எழுதினால் அதுதான சரியானது. அதைத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், பலருக்கு அது சரியாகத் தெரியாமல், 'உளம் மாற'--ஆமாம், மாறுதல்--அதற்கு நேர் முரணான பொருளைத் தருகின்றது. எனவே, இன்றிலிருந்தாவது தமிழகம் இதனைச் சரியாகப் பின்பற்றும் என்ற நம்பிக்கையில் வினாவினை எழுப்பிய மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்):** திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே.....(குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்):** மாண்புமிகு உறுப்பினர் இணக்கம் தெரிவித்தால் நீங்கள் குறுக்கிடலாம்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சரி.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'ஆர்தல்' என்பதற்கு மிகையான என்ற ஒரு பொருளைச் சொன்னார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் கேட்டது, 'உளமார, மனமார' என்று இரண்டு முறை அதையே சொல்கிறார்களே, உளத்திற்கும் மனத்திற்கும் வித்தியாசம் இருக்கிறதா என்ற பொருளில்தான் அவர்கள் கேட்கிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உள்ளபடியே பார்த்தால், இது ஒரு பொருள், பன் மொழி. எனவே, உளமாரச் சொல்கிறார். இருந்தாலும் அவருக்கு இன்னும் நிறைவில்லை. எனவே, மனமாரவும் சொல்கிறார். எனவே, இரண்டும் ஒன்றுதான். இருந்தாலும், அடுக்கியதில் அழகு இருக்கிறது.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் குறுக்கீடு, தமிழுக்கு முக்கியமான குறுக்கீடு என்பதால், நீங்கள் அனுமதித்திருக்கிறீர்கள். இருப்பினும், என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல வேண்டும். மிக முக்கியமான பிரச்சினை. கலைஞர் அவர்கள் எத்தனையோ பொருட்களுக்கு வரி நீக்கம் செய்திருக்கிறார்கள். ஆனால், புளித்த நார்க் கயிற்றுக்கு வரி நீக்கம் செய்யவில்லை. அதுபற்றி யாரும் அவரிடத்திலே எடுத்துச் சொல்லவில்லை என்றுதான் நான் வருத்தப்படுகிறேன். நான் 1977-லே, இதே மாமன்றத்திலே பட்ஜெட் உரையிலே பேசும்போது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலே இந்தப் புளித்த நார்க் கயிற்றுக்கு வரி நீக்கம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டபோது, 24-8-1977 அன்று புளித்த நார்க் கயிற்றுக்கு உடனடியாக வரி நீக்கம் செய்தார்கள். ஆனால், எம்.ஜி.ஆர்.-ன் பெயரைச் சொல்லிக் கொண்டு இங்கே ஆட்சிக்கு வந்த அம்மையார் அவர்கள், 'எம்.ஜி.ஆர். என்ன வரி நீக்கம் செய்வது, நான் வரி போடுகிறேன்' என்று சொல்லி அந்தப் புளித்த நார்க் கயிற்றுக்கு வரி போட்டார்கள். எங்களுடைய பகுதியிலே இருக்கக்கூடிய ஏழை எளியவர்கள் சிறுதொழிலாக அந்தத் தொழிலைச் செய்து கொண்டிருக்கிறார்கள். புளித்த நாரை ஆந்திராவிலேயிருந்து வாங்கி வந்து, கயிறாகச் சுற்றி--ஒரு குடும்பமே அதற்காக வேலை செய்ய வேண்டும்--தலையிலே வைத்துக்கொண்டு,



ஊர்ஊராகச் சென்று விற்கக்கூடிய ஒரு பொருள். அதற்கு ஜெயலலிதா அம்மையார் அவர்கள் 28-9-1994-லே வரி போட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு கேலிக்கூத்தான வரியை அம்மையார் இந்த நாட்டிலே போட்டார்கள். இந்த நாட்டிலே இருக்கக்கூடிய தாய்மார்கள், ஏழைகள் அந்த வரியைக் கட்ட முடியாமல், தூண்டிலில் சிக்கிய மீனாகத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். கருணை உள்ளம் படைத்த கலைஞர் அவர்களே, நீங்கள் எந்த இடத்தில் இருந்தாலும் என்னுடைய குரல் உங்களுக்கு ஒலிக்க வேண்டும். எந்த மூலையிலே இருந்தாலும் என்னுடைய குரல் உங்களுக்கு ஒலிக்க வேண்டுமென்ற காரணத்திற்காகத்தான் நான் சொல்கிறேன்....

பிற்பகல் 12-20

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய அறையிலே இருந்துகொண்டு, மாண்புமிகு உறுப்பினருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதிகமாக கத்திப் பேசவேண்டியதில்லை.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்தப் புளித்த நார்க் கயிற்றிற்கு, தயவுசெய்து, கருணையுள்ளம் படைத்த கலைஞர் அவர்கள் வரியை நீக்கி, எடப்பாடித் தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் இருக்கக்கூடிய அந்த ஏழைகளினுடைய மனங்குளிர, இன்றே, இப்பொழுதே அந்த வரியை நீக்குகின்ற உத்தரவினை கலைஞர் அவர்கள் வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்):** சீக்கிரம் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. இ. கணேசன்:** ஒரே நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன். (குறுக்கீடு) ஆந்திராவிலே, நாம் சாப்பிடுகிறோமே புளித்த கீரை, அது உயரமாக வரும்; கோங்கூரா என்பது அந்தக் கீரை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்):** நீங்கள் தலைவரைப் பார்த்துப் பேசுங்கள். சீக்கிரம் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. இ. கணேசன்:** நான் உங்களைப் பார்த்துத்தான் பேசுகிறேன். குறுக்கே எல்லோரும் இழுக்கிறார்கள்; ஒன்றும் செய்ய முடியவில்லை. நான் தலைவரைப் பார்த்துத்தான் பேசுகிறேன். இரண்டு நிமிடங்களில் பேசி முடித்து விடுகிறேன்.

நான் சென்ற முறை, இதே மன்றத்திலே, நம்முடைய கலைஞர் அவர்களிடத்திலே, முதல்வர் அவர்களிடத்திலே கேட்டேன்; எடப்பாடி தொகுதிக்கு ஒரு தாலுகா கொடுக்க வேண்டும்; ஒரு தாலுகாவை எங்களுக்கு அளியுங்கள் என்று கேட்டேன். அதற்கு கலைஞர் அவர்கள் முழு மனதோடு எடப்பாடி தொகுதிக்கு தாலுகாவை வழங்கினார்கள். சேலம் மாவட்டம் இரண்டாகப் பிரிந்தபோது--சேலம் மாவட்டம், இராஜாஜி மாவட்டம் என்று இரண்டாகப் பிரிந்த போது--எடப்பாடி தொகுதியை சேலம் மாவட்டத்தோடு இணைத்தார்கள். அதற்காக என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய தொகுதியிலே எடப்பாடி ஒன்றியம், கொங்கணாபுரம் ஒன்றியம், மகுடஞ்சாவடி ஒன்றியம் என 3 ஒன்றியங்கள் இருக்கின்றன. அந்த 3 ஒன்றியங்களிலே இரண்டு ஒன்றியங்களை எடப்பாடியோடு இணைத்துவிட்டு, ஒரு ஒன்றியத்தை, அதாவது மகுடஞ்சாவடி ஒன்றியத்தை சங்ககிரியோடு இணைத்து விட்டார்கள். நான் சபாநாயகர் அவர்களுக்கு ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய தாய்மார்கள் சொல்கிறார்கள்; ஒரு திருவிழாவுக்கு ஒரு தாயோடு 3 குழந்தைகள் செல்கிறார்கள்; 2 குழந்தைகள் மட்டும் தாயோடு இருக்கின்றன; ஒரு குழந்தை காணவில்லை என்றால் அந்தத் தாயினுடைய உள்ளம் எப்படி எப்படியெல்லாம் பதைபதைக்கிறதோ, அதைப்போலத்தான் எங்களுடைய உள்ளம் பதைபதைக்கிறது என்று சொல்கிறார்கள். தலைவர் அவர்களே, எங்களுடைய உள்ளம் அவ்வாறு பதைபதைக்கிறது. ஆகவே, மகுடஞ்சாவடியை, எடப்பாடியோடு இணைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமான பிரச்சினை, குடிநீர்ப் பிரச்சினை. இந்தக் குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றி ஒரே ஒரு கருத்தினைக் கூறி விடைபெறலாம் என்று நினைக்கிறேன். தமிழ்நாட்டிலே முக்கியமான பிரச்சினை, குடிநீர்ப் பிரச்சினை. இந்த அவையிலே நான் 1977-லே சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, எம்.ஜி.ஆர். இடத்திலே



வாதாடி, வாதாடி, எடப்பாடிக்குக் காவிரிக் குடிநீர் கொண்டு வரவேண்டுமென்று சொன்னேன். எடப்பாடிக்குக் காவிரிக் குடிநீர் கொண்டுவர, அப்போது எங்களுடைய தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 10½ கோடி ரூபாய்க்குத் திட்டத்தைத் தீட்டி, எடப்பாடி தொகுதி முழுவதற்கும் காவிரிக் குடிநீர் கொடுப்பதாக, இந்த அவையிலே உத்தரவாதம் வழங்கியிருந்தார்கள். ஆனால், 15 ஆண்டுக் காலத்திற்கு மேலாகியும் இன்னமும் அந்தத் திட்டம் நிறைவேறவில்லை. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில்கொள்ள வேண்டும். 15 ஆண்டுக் காலமாகியும் அந்த உத்தரவு நிறைவேற்றப்படவில்லை. அந்த உத்தரவாதத்திற்குப் பிறகு, இன்றைக்கு, எடப்பாடி, இராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்று அதை மாற்றி, எடப்பாடியின் மையப் பகுதியிலே வரவேண்டிய அந்தக் குடிநீர்த் திட்டம், ஒரு ஓரமாகச் சென்று மக்களுக்குப் பயனடையாமல், எடப்பாடித் தொகுதிக்குப் போட்ட அந்தத் திட்டம், இப்போது இராசிபுரம் வரை அந்தத் தண்ணீர் செல்கிறது. அதனால், எங்களுடைய தொகுதி மிகவும் பாதிக்கப்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது).

எடப்பாடி ஒன்றியம், கொங்கணாபுரம் ஒன்றியம், மகுடஞ்சாவடி ஒன்றியம் ஆகிய 3 ஒன்றியங்களிலும், இடைப்பட்ட கிராமங்களிலும், இந்தக் காவிரிக் குடிநீர் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அரசுக்கு என்னுடைய நன்றியைச் சொல்வதற்கு முன்னால், ஒன்றே ஒன்றை மட்டும் சொல்கிறேன். "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு" என்றார் பேரறிஞர் பெருந்தகை, அறிவுலக மேதை, அறிவுக் கடல், அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். மாற்றான் தோட்டத்து மல்லிகை மணக்கக்கூடிய வகையிலே, அந்தத் தோட்டத்தை ஊக்குவிக்கக் கூடிய வகையிலே, நம்முடைய கலைஞர் அவர்கள், அந்த மாற்றான் தோட்டத்து மல்லிகையை ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) அந்தவகையிலே, எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியானது கலைஞர் அவர்களுக்கு நன்றியைச் சொல்கிறது.

*பிற்பகல் 12-25*

ஆனால் அதே நேரத்தில், என்னுடைய சேலம் மாவட்டத்திலே ஒருசில விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஓமலூரிலே இருக்கிறார். அந்தச் சட்டமன்ற

உறுப்பினரை அழைக்காமல் அங்கே ஒரு தியணைப்பு நிலையம் திறக்கப்படுகிறது. தாரமங்கலத்திலே ஒரு சட்டமன்ற உறுப்பினர் இருக்கிறார். போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள் - அந்தச் சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரியாமல் உங்களுடைய கட்சி நிகழ்ச்சியிலே 6 இடங்களிலே நகரப் பேருந்துகளை விட்டிருக்கிறீர்களே இதுதான் நீங்கள் கலைஞர் அவர்களுக்குச் செய்யக்கூடிய.....(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பகம்பொன். தா. கிருட்டிணன்:** மாண்புமிகு உறுப்பினருக்கு ஒன்றை சொல்ல விரும்புகிறேன் இந்தக் குறை இருக்குமானால் சட்டமன்றப் பேரவைத் தலைவரிடத்திலே தனியாக எழுதிக் கொடுத்தால் அது கவனிக்கப்படும்.

***மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. தாரமங்கலம் ஓமலூர் பகுதியில், பொதுமக்களுடைய கோரிக்கை என்னவென்றால், 1988-லே ஓடிக்கொண்டிருந்த பேருந்துகளை நிறுத்திவிட்டார்கள். அதை மீண்டும் விட வேண்டும். அதைப்போல சில ஊர்களுக்குப் புதிதாகப் பேருந்துகள் போய்க் கொண்டிருக்கிற வழியில் 2 கி.மீ. தூரத்திலுள்ள ஊர்களுக்கும் விரிவு செய்து அந்தப் பேருந்துகளை விட வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகள் எல்லாம் பொது மக்களிடமிருந்து எனக்கு வந்தன. அவ்வளவு போக்குவரத்துக் கழக மேலாளரை அனுப்பி அதில் எது, எது சாத்தியம் என்று பரிசீலித்து முடியுமானால், புதிய ரூட் அல்ல. ஏற்கெனவே ஓடிக்கொண்டிருந்த பேருந்துகள் நிறுத்தப்பட்ட இடம் அல்லது கூடுதலாக இன்னும் சில கிராமங்களுக்கு எக்ஸ்டெண்ட் செய்து கொடுக்கக்கூடிய இடம் இவைகளுக்குப் பேருந்துகளை விட முடியுமா என்று பரிசீலனை செய்யுங்கள் என்று நான் அந்தப் புகார் மனுக்களை அனுப்பினேன். 6 இடங்களிலே இதுபோன்ற மனுக்களை மக்கள் கொடுத்தார்கள். ஆனால் 3 இடங்களிலேதான் சாத்தியம் இருந்தது. இன்னும் 3 இடங்களிலே பின்னாலேதான் பேருந்து விட முடியும். இப்போது பேருந்துகள் இல்லை என்று அவர் சொன்னார். சாத்தியம் உள்ள இடங்களிலே பேருந்துகள் விட்டோம். "நான் 9-ந்தேதி அந்தப் பகுதியிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிகழ்ச்சிக்குப் போகிறேன். 9-ந் தேதி நீங்கள் விடாதீர்கள். எனக்கு 5-ந் தேதி 6-ந் தேதி அந்தப் புகார் மனுக்கள் வந்தன. அதனால் நீங்கள் முன்கூட்டியே பேருந்துகளை விட்டுவிடுங்கள். கட்சி நிகழ்ச்சிக்கு நான் வருகிறேன். நீங்கள் 9-ந்தேதி விட்டீர்களென்றால் கட்சி



நிகழ்ச்சியிலே பேருந்து விட்டதாகச் சொல்லக்கூடும்" என்று பெருந்தன்மையோடு கலைஞர் தலைமையை ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த வீரபாண்டி ஆறுமுகம் சொல்லி அந்த நிகழ்ச்சிக்கு முன்பே பேருந்து விடப்பட்டதே தவிர, 9-ந் தேதி அல்ல.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய கலைஞர் அவர்கள் யார் தவறு செய்தாலும், ஏன் "என்னுடைய மகனே தவறு செய்தாலும் தண்டனைக்குட்படுத்துவேன்" என்று இந்த அவையிலே சிம்மக் குரலிலே எடுத்துரைத்தார்கள்.

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அது உண்மை. கலைஞர் சொன்னதும் உண்மை நாங்கள் நடப்பதும் உண்மை. எங்களிடத்தில் எந்தக் குறைபாட்டை நீங்கள் கண்டீர்கள்?

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சரி. அதை விட்டுவிடுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம் (குறுக்கீடு)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் குறிப்பிடும்போது பூலாம்பட்டிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் இராசிபுரத்திற்கு வருவதால்தான் அது தாமதம் ஆகிறது என்று கூறினார். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் எடப்பாடி-இராசிபுரம் கூட்டுக் குடிநீர் திட்டமே ஒழிய, எடப்பாடிக்கு என்று தனியாகப் போடப்பட்ட திட்டம் அல்ல. அவர் வேண்டுமானால் அவருடைய தொகுதிக்கு கூடியவிரைவிலே தண்ணீர் வருவதற்கு ஆவன செய்துகொள்ளட்டும். இராசிபுரத்தைப் பற்றிக் குறை சொல்ல வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

**மாண்புமிகு திரு. கே.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர் திட்டம் என்பது அவரவர்

சொல்வதுபோல், பேசுவதுபோல் போடுவது கிடையாது. இயற்கைக்கு ஒத்துவரக்கூடிய வகையிலே, குடிநீர் துரிதமாகச் சென்று எல்லோரும் பயனடைகின்ற வகையிலே, வழியோர கிராமங்கள் நிராகரிக்கப்படாமல் அமைத்துக் கொடுப்பதுதான் அந்தத் திட்டம். அதுதான் அரசினுடைய கொள்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: நீங்கள் உட்காருங்கள். அதிக நேரம் ஆகிவிட்டது. எடப்பாடி தொகுதியைப்பற்றி எல்லாம் பேசி முடித்தாகிவிட்டது. உட்காருங்கள். திரு. கே.எம். விஜயகுமார்.

**திரு. கே.எம். விஜயகுமார்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்பதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு விவாதத்தைத் தொடங்குகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை ஒட்டுமொத்தமாக அனைத்துத் தரப்பு மக்களும், அனைத்து வகைப்பட்ட மக்களும் பயன் பெறத்தக்க வகையிலே அமைந்துள்ளது. இந்த நிதிநிலை அறிக்கையிலே உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கி, அதிக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. மேலும் மக்கள் தாங்கள் அரசாங்கத்திலே என்னென்ன தகவல்கள் இருக்கின்றன என்பதை அறியும் பொருட்டு "Right to Information Act" என்ற சட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தியிருப்பது இந்தியாவிலேயே முதன் முதலாக போடப்பட்ட ஒரு சட்டமாகும். இது அரசாங்கத்தை கேள்வி கேட்கக்கூடிய ஒரு துணிவை மக்களிடம் ஏற்படுத்துகின்ற ஒரு சட்டமாகும். மேலும் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து அதை ஒரு மாதிரிக் கிராமமாக அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரு கிராமமாக ஆக்கும் திட்டம் என்ற 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' என்ற பெயரால் அறிமுகப்படுத்தப்பட்டு இருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்படாத விஷயங்களே இல்லை. அனைத்துத் தரப்பினரும், அனைத்துத் துறையினரும் பல புரட்சிகரமான முன்னேற்றங்களைக் காண்பதற்கு இதில் வகை செய்யப்பட்டிருக்கிறது.



இந்த நிதிநிலை அறிக்கையில் கால்நடைப் பராமரிப்புக்காக டென்மார்க் நாட்டு நிதியுதவியுடன் 'கால்நடை வளர்ச்சித் திட்டம்' ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. காமராஜர் மாவட்டத்திலே இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியான சாத்தூர் தொகுதியிலே ஏற்கெனவே அமைந்திருக்கின்ற ஆட்டுப் பண்ணை ஒன்றை இதன் மூலம் விரிவுபடுத்திட தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

காமராஜர் மாவட்டத்திலே என்னுடைய தொகுதியான சாத்தூர் தொகுதி இரண்டு நகராட்சிகளும் இரண்டு ஊராட்சி ஒன்றியங்களும் அடங்கியிருக்கின்ற மிகப் பெரிய தொகுதியாகும். அருப்புக்கோட்டை நகராட்சி மற்றும் சாத்தூர் நகராட்சி ஆகிய இரண்டு நகராட்சிகளும், அருப்புக்கோட்டை மற்றும் சாத்தூர் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்களும் அடங்கிய அந்தத் தொகுதியிலே நம்முடைய டாக்டர் கலைஞர் மாண்புமிகு முதல்வர் அவர்களது காலத்திலேதான் 1972-ஆம் ஆண்டு குடிநீர் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. அப்போது இருந்த மக்கள் தொகையைவிட தற்போது இரண்டு மடங்காக உயர்ந்திருக்கிறது. ஏறக்குறைய ஒரு லட்சத்திற்கும் அதிகமாக மக்கள் வாழ்கின்ற நகரமாக அது இருக்கிறது. அந்த நகரத்தின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் வைகைக் கரை திருப்புவனம் நகரத்திலிருந்து குடிநீர் வந்துகொண்டிருக்கிறது. அங்கே இரண்டு மடங்கு குடிநீர் தேவையிருக்கிற காரணத்தாலும், அருப்புக்கோட்டை நகரம் அதிகளவு விஸ்தீரணம் அடைந்து இருக்கிற காரணத்தாலும், அருப்புக்கோட்டை நகருக்குக் கிழக்குப் பகுதியாக அமைந்திருக்கிற சொக்கலிங்கபுரம், வெள்ளக்கோட்டைப் பகுதிக்கு சரிவர நீர் கிடைக்காத காரணத்தாலும், அந்தப் பகுதியிலே கூடுதலாக ஒரு மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைக்க வேண்டும் என்ற ஒரு கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டு அது பரிசீலனையில் இருந்து வருகிறது. அந்த மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைப்பதற்கான இடமும் தேர்வு செய்யப்பட்டு, அதற்கான வரைவும் தீட்டப்பட்டு, ஏறக்குறைய ரூ.68 இலட்சம் செலவிலான ஒரு திட்டம், குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து பெறப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. அதனை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து இந்த நிதி ஆண்டிலேயே, அந்தத் திட்டத்திற்கு

அனுமதி வழங்கி நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று நான் அவரைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டத்திலே சாத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலும், அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலும் இருக்கிற பொதுப்பணித் துறை ஏரிகளை, கண்மாய்களை சீர்படுத்தும்போது, கண்மாய்களை மட்டும் ஆழப்படுத்திடாமல் மழைக் காலங்களில் மழை நீர் வரத்துக் கால்வாய்களையும் தூர் எடுத்து அதனைச் சீரமைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சாலைப் பராமரிப்புக்காக நிதிநிலை அறிக்கையிலே அதிக அளவிலே, நிதி ஆதாரங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. கடந்த ஓராண்டுக் காலமாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றும், சாலை பராமரிப்புக்கென்று பலமுறை நாம் அமைச்சரிடம் தெரிவித்தும், சாலைப் பராமரிப்பு வேலைகள் இன்னும் துவக்கப்படாமலே இருக்கின்றன. அதனால், புதிதாகப் பேருந்துகள் விடுவதும் காலதாமதமாகிக் கொண்டிருக்கின்றன. எனவே, உடனடியாக சாத்தூர் தொகுதியிலே இருக்கிற ஊராட்சி சாலைகளையும், நெடுஞ்சாலைத்துறை சாலைகளையும் சீரமைத்து, அதற்குண்டான நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சாத்தூர் நகரிலே குடிநீர்ப் பஞ்சம் மிகவும் கொடுமையான ஒரு சூழ்நிலையில் இருக்கிறது. கடந்த ஆண்டு, ஏறக்குறைய எட்டு மாத காலமாக, அங்கு குடிநீர் சரிவர விநியோகம் செய்ய முடியாமல், லாரிகள் மூலமாகவே, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. இப்போது, மீண்டும் அதே மாதிரியான ஒரு சூழ்நிலை சாத்தூர் நகரிலே ஏற்பட்டிருக்கிறது. இதனைப் போக்குவதற்கு, சாத்தூர் நகருக்கென இருக்கன்குடி அர்ச்சுனா நதியிலிருந்து புதிய குடிநீர்த் திட்டம் ஒன்று ஏற்படுத்துவதற்காக சுமார் ரூ 208 இலட்சம் செலவிலே ஒரு புதிய திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தக் குடிநீர்த் திட்டத்தை இந்த நிதியாண்டிலேயே, செயல்படுத்துவதற்குரிய நிதி ஆதாரங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.



(மணியடிக்கப்பெற்றது) சாலை வசதிகளைப் பொறுத்த அளவிலே, அருப்புக்கோட்டையில் இருக்கிற இரயில்வே மேம்பாலம் மிகவும் குறுகலான மேம்பாலமாக இருக்கிறது. அது ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்கு முந்தைய மேம்பாலம். இரண்டு பேருந்துகள் எதிர்எதிரே வரும்போது அது விலகிச் செல்வதுகூட கடினமாக இருக்கிற ஒரு சூழ்நிலையிலே, அடிக்கடி அங்கு விபத்துகள் ஏற்படுகின்றன. கடந்த 10 தினங்களுக்கு முன்பாகக்கூட ஒரு ஜீப் ஒன்று பாலத்திலிருந்து கீழே இறங்கி விட்ட ஒரு விபத்து நடந்தது. எனவே, அந்தப் பாலத்தை அகலப்படுத்தும் பணிக்கான ஒரு கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. அதனையும் செயல்படுத்துவதற்கு தகுந்த நிதி ஒதுக்கீடு செய்யவேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் காலத்திலேதான், அனைத்துக் கிராமங்களுக்கும் மின்வசதி என்ற ஒரு திட்டத்தை ஏற்படுத்தி மின் வசதி இல்லாத கிராமமே இல்லை என்ற ஒரு சூழ்நிலையைத் தமிழகத்திலே ஏற்படுத்தினார்கள். அதே அடிப்படையிலே இந்த 5 ஆண்டிற்குள்ளாக தமிழகம் எங்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, குடிநீர் இல்லாத கிராமமே இல்லையென்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்றும், அனைத்துக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும் என்ற ஒரு திட்டத்தின் மூலமாக அதிக நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்து இருப்பதை வரவேற்கிறேன்.

*பிற்பகல் 12-40*

தமிழ்நாட்டிலே, அருப்புக்கோட்டை நகரிலே, வேளாண்மைத் தொழிலுக்கு அடுத்த பெரிய தொழிலாக கைத்தறி நெசவுத் தொழில் நடைபெறுகிறது. அங்கே அதிக அளவில் கைத்தறி நெசவாளர்கள் வாழ்ந்து வருகிறார்கள். கைத்தறி நெசவுத் தொழிலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்ற நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நெசவாளர்கள் படும் இன்னல்களை நன்கு அறிந்தும், அவர்களுக்கு ரிபேட் தள்ளுபடி மானியத்தைக் குறைந்தபட்சமாகக் கொடுத்திருப்பது அந்த நெசவுத் தொழில் நசிந்து போகிற நிலையை ஏற்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, 1989-91 ஆம் ஆண்டில் எவ்வாறு ஒரு கூட்டுறவு சங்கத்திலே உற்பத்தியாகின்ற, விற்பனையாகின்ற அனைத்துக் கைத்தறித் துணிகளுக்கும், எந்த அளவு விற்பனையாகின்றதோ அந்த அளவுக்குத் தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டதோ, அதே முறையை, எந்த ஒரு

சீலிங்கும் இல்லாமல், அதில் ஒரு அளவுகோல் இல்லாத அளவுக்கு, விற்பனையாகின்ற அனைத்துத் துணிகளுக்கும் தள்ளுபடி மானியம் வழங்க வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. கே.எம். விஜயகுமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வருடம் கல்வியைப் பொறுத்தமட்டில், தொடக்கப் பள்ளிகள் 168-ம், மேல்நிலைப் பள்ளிகள் 75-ம் துவங்க இருப்பதாக நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அருப்புக்கோட்டை நகரிலே அமைந்திருக்கிற சாது. த. ராமசாமி நாயக்கர் அரசு உயர்நிலைப் பள்ளியையும், பாலவநத்தம் அரசு உயர்நிலைப் பள்ளியையும் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தியும், தொடக்கப் பள்ளியே இல்லாத சாத்தூர் ஊராட்சி ஒன்றியம், கணபதியாபுரம் கிராமத்தில் ஒரு தொடக்கப் பள்ளியையும் தொடங்கி, கல்வி வளர்ச்சியிலே என்னுடைய தொகுதிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் பள்ளிகளிலே ஆசிரியர்கள்-மாணவர்கள் விகிதாச்சாரம்.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உரையை முடித்துக் கொள்ளுங்கள் என்று நான் சொல்லுகிறேன், நீங்கள் பேசிக்கொண்டே இருக்கிறீர்களே!

**திரு. கே.எம். விஜயகுமார்:** தனியார் பள்ளிகளிலே ஆசிரியர்கள்-மாணவர்கள் விகிதாச்சாரம் கூடுதலாக இருப்பதைக் கண்காணித்து, விகிதாச்சாரத்திற்கேற்ப ஆசிரியர்களை நியமிப்பதற்கும் நீங்கள் உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

***திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.



திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் அடவிநயினார் கோவில், கொடுமுடியாறு, நம்பியாறு மற்றும் வடக்கு பச்சையாறு ஆகிய நான்கு திட்டங்களை தமிழ்நாடு நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு விஷயங்களை இந்தப் பேரவைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் இதற்கு முன்னதாகவே தெரிவித்துள்ளார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் 70 சதவிகிதம் மக்கள் கிராமப்புறங்களிலே வாழ்கிறார்கள். அந்தக் கிராமப்புற மக்களின் மனதில் நீங்காத இடம் பெற்ற நமது மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள், ஆட்சிக்கு வந்தவுடனேயே உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை நடத்துவேன் என்று சொன்னார்கள். உள்ளாட்சித் தேர்தலை நடத்தி, சட்டத்தையும் திருத்தி, நிதி ஆதாரத்தையும் ஒதுக்கி, கிராமப்புற மக்கள் மத்தியிலே நல்லதொரு மதிப்பைப் பெற்றிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அரசாங்கத்தால் கொடுக்கப்படுகின்ற சலுகைகள் மக்களை நேரிடையாகச் சென்று அடைவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, ஊராட்சி மன்றங்களில் ஆண் ஒருவர், பெண் ஒருவர் என்று சொல்லி, மக்கள் நலப் பணியாளர்களை அமர்த்துவதற்குக் கலைஞர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்தப் பணியில் ஆட்களை அமர்த்துகிறபோது எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை. சில நாட்களுக்கு முன்னால் மத்தியத் திட்டக் குழு உறுப்பினர் திரு. திம்மையா அவர்கள் தமிழ்நாட்டைப் பற்றி ஒரு கருத்துச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் எட்டு மாவட்டங்களில் அபாயகரமான அளவுக்கு நிலத்தடி நீர் கீழிறங்கிக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அந்த எட்டு மாவட்டங்களில் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டமும் ஒன்றாகும்.

*பிற்பகல் 12-45*

தமிழகத்தைப் பொறுத்தமட்டில், முக்கியமான தடையாக இருப்பது தொழில் துறைக்கு மின்சாரமும், விவசாயத்திற்குத் தண்ணீர்ப் பற்றாக்குறையும் ஆகும். மின் உற்பத்திக்கு தமிழக அரசு சில முயற்சிகளை செய்து கொண்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், பாசனத்திற்கு நம்முடைய தமிழக அரசு நிரந்தரத் தீர்வு காணவேண்டும். வட மாநிலங்களில் உற்பத்தியாகி வீணாகக் கடலிலே கலக்கின்ற மகாநதி, கோதாவரி போன்ற ஆறுகளை இணைக்க வேண்டும். கோதாவரி ஆற்றிலிருந்து 2600 டி.எம்.சி. தண்ணீர் வீணாகக் கடலில் கலக்கின்றது.

எனவே தென் மாவட்டங்களில், கிருஷ்ணா நதி மூலமாகவும் பாலாறு, பொன்னையாறு, வைகை மூலமாகவும் தாமிரபரணியை இணைத்தால் நிரந்தரமாக வறட்சி இருக்காது என்று கூறிக்கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்கு 20,000 கோடி ரூபாய் தேவைப்படும் என்று சொல்லப்படுகிறது.

நாங்குநேரி தொகுதியில், களக்காடு, சிங்கிகுளம் பகுதிகளில் பச்சையாற்றின் மூலம் பாசனம் பெற்று வந்த குளங்களும், பச்சை ஆற்றில் நேரடியாக தன்கால் பாசனம் பெற்றுவந்த பகுதிகளும் பச்சை ஆற்று அணைக்கட்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. ஆகவே சேர்க்கப்படாமல் இருக்கிற அந்தப் பகுதிகள் மணிமுத்தாறு அணைத்திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை. இதற்கு வேறு எந்த ஆதாரமும் கிடையாது. ஆகவே அந்தப் பகுதிகளை பச்சை ஆற்று அணைக்கட்டுப் பாசனத்தில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், களக்காடு பகுதியில் மழைக் காலங்கள் வருகின்றபோது, மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தி ஆகின்ற தண்ணீரை முறையாகக் கொண்டு செல்ல முடியவில்லை. தென்வீதி, சீவலபேரி, மலையடிப்புதூர் போன்ற கால்வாய்கள் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி இருக்கின்றன. அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி முறையாக குளங்களுக்குத் தண்ணீர் கொண்டு செல்வதற்கு வழி செய்ய வேண்டும்.

அடுத்து, களக்காட்டில், நீண்டகாலமாக பஸ் நிலையம் இல்லை. பொது மக்கள் மத்தியிலும் பஸ் நிலையம் இல்லை என்ற ஒரு



அதிருப்தி இருக்கிறது. ஆகவே பொது மக்கள் விரும்பியபடி குடிதாங்கி குளத்தில் அல்லது மாணிக்கம் குளத்தில் பஸ் நிலையம் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஏர்வாடி நகரம், இஸ்லாமிய மக்கள் வாழ்கின்ற பகுதியாகும். இந்தப் பகுதியிலுள்ள மக்கள் வெளிநாடுகளிலும், வெளி மாநிலங்களிலும் பணிபுரிந்து வருகின்றார்கள். அங்கே நிரந்தரமாக தண்ணீர் பற்றாக்குறை இருந்து வருகிறது. அது மட்டுமல்லாமல் அங்கே பஸ் நிலையமும் இல்லை. ஆகவே தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கும், பஸ் நிலையம் அமைப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன வேண்டுகோள். உறுப்பினருடைய தொகுதியிலேதான் பச்சையாறு திட்டத்தினை எவ்வளவு வேகமாகக் கொண்டு வரமுடியுமோ, அவ்வளவு வேகமாகக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறோம். அதற்காக கலைஞர் அரசுக்கு, கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்திருந்தால் நான் பாராட்டுவேன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லிவிட்டுதான் நான் பேச்சை ஆரம்பித்தேன். நான் கூறிய கால்வாய்கள் பச்சையாற்றுத் திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை; கொடுமுடியாறு திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை. மலையடிபுதூர் கால்வாய், சீவலபேரி கால்வாய், போன்ற கால்வாய்கள் இந்த இரண்டு திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை. அந்த இரண்டு கால்வாய்கள் மூலமாக பாசனம் பெற பல குளங்கள் இருக்கின்றன. அந்தக் குளங்களுக்குத் தண்ணீர் செல்வதற்கு தடையாக கால்வாய்களில் ஆக்கிரமிப்புகள் உள்ளன. அதை அகற்ற வேண்டுமென்றுதான் கூறுகிறேன்.

நாங்குநேரி தொகுதியில், திருநெல்வேலிக்கும், நாகர்கோவிலுக்கும் இடையே இருக்கின்ற பெரிய நகரம் வள்ளியூர் நகரமாகும். இது வளர்ந்து வருகின்ற நகரம். இந்த நகரத்தைப் பொறுத்தமட்டில்,

அங்கே மருத்துவ வசதி கிடையாது. திடீரென்று ஒருவர் மருத்துவச் சிகிச்சைப் பெற வேண்டுமானால் திருநெல்வேலிக்கு வரவேண்டும் அல்லது நாகர்கோயிலுக்குப் போக வேண்டும். அரசாங்கத்தால் மருத்துவமனை கட்டுவதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும், அந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி அங்கே மருத்துவமனையை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வள்ளியூர் நகரத்தில், மின் அழுத்தம் குறைவாக இருக்கிறது. எனவே அந்த நகரத்திற்கு வட பகுதியில், வள்ளியூர், திருக்குவங்குடி, ஏர்வாடி போன்ற மூன்று நகரங்களுக்கு இடையே ஒரு உப மின்நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வள்ளியூர் நகரம் வளர்கின்ற நகரமாகும். வள்ளியூர், நாங்குநேரி தொகுதியைச் சேர்ந்தது; ஆனால் ராதாபுரம் தாலுகாவை சேர்ந்தது. ஆகவே, திருநெல்வேலிக்கும் நாகர்கோவிலுக்கும் இடையே இருக்கின்ற வள்ளியூர் நகரத்தை தலைநகரமாக ஆக்கி, அதைத் தனி தாலுகாவாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

*பிற்பகல் 12-50*

வள்ளியூர், மூன்றடைப்பு கிழக்கு பகுதி, ஆழ்வார்நேரி, பருத்திபாடு என்று பல பஞ்சாயத்துகள் இருக்கின்றன. இந்தப் பஞ்சாயத்துகளில் மருத்துவ வசதிகள் எதுவும் கிடையாது. ஆகவே, அந்த மருத்துவ வசதியை அங்கே ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

செண்பகராமன்நல்லூர் கோயில் மிகவும் பழம் பெரும் கோயில். அந்தக் கோயிலில் கலைக்கூடங்கள் இருக்கின்றன. அதனைப் பாதுகாப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். திருக்கனன்குடியிலிருந்து சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவில் இந்திய மேற்குத் தொடர்ச்சி மலை உள்ள பகுதியில் திருமலை நம்பி என்ற கோயில் அமைந்து உள்ளது. அந்தக் கோயிலுக்கு செல்கின்ற பக்தர்களுக்கு சாலை வசதி இல்லை. அங்கு செல்கின்ற பக்தர்களுக்கு தங்கும் இடவசதி இல்லை. ஆகவே, அதற்கும் ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



களக்காட்டில் இருந்து சுமார் 18 கிலோ மீட்டரில் செங்கல்தேரி பங்களா இருக்கிறது. அந்த செங்கல்தேரி பங்களா பிரிட்டிஷ் அரசாங்கத்தால் கட்டப்பட்டது. அங்கு கோடை காலங்களில் தங்குவதற்காக வசதிகள் செய்யப்பட்டு இருக்கிறது. ஆனால், அங்கு செல்வதற்குச சாலை வசதிகள் கிடையாது. அதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி குளத்தில் அரசாங்கத்தாலேயே முள் வைக்கப்பட்டு இருக்கிறது. அந்த முள், குளம் முழுவதும் பரவி, அந்தக் குளத்தில் ஆட்கள் நடமாட முடியாமல் இருக்கிறது. ஆகவே, அதை அப்புறப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி தொகுதியிலே மூலைகருப்பட்டி, விஜயநாராயம் பகுதிகளை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரிடையாக வந்து பார்வையிட்டார்கள். அந்தப் பகுதி மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்கி, குடிநீர் வசதியும் வழங்க வேண்டும் என்று கூறி, இதுவரை பேச வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.பி. இராசன்.

***திரு. வி.பி. இராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றத்தில் நிதிநிலை அறிக்கையில் பேசுகின்ற வாய்ப்பினை எனக்கு ஏற்படுத்தித் தந்த ராஜபாளையம் தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும், எங்கள் தன்னிகரில்லாதத் தலைவர், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். 1997-98-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை, இந்த நாட்டில் இருக்கக்கூடிய அனைத்துத் தரப்பு மக்களின் பாராட்டையும் பெறுகின்ற வகையில், ஒரு அற்புதமான நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்து இருக்கிறார்கள், நம்முடைய முதலமைச்சர் அவர்கள். இதிலே குறை காண்பதற்கென்றே சிலர் அறிக்கை விடுவதும், அதிலேயும் ஒருசிலருக்கு மூட்டுவலியும் வந்து, இப்போது முதுகுவலியால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிற முத்துப்பேச்சிகள் எல்லாம் இந்த பட்ஜெட்டைப் பற்றி குறை சொல்கிறார்களே என்றுதான் எங்களுக்கு இருக்கிற வருத்தமெல்லாம். ஒரு அற்புதமான நிதிநிலை அறிக்கை. திருவள்ளுவர் சொன்னதுபோல,

*"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்*
*சேரா தியல்வது நாடு."*

என்ற குறளுக்கு ஏற்ப, பசியும் நோவும் இல்லாமல், வெளியே இருந்து வந்து தாக்கி அழிவு செய்யும் பகையும் தன்னிடம் சேராமல், நல்ல வகையில் நாடாளுவதே ஒரு நாட்டிற்கு அடையாளம் என்கின்ற வகையில் ஒரு அற்புதமான நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்து இருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையில் மிகவும் கவர்ந்த விஷயத்தில் ஒன்று, தகவல் தொழில்நுட்பம் என்பதுதான். வளர்ந்து வரும் விஞ்ஞான உலகில் தகவல் தொழில் நுட்பத்திற்கு என்று, அதுவும் தமிழ்நாட்டின் தொலைதூர நோக்கத்தோடு நம் நாட்டின் வளர்ச்சியை மையமாகக் கொண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைசசர் அவர்கள் ஒரு அற்புதமான கருத்தை இங்கே தந்து இருக்கிறார்கள். அந்தத் தகவல் தொழில்நுட்பத்திற்கு என்று, மரியாதைக்குரிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு சுயநிதி அமைப்பின் மூலம் அதற்கென 10 கோடி ரூபாயை ஒதுக்கி, அந்த 10 கோடி ரூபாயின் மூலம் ஏற்பாடு செய்கின்ற இந்த அமைப்பு படிப்படியாக ஒரு பல்கலைக் கழகமாக வளர வேண்டும் என்று விரும்பி, தகவல் தொழில்நுட்பம் - இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி-இந்த மாநிலத்தில் முன்னேற்றத்திற்கு ஒரு அறிகுறி என்பதைக் கண்டறிந்து, அதை அறிவித்து இருக்கிறார்கள். அதற்கேற்ப இந்தியாவிலேயே முதன்முறையாக சென்னையில் Information Technology Institute of Tamil Nadu (ITIT) என்று சொல்லப்படுகின்ற அந்த நிறுவனம் நிறுவப்படும் என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

*பிற்பகல் 12-55*

இன்றைக்கு உலக அளவிலே மிகப் பெரிய பணக்காரர், 41 வயது நிரம்பிய இளம் வயது பில் கேட்ஸ் என்பவர், கம்ப்யூட்டர் மைக்ரோஸாஃப்ட் நிறுவனங்களைத் தொடங்கி, அதன்மூலம் உலக அளவில் மிகப் பெரிய பணக்காரராக இன்றைக்கு வலம்வந்து கொண்டிருக்கின்ற அவர், இப்போது இந்தியாவிலே சுற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கிறார். அவரை, இந்தியாவின் மாண்புமிகு பிரதமர் அவர்களும் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த முதலமைச்சர்களும் சந்தித்துப் பேசி, நீங்கள் எங்கள் நாட்டுக்கு



வந்து, தொலைத் தொடர்புத் தொழில் நுட்பம் இந்தியாவில் வளரவேண்டும் என்கிற அளவில் அதை எங்கள் நாட்டில் நீங்களே ஆரம்பியுங்கள் என்று வேண்டுகோள் விடுக்கின்ற வேளையில், அதற்கான ஒரு முத்தாய்ப்பான திட்டத்தை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே அறிவித்து, அதன் மூலமாக இன்றைக்கு பில் கேட்ஸ் அவர்களைப் போல அவருடைய திறமையைப் பெறுகின்ற வகையில், Computer Graphics, Software Engineering and Hardware systems, Multi Media, Telecommunication, Information Technology, Digital Techonology போன்ற தகவல் தொழில் நுட்பத் திறனுடைய அனைத்து அம்சங்களிலும் சிறந்து விளங்கும் நல்ல இளைஞர்களைத் தயாரிப்போம் என்று சொல்லியிருக்கின்றார்களே, அதுதான் இந்த பட்ஜெட்டின் தலைசிறந்த, தொலைநோக்கோடு செய்திருக்கின்ற, நல்ல அம்சமான திட்டம். இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, எண்ணற்ற இளைஞர்களின் வாழ்விலே வளம் சேர்க்கின்ற ஒரு அற்புதமான திட்டத்தை, இந்தப் பட்ஜெட்டிலே தந்திருக்கிறார்கள். அதற்காக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, இந்த நாட்டிலே ஆதிதிராவிட மாணவர்களின் நலனுக்காக 40 மாணவர் இல்லங்களும், ஐந்து நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், ஐந்து உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். என் தொகுதியான ராஜபாளையத்தைச் சேர்ந்த சுந்தரராஜபுரத்தில் உயர்நிலைப் பள்ளியாக இருக்கக்கூடிய அந்த சுந்தரராஜபுரம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் பணிவான வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதைப்போலவே, இந்த பட்ஜெட்டிலே தாங்கக்கூடியவர்களுக்கு வரியைப் போட்டு, தாங்கமுடியாதவர்களுக்கு வரியை எடுத்திருக்கின்ற ஒரு அற்புதமான செயலை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். தாங்கக்கூடியவர்கள் என்று சொன்னால், மதுவுக்குக் கடந்த காலத்தில் ஒரு பெட்டிக்கு விற்பனை வரி மட்டும் வெறும் 95 ரூபாய் என்று இருந்தது. இன்றைக்கு அந்த

விற்பனை வரியை 165 ரூபாயாக ஆக்கி, அதன்மூலம் இந்த அரசுக்கு 210 கோடி ரூபாயை வரியாக பெற்று அதன்மூலம் தாங்கக்கூடியவர்களுக்கு மட்டுமே வரிவிதிப்பைச் செய்திருக்கிறார்கள். அதைப்போலவே லாட்டரிச் சீட்டுகளுக்கு வரியை விதித்திருக்கிறார்கள். பான்பராக் என்ற மசாலா பாக்குக்கு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அந்த வரி உயர்வால் யாருக்கும் எந்த விதத்திலும் பாதிப்பு இருக்காது. ஆனால், இதே வரிஉயர்வைக் கடந்த காலத்தில் செய்யாமல், ஒரு பெட்டி மதுவுக்கு 95 ரூபாய் என்று மட்டும் அதிகாரபூர்வமாகப் போட்டுவிட்டு, இடையிலே ஆளுங்கட்சியின் முதலமைச்சர் அந்த மது உற்பத்தியாளர்களிடமிருந்து மறைமுகமாகக் கோடிக்கணக்கான ரூபாய் கொள்ளையடித்த வரலாற்றை இந்த நாடு மறக்கவில்லை. ஆனால், அப்படி எங்கோ போன அந்த ரூபாயை இன்றைக்கு இந்த நாட்டு நலனுக்குத் திருப்பி அரசுக்கு வருவாய் வளம் சேர்த்திருக்கின்றார்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

அதைபோலவே, வரி நீக்கமும் செய்யப்பட்டிருக்கிறது. மிகவும் சிந்தித்து, சீர்தூக்கிப் பார்த்து சமூக நலச் சிந்தனையோடு கிட்டத்தட்ட முப்பதுக்கும் மேற்பட்ட பொருட்களுக்கு வரி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறது. மலைக்குறவர்கள் - அவர்களைப் பழங்குடி மக்கள் என்று சொல்வார்கள். அந்த மக்கள் தங்கள் கையால் தயாரிக்கக்கூடிய மூங்கிலால்லான தட்டு, முறம், கூடைகளுக்கு எல்லாம் வரி விலக்கு செய்யப்பட்டிருக்கிறது. அதுபோல, தேங்காய் ஓடு, நிலக்கடலைத் தோல், சீயக்காய்ப் பொடி, தொன்னை இவைகளுக்கு எல்லாம் வரி நீக்கம் செய்திருக்கிறார்கள். அதுபோல, சாம்பிராணி, சம்மட்டி, கடல் சிப்பி, அந்தச் சிப்பியினால் செய்யக்கூடிய பொருட்கள், அது மட்டுமல்ல, தயிர், பஞ்சாமிர்தம், 39 வகையான நாட்டு மருந்துகள், இதுபோக புற்றுநோய், தொழுநோய், காசநோய்களுக்கான உயிர்காக்கும் மருந்துகளுக்கெல்லாம் வரி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறது. ஊனமுற்றோர்கள் பயன்படுத்துகின்ற சைக்கிள் வாகனங்களுக்கு இன்றைக்கு வரிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அதுபோல, கல்வி அட்டவணைகள், வரைபடங்கள், சுற்றுலாக் கையேடுகள் இவைகளுக்கெல்லாம் வரி நீக்கம் செய்யப்படடிருக்கின்றன. செங்கலும், ஓடும் தயாரிக்கின்ற களிமண்ணுக்கு வரி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறது. குலால இன மக்களின் நீண்டகாலக் கோரிக்கைகளை எல்லாம் இந்தக் களிமண்ணுக்கான வரி நீக்கத்தின் மூலம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.



நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அதுபோலவே, பழைய வெள்ளியிலான மெட்டி, கொலுசு, அரைஞான் கயி போன்றவைகளுக்கு எல்லாம் வரி இல்லை என அறிவித்திருக்கிறார்கள். மரவள்ளிக் கிழங்காலான கப்பி, திப ஆகியவைகளுக்கு வரி இல்லை.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: உரையை முடியுங்கள்.

**திரு. வி.பி. இராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி பல்வேறு வரிகளை எல்லாம் நீக்கி ஒரு அற்புதமான பட்ஜெட்டைத் தந்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லி, ஒரே ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

தமிழ்நாடு நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை, அதாவது, கன்னியாகுமரி மாவட்டத்தில் பொய்கையாறு திட்டம் என்று தொடங்கி நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தில் அடவிநயினார் கோவில், வடக்குப் பச்சையாறு, நம்பியாறு, கொடுமுடியாறு என்று திட்டங்கள் எல்லாம் தந்து, அதைப்போல காமராசர் மாவட்டத்தில் கிருதமால் அணைக்கட்டுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைத் தந்து, மதுரை மாவட்டத்தில் சோத்துப்பாறை அணைத் திட்டத்தைத் தந்து, வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் மோர்தானா திட்டம், ராஜாதோப்பு கிணறு திட்டங்களைத் தந்து, வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் குடியாத்தம் பக்கத்தில் மலட்டாற்றிலே ஒரு திட்டம், செய்யாற்றின் குறுக்கே ஒரு திட்டம், அதைப்போல அரூர் பக்கத்தில் வரட்டாற்றின் குறுக்கே ஒரு திட்டம் என்று இவைகளை தந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் ஒரு பணிவான வேண்டுகோள். 1989-ம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினராக நான் வந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடமும் என்னுடைய தொகுதியில் மிகப்பெரிய திட்டமான சாஸ்தாகோயில் அணைத் திட்டத்திற்கு மனு தந்தேன். அந்த மனு தந்ததன் விளைவாக, இந்த எளியவன் வேண்டுகோளை ஏற்று, 1992-ஆம் ஆண்டிலிருந்து மழை நீர் அளவுகள் கணக்கிடப்பட்டு, 5 ஆண்டுகளாக மழை நீர் அளவுகள் கணக்கிடப்பட்டு முடிந்துவிட்ட

... விருதுநகர் திட்டமிடல் அலுவலகத்திலிருந்து அந்த பேப்பா... கொஞ்சமாக நடவடிக்கையெடுக்கப்பட்டு, இன்றைக்கு 15 கோடியே 30 லட்சம் ரூபாய் செலவில் அதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டு, 1440 ஏக்கர் பாசனம் பெறுகிற வகையில் அற்புதமாக அந்த திட்டம் தயாரிக்கப்பட்டு, இன்றைக்கு அந்தப் பேப்பர் வந்து கொண்டிருக்கிறது. நான் இந்த பட்ஜெட்டிலே சேர்க்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர்களிடம் வலியுறுத்தினேன். அது முடியாது என்று கூறி, அடுத்த நிதிநிலை அறிக்கையில் சேர்ப்பேன் என்று உறுதி தந்திருக்கிறார்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு வணக்கத்தைச் சொல்லி, அடுத்த பட்ஜெட்டிலாவது நீங்கள் அதைச் சேர்க்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். காமராசா மாவட்டம் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தத்திட்டம் நீர்ப்பாசனத்திற்கு உதவுகிறதோ இல்லையோ, எங்கள் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காவது நிச்சயமாகப் பயன்படும். ஆகவே, இந்த சாஸ்தாகோயில் அணைத் திட்டத்தை எங்களுக்கு குடிநீர்த் திட்டத்திற்கு ஒரு வாய்ப்பு அளிக்கிற வகையில் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். இந்த நேரத்தில் ஒரு சின்ன வேண்டுகோள். இராஜபாளையத்தில் வறட்சியின் காரணமாக, புயல் காரணமாக தென்னை மரங்கள் எல்லாம் கருகி பட்டு போய் இருக்கின்றன. கடந்த கால ஆட்சியாளர்கள் தென்னை மரங்களிலிருந்து உற்பத்தியாகிற தேங்காய்க்கு, அவர்கள் செஸ் வரி என்று போட்டிருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் சொல்லி அது நிறுத்தப்பட்ட பிறகு, ஜெயலலிதா காலத்தில் அந்த வரி போடப்பட்டதற்கு என்ன காரணம் என்று துருவிப் பார்த்தால், அவர்கள் கேட்ட நன்கொடையை, அவர்கள் கேட்ட இலஞ்சத்தைக் கொடுக்க மறுத்த காரணத்தால், வேண்டுமென்றே 1995 ஆம் ஆண்டு அந்த வரி போடப்பட்டிருக்கிறது. அந்த 1% செஸ் வரியைத் தாங்க முடியாத நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள். அந்த செஸ் வரி மதுரை மாவட்டத்திற்கு இல்லை, எங்களுக்கு தென் பக்கத்திலே இருக்கிற நெல்லை மாவட்டத்தில் இல்லை. ஆனால், காமராஜர் மாவட்டத்திற்கு மட்டும் அந்த செஸ் வரி என்று சொல்வது நியாயமாக இல்லை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்



அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கலந்து பேசி, அந்த 1% செஸ் வரியை நீங்கள் நீக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் இதை நீக்க முடியும் என்று விவசாயிகள் நம்பி வந்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர அவர்கள் 1% செஸ் வரியை நீக்க வேணடுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த மாமன்றத்தில் பேசுகிற வாய்ப்பினை உருவாக்கி தந்த என் தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய உரையை ஆற்றுவதற்கு அனுமதித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலில் சேலம் மாவட்டத்தில் பெரியார் பல்கலைக்கழகம் தொடங்க அனுமதி அளித்தமைக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக, மாவட்ட மக்களின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பல்கலைக்கழகம் என்னுடைய தொகுதிக்குட்பட்ட அரசினர் பொறியியல் கல்லூரி வளாகத்திலே தொடங்கப்பட வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையையும் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கான இடமும், சகல வசதிகளும், அந்த அரசினர் பொறியியல் கல்லூரியின் வளாகத்தில் இருக்கின்றன என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நினைவுபடுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, கல்வித் துறையில் அதிக அளவில் முதலீடு செய்து பள்ளிக் கல்வியில் வேளாண்மை என்ற பிரிவை தனியாக ஏற்படுத்தியமைக்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர்களுக்கு என்ன அதிகாரம் என்று வரையறுக்கப்படாமல் இருக்கிறது. ஒன்றியத் தலைவர்களும், உள்ளாட்சி மன்றத் தலைவர்களும், அவர்களுக்கு வேண்டிய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டபோதிலும், ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர்களுக்கு என்ன அதிகாரங்கள் என்று அவர்கள் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவற்றையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனித்து அவர்களுக்குத் தேவையான அதிகாரங்களை வழங்குவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

அதேபோல், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களை கடந்த காலத்திலே இருந்ததைப் போன்று, நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையையும், அதற்குத் தேவையான சட்டத் திருத்தத்தையும் இந்த அவையிலே கொண்டுவரவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய பேருந்து கட்டுமானத்திற்கான தொழில்கூடத்தை எனது ஓமலூர் தொகுதியிலே அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஏன என்று சொன்னால், சேலம் மாவட்டம் 'ஆட்டோமொபைல் இண்டஸ்ட்ரியிலே' மிகவும் பிரசித்தி பெற்று விளங்கி வருகிறது. எனவே, அங்கே இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்தினால் மிகவும் தரமுள்ள பேருந்துகளைத் தர முடியும் என்பதால், அங்கே இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், சிறிய வேன்கள் போன்றவைகளுக்கு அனுமதி அளித்திருக்கிறீர்கள். தற்போது 16 கிலோ மீட்டர் என்று சொல்லியிருப்பதை 30 கிலோ மீட்டராக மாற்றி, அதற்கான அனுமதியை வழங்கவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்திலே ஓமலூரில் அண்ணா போக்குவரத்துக் கழகப் பணிமனை ஒன்று துவங்கப்பட்டது. அந்தப் பணிமனை எந்த முன்னறிவிப்பும் இல்லாமல், எந்த ஒரு விளம்பரமும் இல்லாமல், மக்களுக்குத் தெரிவிக்கப்படாமல் துவக்கப்பட்டது. அரசின் நலத் திட்டங்கள் மக்களுக்கு நன்றாக விளம்பரப்படுத்தப்படவேண்டும்



என்பதுதான் எங்களைப் போன்றவர்களுடைய ஆவலாகும். ஏன் என்று சொன்னால், நாங்கள் செய்த பல்வேறு மிகப்பெரிய திட்டங்களை விளம்பரப்படுத்தாத காரணத்தால்தான், அந்த விளம்பரக்கலை எங்களுக்கு வராத காரணத்தால்தான், 1967-லே இழந்த காங்கிரஸ் ஆட்சியை இன்னும் கொண்டுவர முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த அரசாங்கமாவது, மக்கள் நலத் திட்டங்களை மக்களுக்கு முறையாகத் தெரியப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சிக்கன நடவடிக்கை என்ற பெயரால் முழுமையான இருட்டடிப்பு நடைபெற்று வருகிறது. அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலத்திலே, தமிழ்நாடு மேக்னசைட் என்ற கனிம நிறுவனம் இயங்கி வருகிறது. 1976 முதல் இந்த நிறுவனம் அரசு சார்பாக அங்கே இயங்கி வருகிறது. சுமார் 1,500 பணியாளர்கள் அதில் பணியாற்றுகிறார்கள். சமீபத்திலே வன இலாக்காவின் உத்தரவுப்படி இந்த நிறுவனம் மூடப்பட்டிருக்கிறது. அரசு இதில் தலையிட்டு, இந்த 1,500 பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, ஓமலூர் தொகுதியிலே, 60, 70 ஆண்டுகளாக நடைபெற்று வந்த தோல் சந்தை தற்போது கோர்ட் உத்தரவுப்படி மூடப்பட்டிருக்கிறது. அங்கே வாரந்தோறும் சுமார் 2 கோடி ரூபாய் வரையில் வர்த்தகம் நடைபெற்று வந்தது. ஆண்டு ஒன்றுக்கு, 5 லட்சம் முதல் 8 லட்சம் வரை, இந்தப் பேரூராட்சிக்கு வருமானம் வந்து கொண்டிருந்தது. அங்கே நேரடியாக 5 ஆயிரம் குடும்பங்களும், மறைமுகமாக 20 ஆயிரம் குடும்பங்களும் வேலைவாய்ப்பின்றி தவித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு, கோர்ட் தடையை நீக்கி, தோல் சந்தையை சுகாதாரமான முறையில் செயல்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், சாலைகளை எடுத்துக் கொண்டால், தமிழகத்திலே உள்ள அனைத்து தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளையும் இருவழிப் பாதையாக மாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தேசிய நெடுஞ்சாலைகளிலே ஒவ்வொரு 100 கிலோ மீட்டருக்கும் ஒரு நெடுஞ்சாலை ஆஸ்பத்திரி ஒன்றை ஏற்படுத்தி, அதற்குத்

தேவையான ஆம்புலன்ஸ் வேன் உட்பட அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான செலவினங்களை இன்சூரன்ஸ் கம்பெனிகளிடமிருந்தும், சாலை வரியிலிருந்தும் ஈடுகட்டலாம் என்று அரசுக்கு என்னுடைய யோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நலனுக்காக இந்த அரசு ஓமலூர் தொகுதியில் உள்ள கோவில்பாடி, கண்ணம்பாடி வீராச்சூர், பூமாத்தூர் ஆகிய கிராமங்களுக்கு, அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாது இருக்கின்ற சூழ்நிலையிலே, அடிப்படை வசதிகளை இந்த அரசு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சேலம் மாவட்ட எல்லையான ராமமூர்த்தி நகர், வேப்பாடி ஆற்றின் குறுக்கே சிறிதளவு மழை பெய்தாலும் மழைநீர் அதிக வேகத்துடன் கடப்பதால், குழாய்கள் மழை வெள்ளத்தால் இழுத்துச் செல்வதும், அதனைச் சீரமைப்பதும் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகின்ற நிகழ்ச்சியாக இருக்கின்றது. எனவே, ரூபாய் 30 லட்சம் செலவில் ஒரு உயர்மட்டப் பாலத்தைக் கட்டினால்தான் இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வாக இருக்கும். இதற்கென அரசாணை எண் 257, நாள் 24-3-1988-லே இடம் பெற்றிருந்தும்கூட, இன்னும் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஆகவே, இந்த ஆண்டாவது, நிதியை ஒதுக்கி, அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, ஓமலூர் தொகுதி மக்களின் மிக முக்கியமான பிரச்சினையாக இருப்பது ஓமலூர்-மேட்டூர் சாலையிலே உள்ள ரயில்வே கேட் ஆகும். இப்போது சேலம்-பெங்களூர் இடையே அதிக ரயில்வேப் போக்குவரத்து இருப்பதாலும், சேலம்-மேட்டூர் இடையே கூட்ஸ் ரயில் போக்குவரத்து அதிகம் இருப்பதாலும், அந்த ரயில்வே கேட் ஒரு நாளில் பெரும்பாலான நேரங்களிலே மூடியே இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதி மக்களின் இந்தக் கோரிக்கையை நிவர்த்தி செய்ய அந்த இடத்திலே மேம்பாலம் ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே ஓமலூர் நகரிலே போக்குவரத்து அதிகமாக இருப்பதால், போக்குவரத்துக்கு என்று தனியாக காவல் பிரிவு ஒன்றை ஏற்படுத்தி, அந்தப் பணியினை மேற்கொள்ளவேண்டும்



என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியிலே விபத்து ஏற்பட்டால் வாகனங்களை அப்புறப்படுத்தத் தேவையான 'ஆக்சிடென்ட் கிரேன்' என்கிற இயந்திரத்தையும் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வருவாய்த் துறையிலே உள்ள பல கோப்புகளை கணிப்பொறி இயந்திரங்களின் மூலம் இயக்கவேண்டும். அங்கே தேவையற்ற காலதாமதத்தைத் தவிர்க்கவும், மக்களுக்குத் தேவையான சான்றிதழ்கள் உரிய காலத்திலே வழங்குதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு இது எளிதாக இருக்கும் என்று குறிப்பிடுகிறேன்.

அதைப்போலவே, நிர்வாகம் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்ளும் வகையிலே தகவல் பெறும் உரிமைச்சட்டம் இயற்றும் அரசின் முடிவு வரவேற்கத்தக்க ஒன்றாகும். ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறும் மனுநீதித் திட்டம் ஏதோ ஒரு சம்பிரதாயமான நிகழ்ச்சியாகத்தான் நடைபெற்று வருகிறது. இது தொடர்பான பின் நடவடிக்கைகள் என்ன என்று மக்களுக்குத் தெரிவிக்கப்படுவதில்லை. ஆகவே, அரசு இதிலே கவனம் செலுத்தி, மனுநீதித் திட்டத்திற்கான பின்விளைவுகளையும், தொடர் நடவடிக்கைகளையும் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போலவே, ஊராட்சி மன்றங்கள், தேர்தலுக்குப் பிறகு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் நடைபெறவில்லை. கடந்த காலத்தில் இருந்ததைப் போல காவல் துறை கண்காணிப்பாளரைக் கொண்டு அந்தந்த மாவட்ட சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களைக் கலந்து, மாதந்தோறும் இந்தக் கூட்டத்தைக் கூட்டினால் அவ்வப்போது ஏற்படும் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளை ஆய்வு செய்ய முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-10

அதைப்போலவே, சிவில் சப்ளை என்ற அமைப்பு, மாவட்ட அளவில் ஒரு கண்காணிப்புக் குழு ஏற்படுத்தப்பட வேண்டும். அவ்வப்போது வரும் புகார்களை மாதந்தோறும் நாம் விசாரித்து, நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு கிராமம் என்று இருப்பதை மாற்றி ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கிராமம் என்று மாற்றிக் கொடுத்தால் மிகவும் பின்தங்கிய கிராமங்களை முன்னேற்றுவதற்கான வழிகோலாக அமையும். இந்தக் கிராமத்தை தேர்வு செய்யும் பொறுப்பை சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே முழுமையாக விட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பாசன வசதியைப் பொறுத்தவரையில், ஓமலூர் தொகுதியில் பல்வேறு நீர்வரத்துக்கள் இருக்கின்றன. இருந்தபோதிலும் அவை முறையாக சேமிப்பின்றி, ஆற்றிலே கலக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. தொப்பையாற்றின் குறுக்கே அமைந்துள்ள அணையிலிருந்து தண்ணீர் பெறும் கால்வாயை அமைத்து, சரபங்கா நதியிலிருந்து அந்த நீரைக் கலக்கும்படி செய்தால், சுமார் ஆயிரம் ஏக்கர் நிலம் நீர்ப்பாசன வசதி பெறும். அதேபோல சேர்வராயன் மலையடிவாரத்தில் காமலாபுரம் ஊராட்சியில் உள்ள நான்குகால் பாலம் என்ற இடத்தில் ஒரு சிறிய நீர்த் தேக்கம் கட்டி அந்த மலையிலிருந்து வரும் நீரைத் தேக்கி வைத்தால், அந்தப் பகுதி முழுவதும் பாசனத்திற்கு ஒரு சிறப்பான ஏற்பாடாக அமையும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக இந்த அரசு மேற்கொண்டுள்ள முயற்சி பாராட்டத்தக்கது. இருந்த போதிலும் ஜாதிவாரியாக ஒரு ஜனத்தொகை கணக்கெடுத்து, அந்த அடிப்படையில் சலுகைகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி வளர்ச்சி மேம்பாடுத் திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ரூ.25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன். அரசு அதிகாரிகளின் கவனத்திற்கு எட்டாத பல்வேறு குக்கிராமங்களுக்கு அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதற்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமையும என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன்.



பத்திரப் பதிவுத் துறையில் அரசு நவீன கணிப்பொறி இயந்திரத்தைக் கொண்டுவந்து, விரைவிலே அவற்றுக்கான பதிவுகளை கணிப்பொறி மூலமாக பதிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முத்திரை வரி 13 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைத்தால் இங்கே பதிவு செய்யக்கூடிய பத்திரங்கள் வெளி மாநிலங்களிலே சென்று பதிவு செய்வதைத் தடுக்கும் முயற்சியாகவும், இந்த மாநிலத்திற்கு வருவாயை ஏற்படுத்தமுடியும் என்பதையும் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல மகளிருக்காக இயங்கும் காவல் நிலையங்கள் மாவட்டந்தோறும் இருப்பதை மாற்றி, தாலுக்கா அளவிலே மகளிர் கண்காணிப்பு நிலையங்கள், போலீஸ் காவல் நிலையங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்புத் தந்த சபாநாயகருக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக எனது கருத்துக்களைக் கூறுவதற்கு நான் ஆசைப்படுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸ் நெஞ்சார வரவேற்கிறது என்பதனை நான் இங்கே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையினுடைய கடைசி அத்தியாயத்தில் மிகவும் உருக்கமாகக் கூறியிருக்கிறார்கள். "என் காலத்தில் அமைதியானதும், அரிய வளம் கொழிப்பதும், அறிவாற்றல் சிறந்தோங்குவதுமான தமிழ்ச் சமுதாயத்தைக் காண வேண்டுமென்பதில் தணியாத ஆர்வத்தின் காரணமாக இந்த நிதிநிலை அறிக்கையை நான் தயாரித்திருக்கிறேன்" என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனை நாம் பார்க்கின்றபோது இந்த நிதிநிலை அறிக்கை என்பது அறிவுப்பூர்வமானது மட்டுமல்ல, ஆக்கப்பூர்வமானது மட்டுமல்ல, அது உணர்ச்சிப்பூர்வமானதாகவும் இருக்கிறது என்பதனைச் சொல்லியே ஆக வேண்டியிருக்கிறது. எனவே, அந்த வகையில் இந்த நிதிநிலை அறிக்கையிலே பாராட்டப்பட வேண்டிய அம்சங்கள் ஏராளமாக இருக்கின்றன.

ஒரு சிலவற்றை மட்டுமே இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால், மற்றவற்றை எல்லாம் பல உறுப்பினர்கள் இங்கே பாராட்டிச் சொல்லியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-15

குறிப்பாக, 234 தொகுதிகளிலும் மாதிரிக் கிராமம், சேலத்திலே தந்தை பெரியார் பெயரால் ஒரு பல்கலைக் கழகம், சென்னையிலே கம்ப்யூட்டர் பல்கலைக்கழகம், 10,000 சாலைப் பணியாளர்கள் நியமனம். புதிதாக 5,000 பெண் காவலர்கள் நியமனம். 168 தொடக்கப் பள்ளிகள் ஆரம்பம், தியாகிகளுக்கு ஓய்வூதியம் ரூ.500/-, உள்ளாட்சிகளுக்கு அதிகபட்சமான நிதி ஒதுக்கீடு ரூ.528 கோடி, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 5-ஆம் வகுப்பு வரை தமிழ் கட்டாயப் பாடம், தொகுதி மேம்பாட்டிற்கு ரூபாய் 25 இலட்சம் என்கின்ற இந்த அறிவிப்புகள் எல்லாம், ஏழையெளிய, பாமர மக்களுக்கு ஒரு நல்ல வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது என்பதை நான் இங்கே கூற ஆசைப்படுகிறேன். அதேபோல, இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒரு மாற்றத்தையும் எங்களால் காண முடிகிறது. குறிப்பாக, முதல்வருடைய சமூக நீதிச் சிந்தனையிலே ஒரு வரவேற்கத்தக்க மாற்றம் வந்திருப்பதை இந்த நிதிநிலை அறிக்கையின் மூலமாக எங்களால் தெளிவாக உணர முடிகிறது. அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள், தாழ்த்தப்பட்ட, பிறபடுத்தப்பட்ட மக்களின் உயர்வுக்கும், உரிமைக்கும் வழிவகுக்கக்கூடிய ஆற்றலும், அக்கறையும் உள்ளவர்கள் முன்னேறிய சமுதாயத்தில் இருந்தால் அவர்களையும் அடையாளம் கண்டுபிடித்து, அரவணைத்து, அதன் மூலமாக ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காணுவேன் என்று கூறியிருக்கின்றார்கள். அது மட்டுமல்ல, அதனுடைய விளைவாக முன்னேறிய வகுப்பில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு இலவச வீட்டு மனை வழங்கப்படும் என்கின்ற ஒரு பாராட்டக்கூடிய அறிவிப்பையும் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். நாங்கள் கருதுகிறோம், வலிமையான பாரதம், வளமையான தமிழகம் என்கின்ற தேசிய நோக்குடைய எங்களது மாநிலக் கட்சியோடு தொடர்பு வைத்துள்ள முதல்வர், சமூக நீதிச் சிந்தனையிலே மேலும் ஒரு பரந்த பகுதியைப் பார்க்க முன்வந்திருப்பது எங்களுடைய பாராட்டுதலுக்குரியது என்பதனை இந்த நேரத்திலே அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.



அதேபோல், முதலமைச்சர் அவர்கள் 250 கோடி ரூபாய்க்கு புது வரிகளை அறிவித்திருக்கிறார்கள். ஆனால், புதிய வரிகளால் ஏழையெளிய மக்களுக்கு பெரிய துன்பம் ஏதும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. குறிப்பாக, குடிமக்களிடமிருந்துதான் இந்த வரிகள், அதாவது, குடிக்கிறவர்களிடமிருந்துதான் இந்த வரிகளைப் பெறுவதற்கு முதல்வர் அவர்கள் முயற்சிகளைச செய்திருக்கிறார்கள். அதனால், அந்த வகையிலே துன்பம் ஏதும் நிகழாது என்பது எங்களுக்குத் தெரிகிறது. கடைசியாகப் பார்க்கும்போது, 498 கோடி ரூபாய் நிகரப் பற்றாக்குறையாக வருகிறது. அது சமாளிக்கக் கூடியது. எனவே, அந்த வகையிலும் முதல்வரைப் பாராட்டுவதற்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அதேபோல், இந்த நிதிநிலை அறிக்கையின் மூலமாக நாங்கள் தெரிந்துக் கொள்ள வேண்டிய சில அம்சங்கள் இருக்கின்றன. தீர்க்கப்பட வேண்டிய சில பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக, சென்ற நிதிநிலை அறிக்கையின்போது, முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். மைய அரசாங்கத்தினுடைய முதலீடு தமிழகத்திலே 5 விழுக்காடிற்கும் குறைவாக இருக்கிறது. எனவே, மைய அரசாங்கம் வருங்காலத்திலாவது, தமிழகத்திலே புதிய முதலீடுகளைச் செய்ய முன்வர வேண்டும். இதனுடைய அடிப்படையிலே தூத்துக்குடி துறைமுக விரிவாக்கத் திட்டத்தையும், சேது சமுத்திரத் திட்டத்தையும் நாங்கள் கேட்பதாக இருக்கிறோம் என்று சென்ற நிதி ஆண்டிலே கூறி இருந்தார்கள். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையிலே மைய அரசினுடைய முதலீடு அதிகப்படுத்தப்பட்டிருப்பதாகவும் நமக்குத் தெரியவில்லை. தூத்துக்குடி துறைமுக விரிவாக்கத் திட்டமும், சேது சமுத்திரத் திட்டமும் வந்திருப்பதாகவும் தெரியவில்லை. எனவே, அது சம்பந்தமாக மாநில அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறோம்.

அதேபோல, சென்ற நிதிநிலை அறிக்கையிலே காவிரிப் பிரச்சினைப் பற்றி முதல்வர் தெளிவாக கூறியிருந்தார்கள். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையிலே காவிரிப் பிரச்சினைப் பற்றி எந்த வரியும் காணப்படவில்லை. என்ன காரணம் என்பதனை நான் அறிய விரும்புகிறேன். ஏனென்றால், இப்போது போதுமான தண்ணீர் நமக்கு இருக்கிறது. இந்த நேரத்திலேயே காவிரிப் பிரச்சினையை நாம் பேசித் தீர்த்துக் கொள்வது நன்றாக இருக்கும். கடந்த 6, 7

ஆண்டுகளாகவே காவிரிப் பிரச்சினை எப்படிப் போகிறது என்றால், விவசாயத்திற்குத் தண்ணீர் இல்லாத நேரங்களிலேதான் இரண்டு அரசாங்கங்களும் காவிரிப் பிரச்சினையிலே கவனம் செலுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை வருகிறதேயொழிய, இயற்கையின் அருளால் மழை பெய்து, ஏராளமான தண்ணீர் இருக்கிற நேரத்திலே காவிரிப் பிரச்சினையைப் பேசுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். முடித்துக் கொள்வதற்கும் நாம் முயற்சி செய்ய வேண்டும். இன்றைக்கு கங்கை நதியைப் பற்றிய பிரச்சினை வங்காளத்தினுடைய முதலமைச்சர் திரு. ஜோதிபாசுவை வைத்துக் கொண்டு தீர்த்துக்கொள்ளப்படுகிறது. ஒரு வெளிநாட்டினுடைய அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டு, இன்றைக்கு முடிகிறது. மாநில முதலமைச்சரே போய் தீர்த்துக்கொள்கிறார். ஆனால், உள்நாட்டிலே இருக்கிற காவிரிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாம் காலம் அதிகமாக எடுத்துக்கொள்கிறோம். இடையிலே இருக்கின்ற பிரச்சினை என்ன என்பதனை முதல்வர் அவர்கள் உணர்ந்து, தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதேபோல, சென்ற நிதிநிலை அறிக்கையிலே வீராணம் திட்டத்திற்காக ரூ.30,000 ஒதுக்கப்பட்டிருந்தது. வீராணத்தை ஆழப்படுத்தி அதிலே இருக்கிற நீரை அந்த மாவட்ட மக்களுக்கு குடிதண்ணீராக வழங்குவதற்கான ஒரு திட்டம் இருப்பதாக பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கூறியிருந்தார்கள். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையிலே வீராணம் திட்டத்தைப்பற்றி ஒரு வார்த்தைக்கூட இல்லை. அந்தத் திட்டம் உங்களுடைய நினைவிலே இருக்கிறதா, செயல்படுத்தக் கூடிய ஆர்வம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 1-20

வேளாண்மைக்காக 343 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 85% மக்கள் எந்தத் துறையிலே இருக்கிறார்களோ, எந்தத் தொழிலை தங்களுடைய குலத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்களோ அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை மிக மிகச் சொற்பம் என்பதை இந்தப் பேரவையிலே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்ததாக, நவீன தொழில் நுட்பம் எதுவும் விவசாயத் துறையிலே நாம் அறிமுகப்படுத்தவில்லை. இரண்டு நிதிநிலை அறிக்கைகளிலுமே,



சென்ற ஆண்டும் சரி, இந்த ஆண்டும் சரி நவீன தொழில் நுட்பத்தை விவசாயத்திலே அறிமுகப்படுத்த வேண்டிய ஒரு கட்டாயம் இருந்தும்கூட, நமது அரசாங்கம் அதனை அறிமுகப்படுத்தவில்லை. எனவே, அதற்கான ஒரு மாற்று ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவு உற்பத்தியை நாம் பார்ப்போமேயானல் நவீன தொழில் நுட்பம் அதிலே இல்லாத காரணத்தினால் பசுமைப் புரட்சி இருந்த காலத்தில் இருந்த ஒரு முன்னேற்றம் இன்றைய நிலையிலே இல்லை என்பதனை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். குறிப்பாக, 1994-95-ல் 97.52 இலட்சம் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால், 1995-96-ல் 72.50 இலட்சம் டன்னாக அது குறைந்துவிட்டது. ஏறக்குறைய 20 இலட்சம் டன்னுக்கு மேலாக நெல் உற்பத்தி ஓராண்டிலே குறைந்து இருக்கிறது. 1996-97-ஐ எடுப்போமேயானால் அந்த உற்பத்தி மேலும் குறைந்து இருக்கிறது. எனவே, ஆண்டுக்கு ஆண்டு விவசாய உற்பத்தி குறைந்துக் கொணடே போவதற்கான காரணம் என்ன? விவசாயத் துறையிலே அதற்காக என்ன முயற்சி எடுத்து இருக்கிறார்கள்? நெல் உற்பத்தி குறையுமேயானால் அரிசி விலை அதிகரிக்கும். ஏழை மக்கள் துன்பப்படுவார்கள். எனவே, நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஒரு முயற்சியை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

போன நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருந்தீர்கள்; இஸ்ரேல் நாட்டிலே தண்ணீர் வளம் குறைவாக இருக்கிறது. ஆனால், அந்த குறைவான தண்ணீர் வளத்தைப் பயன்படுத்தி அதிகமான நெல்லை உற்பத்தி செய்கிறார்கள். எனவே தமிழகத்திலிருந்து விஞ்ஞானிகளை அனுப்பி அதனைப் பின்பற்றி அதே நடைமுறையிலே தமிழகத்திலே நெல் உற்பத்தி அதிகப்படுத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டது. ஆனால், இஸ்ரேல் நாட்டு அனுபவத்தை நாம் பெறறோமா, அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவா, அதனுடைய நிலை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அதேபோல, கல்விக்கும் அதிகப்படியான தொகையினை நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களும் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், கல்வியைப் பொறுத்தவரை நாம் அடைய வேண்டிய இலக்கு வெகு

தொலைவிலே இருக்கிறது. சென்ற நிதி ஆண்டிலே 99 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நாம் மாற்றியிருக்கிறோம். ஆனால், இந்த நிதியாண்டில் 60 நடுநிலை பள்ளிகள்தான் உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. 39 பள்ளிகள் குறைவடைந்திருக்கின்றன. சென்ற ஆண்டோடு ஒப்பிடுகின்றபோது நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்கக்கூடிய விகிதாச்சாரம் குறைந்திருக்கிறது. அதற்கான காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன். அதேபோல, 81 உயர்நிலைப் பள்ளிகள் சென்ற ஆண்டு மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. ஆனால், இந்த ஆண்டு 75 உயர்நிலைப் பள்ளிகள்தான் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டிருக்கின்றன. அதிலும் குறைவுதான். எனவே, இந்த விஷயத்திலே ஒரு சமரசம் கூடாது. எந்த அளவுக்கு கீழ் நிலை பள்ளிக்கூடங்களை மேல்நிலைப் பள்ளிக்கூடங்களாக மாற்ற முடியுமோ, அதற்கான முதன்மையான முன்னுரிமையை இந்த அரசாங்கம் வழங்க வேண்டும்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தமிழகத்திலே பள்ளிக்கூடங்களை ஆரம்பிப்பதை கோயில்களை ஆரம்பிப்பதைப் போல, ஆலயங்களை போல நினைத்து ஆரம்பித்தார்கள். எனவே. அந்த வகையிலே நீங்கள் ஒவ்வொரு ஆண்டும் அதனுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்ததாக, கல்வித் துறையிலே, ஆசிரியர் பயிற்சி பயின்ற மாணவர்கள், இடையிலே நின்று போனவர்கள், அதனை முழுமையாக முடிக்க முடியாதவர்கள், தேர்வு எழுத முடியாதவர்கள் என்று 50,000 பேர் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இந்த அரசாங்கம் நினைத்தால் அதனைச் சரி செய்ய முடியும். பல பிரச்சினைகளைச் சரி செய்திருக்கிற முதலமைச்சரால், கல்வி அமைச்சரால் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியாது என்று சொன்னால் அது ஏற்றுக்கொள்ளக்கூடிய விஷயம் அல்ல. ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை, அந்தப் பிரச்சினை அப்படியே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.



**பிற்பகல் 1-25**

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் இதற்கு முன்னாலும் இந்த சட்டமன்றத்திலே எடுத்துவைத்த அந்தப் பிரச்சினையை இப்போதும் எடுத்துச் சொல்லி, இதை எப்படியும் அரசு தீர்க்க வேண்டுமென்று வலியுறுத்தித் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட 2 நாட்களுக்கு முன்னால் தொலைக்காட்சியிலே பேசுகிறபோது இந்தப் பிரச்சினையை எடுத்துச் சொன்னதை நான் கேட்டேன். உண்மையாகவே பிரச்சினையினுடைய அளவு சற்று குறைவு. ஆனால், பிரச்சினையினுடைய முடிவு உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு காரணமாக வேறு வழியில்லாமல் தடைப்பட்டிருக்கிறது. அதற்கு நான் விளக்கம் சொல்ல வேண்டுமானால், முறை தவறாக 172 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள், மொத்த காண்டிராக்ட் மூலமாக ஒரு குறிப்பிட்ட காலத்தில் வழங்கப்பட்டது. அப்படி வழங்கப்பட்ட அந்தப் பள்ளிகளுக்கு தகுந்த இட வசதி, பயிற்சிப் பள்ளிகள், ஆசிரியர்கள், இந்த அமைப்புகள் எதுவும் முறையாக அன்று அமையவில்லை. அந்தப் பள்ளிகளில் சேர்ந்ததாக சிலபேருடைய பெயர் பட்டியிலில் இருந்ததே தவிர, சேர்ந்தவர்களுக்கு எந்தப் பயிற்சியும் இல்லை. இவையெல்லாம் நீதிமன்றத்திலே வந்த வழக்குகள் மூலமாக முதல் கட்டத்தில் தற்காலிக அங்கீகாரம் உயர்நீதிமன்றத்தாலே வழங்கப்பட்டது. அடுத்தக் கட்டத்தில் அந்த அங்கீகாரமும் உயர்நீதிமன்றத்தாலேயே ரத்து செய்யப்பட்டு, பள்ளிக்கூடங்கள் மூடப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டு அன்றைக்கு இருந்த அரசு வேறு வழியில்லாமல் வாங்கிய தொகைக்கு பதில் சொல்லக்கூட வழியில்லாமல் அந்தப் பள்ளிக்கூடங்களை எல்லாம் மூடுவதற்கு முன்வந்தது.

மூடப்பட்ட பள்ளிகளுடைய மாணவர்களுக்கு ஏதேனும் ஒரு வகையில் அந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது என்ற உணர்வோடு அவர்களுக்கு ஒரு மறு பயிற்சி வழங்கலாம் என்ற ஒரு முயற்சியில் ஈடுபட்டது. அந்த மறு பயிற்சி வழங்குவதற்கு மேல்நிலைப் பள்ளிக்கூடங்களில், ஏற்கெனவே ஆசிரியர் பயிற்சி நடத்திய, அதுவும் பயிற்சி சரியாக நடைபெறவில்லை. எனினும், நடத்தியதாக இருந்த அந்தக் குறிப்பை வைத்து மேல்நிலைப் பள்ளிக்கூடங்களில் இவர்களுக்கு எல்லாம் ஒரு குறுகிய காலப் பயிற்சி தருவதாக அரசு

அறிவித்து, அப்படி அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில் பலரையும் சேர்க்க முன் வந்தது. அந்த நேரத்தில் ஏற்கெனவே தனியார் உரிமை பெற்று இருந்த பள்ளிக்கூட நிர்வாகிகளிலே சிலர் நீதி மன்றத்திலே வழக்குப் போட்டார்கள். நாங்கள் நடத்திய பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டிருக்கின்றன; இவர்களுக்கு இப்படி மேல்நிலைப் பள்ளிகளில் ஒரு குறுகிய காலப் பயிற்சி வழங்குவது என்பது சரியல்ல என்று அந்த வழக்குக்கு உயர்நீதிமன்றத்திலேயே ஒரு தீர்ப்பு கிடைத்தது. மாணவர்களுக்கு அப்படி ஒரு பயிற்சி வழங்கக்கூடாது என்று அதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்கு அரசு சென்று--நான் சொல்வதிலே ஏதேனும் ஒன்றிரண்டு கருத்தில் குறைபாடுகள் இருக்குமானால் மறுபடியும் கல்வித் துறையைப் பற்றி வாதிக்கிறபோது தவறு இருந்தால் நான் திருத்திக் கூடச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.-- உச்ச நீதிமன்றத்திலே வழங்கிய தீர்ப்பில், உயர்நீதிமன்றத்தில் வழங்கிய தீர்ப்பு முடிவானது. அதை மாற்றக்கூடாது என்று சொல்லிவிட்டதால், இவர்களுக்கு அந்த மறு பயிற்சி அளிக்கும் வாய்ப்பும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் காரணமாக இப்போது இயலாத நிலை இருக்கிறது.

இரண்டாவது, அரசுப் பள்ளிகளில், பயிற்சிப் பள்ளிகளில் படித்த சில மாணவர்களுக்குக்கூடத் தேர்வு முடிவு சொல்ல முடியாத நிலைமை ஏற்கெனவே இருந்தது. உயர்நீதி மன்றத்திலே ஏற்கெனவே அவர்கள், அரசுப் பள்ளிகளில் படித்துத் தேர்வு எழுதியவர்கள், அவர்களுக்கு அந்த முடிவு சொல்ல வேண்டும், வெற்றியா; தோல்வியா என்று முடிவு சொல்ல வேண்டுமென்று உயர்நீதிமன்றத்திற்கு அரசு வேண்டுகோள் விடுத்து, அந்த வேண்டுகோள் ஏற்கப்பட்டு, அவர்கள் 500, 1000 பேர்களுக்கு அவர்களுடைய தேர்வு முடிவு அண்மையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதுவும் 50 ஆயிரம் பேர்கள் அல்ல, 40 ஆயிரம் பேர்கள் அல்ல. பாதிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை சரியான புள்ளிவிவரங்கள். அதாவது, 2 ஆண்டுகள் படித்ததாகச் சொல்லப்பட்டு முறை தவறாகச் சேர்க்கப்பட்டு இருந்த காரணத்தால் மறுக்கப்பட்டவர்கள் 23 ஆயிரம் பேர்கள்தான் அந்தப் பட்டியல். ஆகவே, 40 ஆயிரம், 50 ஆயிரம் என்று அதை உயர்த்தி ஒரு கண்ணோட்டத்தில் சொல்லுகிறபோது பெரிய பாதிப்பு என்ற உணர்வு அதிகமாக இருக்கிறது. பாதிக்கப்பட்டது உண்மையாக இருக்கலாம். ஆனால் அவர்கள் படிக்கவேயில்லை என்ற ஒரு



வாதம் இருக்கிறது. எல்லாவற்றையும்விட சுப்ரீம் கோர்ட் வழங்கிய தீர்ப்பைமீறி, உயர்நீதிமன்றத்தில்கூட ஒரு விண்ணப்பம் போட்டு ஒரு இசைவைப் பெற முடியாது. இது ஒரு இக்கட்டான நிலை. இதை அரசினுடைய நல்லெண்ணம் காரணமாக மட்டும் தீர்க்க முடியாது. அதுபற்றி மேலும் ஆராயப்படும்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனாலும் அந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் மாநில அரசாங்கம் ஒரு முடிவு எடுக்கலாம் என்கின்ற ஒரு வழியையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது பி.எட். படிக்கிறவர்கள்கூட அஞ்சல் வழி மூலமாகப் படித்து....

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் சிறிது நீடிக்கப்படுகின்றது.

**திரு. ச. அழகிரி:** பி.எட். படிக்கிறவர்கள் அஞ்சல் வழியின் மூலமாக பி.எட். படித்துத் தங்களுடைய படிப்பை முடிக்கலாம் என்று இருக்கிற ஒரு நிலை இருக்கிறது. எனவே, பாதிக்கப்பட்ட மாணவர்கள் வரையாவது அஞ்சல் வழியின் மூலமாக அவர்கள் அந்தப் படிப்பை முடித்து, அவர்களுக்கு ஒரு சான்றிதழ் வழங்கி விட்டால் அந்தப் பிரச்சினை தீர்ந்து போகும். ஏனென்றால், பழைய அரசாங்கம் அதிலே தவறு செய்தது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. எனவே அரசாங்கத்தை நம்பி அந்த மாணவர்கள் ஏமாந்து போய்விட்ட காரணத்தினால் மனிதாபிமானம் கருதி அவர்களுக்கு ஒரு மறு வாழ்வு தர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

சென்ற நிதிநிலை அறிக்கையிலே சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய கிளை மதுரையிலும், சென்னையில் டாக்டர் அம்பேத்கர் பெயரில் சட்டப் பல்கலைக்கழகமும் திருநெல்வேலியில் சட்டக் கல்லூரியும் 1996-97-ஆம் நிதியாண்டிலேயே முடிக்கப்படும் என்று முதலமைச்சரவர்கள் கூறியிருந்தார்கள். ஆனால், 9 மாதங்கள் முடிவடைந்து விட்டன. இதற்கான முயற்சிகள் பெரிதாக எடுக்கப்பட்டிருப்பதாக நமக்குத் தெரியவில்லை. காரணம், நிர்வாகத்திலே சிரமங்கள் இருப்பதாக நான் கருதுகிறேன். எனவே,

...வகளை விரைவுபடுத்த வேண்டுமென்று மாண்புமிகு ...அமைச்சரிடம் நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்திற்கு இந்த மாமன்றத்திலேயே உறுப்பினர் உட்பட அனைவரும் இருந்து சட்டம் நிறைவேற்றியிருக்கிறோம். அந்தச் சட்டத்தை அங்கீகாரம் செய்து மத்திய அரசு நமக்கு அனுப்பவில்லை. அனுப்பியவுடன் உடனடியாக அந்த வேலைகள் தொடங்கப்படும்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில் பல மாற்றங்களை நாம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவினுடைய ஆடம்பர விமானத்தை விற்று அதன் மூலமாக ஆம்புலன்ஸ் வண்டிகள் வாங்கப்படும் என்று நாம் பேசியிருக்கிறோம். ஆனால் அந்த ஆம்புலன்ஸ் வண்டிகள் வாங்கப்பட்டிருக்கின்றனவா, விமானம் விற்பனை செய்யப்பட்டு விட்டதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த விமானத்தை விற்பதற்கு நாம் விளம்பரம் எல்லாம் செய்தோம். ஆனால் யாரும் வாங்குவதற்கு வரவில்லை. ஒருசமயம் அது முன்னாள் முதலமைச்சர் பயன்படுத்தியது என்ற காரணமோ என்னமோ எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று, விமானம் விற்பதற்காக குளோபல் டெண்டர்கூடப் போடப்பட்டிருக்கிறது. அதுவரையிலே நம்முடைய முதலமைச்சர் காத்திராமல், அந்த விமானம் விற்கவில்லை என்று தெரிந்தவுடனே, கருணை உள்ளத்தோடு, ஆம்புலன்ஸ் வண்டிகள் வாங்குவதை நிறுத்தக் கூடாது என்று 10 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். வண்டிகள் வாங்குவதற்கான எல்லா ஏற்பாடுகளும் நடந்து விட்டன.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுமானால் அந்த முதலமைச்சருக்கேகூட, அந்தப் பழைய முதலமைச்சருக்கேகூட ஒரு சலுகை விலையிலே அதைக் கொடுத்து விடலாம். (சிரிப்பு)



**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** ஒரு கிளாரிப்பிகேஷன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் திருநெல்வேலியில் சட்டக் கல்லூரியே துவக்கப்படவில்லை என்ற ஒரு தவறானத் தகவலை இந்த மாமன்றத்திற்குத் தந்தார்கள். அது துவக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொல்லி ரொம்ப நேரம் ஆகிவிட்டது. முதலமைச்சர்கூட உங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நீங்கள் வேறு எங்கேயோ பேசிக்கொண்டிருந்தீர்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவல் என்று நான் கருதவில்லை. நிதிநிலை அறிக்கையிலே அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. விரைவில் 'ஆரம்பிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால், திருநெல்வேலியிலே வந்து நான் பார்க்கவில்லை. எனவே, அதை வைத்துத்தான், இந்த நிதி நிலை அறிக்கையை வைத்துத்தான் நான் பேசுகிறேன் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொது மருத்துவமனைகளில் மருந்துகள் வாங்குகிற விஷயத்திலே அரசாங்கம் மேலும் கவனமாக இருக்க வேண்டும். தரமான மருந்துகள் வாங்கப்படுகின்றனவா என்பதனை அந்த மருத்துவ கட்டுபாட்டு அதிகாரிகள், தரக் கட்டுபாட்டு அதிகாரிகள் கவனிக்க வேண்டும். ஏனென்றால் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் பொது மருத்துவமனைகளிலேதான் மருந்துகள் வாங்குகிறோம். தரமான மருந்துகள் கிடைப்பதில்லை என்று ஒரு பரவலான குற்றச்சாட்டு இருக்கிறது. சில மருந்துகளை நான் மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சரிடம் கூடக் கொடுத்திருக்கிறேன். எனவே, அதன்மீது அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

அதேபோல, 1996-97-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 7.5 மெகாவாட் திறனுள்ள சாத்தனூர் புனல் மின் திட்டமும், 8 மெகாவாட் திறனுள்ள கீழ்பவானி புனல் மின் திட்டமும்

தொடங்கப்படுமென்று அறிவித்திருந்தார்கள். ஆனால், அவை துவங்கப்பட்டுவிட்டனவா என்பது தெரியவில்லை. துவங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டதா என்பதும் தெரியவில்லை. அதேபோல, மரபுசாரா எரிசக்தித் திட்டம் சென்ற நிதிநிலை அறிக்கையிலே பெரிதுபடுத்தி சொல்லப்பட்டது. அதன் மூலமாக எத்தனை மெகாவாட் மின்சாரத்தை நாம் இந்த 9 மாத காலங்களிலே தயாரித்திருக்கிறோம் அல்லது மரபுசாரா எரிசக்தி மூலமாக எத்தனை புதிய திட்டங்கள் கொண்டுவரப்பட்டன என்பது இந்த நிதிநிலை அறிக்கையிலே இல்லை. எனவே, அவைகளையெல்லாம் அரசாங்கம் துரிதப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வளர்ச்சித் திட்டத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். வளர்ச்சித் திட்டங்கள் ஆமை வேகத்திலேதான் நடைபெறுகின்றன. விரைவான திட்ட வளர்ச்சி அவைகளிலேயில்லை. உதாரணமாக 1996-97-ஆம் நிதியாண்டிலே 71,597 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கும், பிற்பட்டவர்களுக்கும் கட்டித்தரப்படுமென்று நிதிநிலை அறிக்கையிலே நாம் சொல்லியிருக்கிறோம். நிதியும் ஒதுக்கியிருக்கிறோம். ஆனால், அதிலே நாம் அடைந்திருக்கின்ற இலக்கு என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன். சில இடங்களிலே நான் நேரிலே சென்று பார்க்கிறபோது, 5 சதவீதத்திலேயிருந்து 10 சதவீதம் வரைதான் அந்த வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த அளவிற்குத்தான் அவைகளிலே வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. அதே 1995-96-ஆம் ஆண்டு வேலைகளைப் பார்ப்பீர்களானால், 50 சதவீதம்கூட முடியவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கான திட்டப் பணிகளையும் சேர்த்து, இந்த ஆண்டு நாம் மேலும் 71 ஆயிரம் வீடுகள் ஒதுக்கியிருக்கிறோம். ஆக மூன்று ஆண்டுகளுடைய திட்டப் பணிகளைச் செய்யக்கூடிய திறன் நம்முடைய அரசாங்க அதிகாரிகளுக்கு இருக்கிறதா என்பதை தயவுசெய்து நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அமைச்சர் கடுமையாக வேலை செய்கிறார். அதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்தேயில்லை. முதலமைச்சர் அவரைவிட கடுமையாக வேலை செய்கிறார். நாங்களும் கஷ்டப்படுகிறோம். ஆனால், வளர்ச்சித் திட்டம் நகரவேமாட்டேன் என்கிறது என்று சொன்னால், எங்கே தவறு இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டியது நம்முடைய கடமை. அதனை முதலமைச்சர் மிக்க கவ்னத்தோடு பார்க்க வேண்டுமென்று கேட்டுக்



கொள்கிறேன். முதலமைச்சருக்கு இந்தச் செய்திகள் கிடைத்துத்தான் வளர்ச்சிப் பணி கண்காணிப்புக் குழு என்று Cell for monitoring development programmes என்று ஒன்றை தம்முடைய அலுவலகத்திலே துவக்கியிருக்கிறார்கள். பாராட்ட வேண்டிய அம்சம். ஆனாலும்கூட, அதிலே என்னுடைய கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அந்தக் கண்காணிப்புக்கூட அதிகாரிகளால்தான் செய்யப்படுகிறது. எப்படிப் பார்த்தாலும் அந்தத் தகவல் உங்களுக்கு அதிகாரிகள் மூலமாகத்தான் வருகிறதேயொழிய, பிற வழிகளின் மூலமாக வரவில்லை. பிற வழிகளின் மூலமாக அந்தத் தகவல் வருவதற்கான வாய்ப்பை நீங்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனென்றால் நான் ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருந்திருக்கிறேன். பூமி மட்டத்திலேதான் வேலை நடைபெற்றிருக்கும். அதிகாரிகள் வந்து சொல்வார்கள். லிண்டல் மட்டத்திற்கு வேலை நடந்து விட்டது என்று கையெழுத்து போட்டுத் தாருங்கள் என்று கேட்பார்கள். முதலிலே நான் மறுத்திருக்கிறேன். அதன் பிறகு அவர்கள் சொல்வார்கள். அந்த அளவிற்கு நான் கையெழுத்துப் போட்டு தரவில்லையென்றால் அடுத்த ஆண்டு நமக்கு நிதி கிடைக்காது. எனவே, அப்படி நீங்கள் கையெழுத்துப் போட்டு கொடுத்தால்தான் அடுத்த ஆண்டு நமக்கு வீடுகள் கிடைக்கும். எனவே நீங்கள் செய்ய பள்ளிக் கூடங்கள் கிடைக்கும். எனவே நீங்கள் செய்ய வேண்டுமென்று சொல்வார்கள். அதே புள்ளிவிவரங்கள் இப்போதும் அரசாங்கத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடம்தான். அதற்குள் பேசி முடியுங்கள்.

**திரு. ச. அழகிரி:** எனவே, அந்த வகையிலே வளர்ச்சித் திட்டத்தைப் பார்வையிடுவதற்கு அந்தந்த ஊராட்சி ஒன்றியத் தலைவர்களே நேரடியாக முதலமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதலாம். என்னுடைய ஊராட்சியிலே இவ்வளவு வேலைகள்தான் நடைபெற்று இருக்கின்றன என்று மாதம் ஒரு கடிதம் அவர் எழுதி முதலமைச்சருக்கு அனுப்பினால், முதலமைச்சருடைய தனிப் பிரிவு அதைக் கம்ப்யூட்டரில் பதிவு செய்து வைக்கலாம். உங்களுக்கு 99 சதவீதம் சரியான தகவல் கிடைப்பதற்கு அது வழியாக இருக்கும். அதிகார வர்க்கத்தினுடைய பிடியிலிருந்து விடுபடலாம் என்று ஒரு ஆலோசனையை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல, ஊராட்சித் தேர்தல்களையெல்லாம் நாம் நடத்தினோம். ஆனால், அந்த ஊராட்சி ஒன்றியத் தலைவர்களெல்லாம் செயல்பட முடியவில்லை. ஏராளமான உதாரணங்கள் இருக்கின்றன. ஒன்றே ஒன்றை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். கிராம்டன் பல்ப் 8 ரூபாய் விலை. அந்த ஊராட்சி ஒன்றிய ஆணையர் 6 ரூபாய்க்கு வாங்க வேண்டும், 6 ரூபாய்க்கு வாங்கினால்தான் கையெழுத்து போடுவேன் என்று சொல்கிறார்.

*பிற்பகல் 1-40*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஆணைகள் யாருக்கும் தெரியாமல் பிறப்பிக்கப்படவில்லை. மாநில அளவில் ஏற்கெனவே ஒரு கமிட்டி அமைத்து, சென்ற அரசாங்கம் ஒரு நடவடிக்கை மேற்கொண்டிருந்தது. இந்த அரசாங்கம் 1989-ஆம் ஆண்டு பொறுப்பேற்றபோது, அதைக் கலைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அந்தக் குழுவை அமைத்து, அவருடன் பரிசீலித்து வாங்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. அதற்குப் பிறகு தற்போது என்னென்ன பல்புகள் தரமற்றவை என்பதை நாங்கள் கண்டறிவதற்கு ஒரு சந்தர்ப்பம் எங்களுக்குக் கிடைத்தது. ஏற்கெனவே தனியார் வாங்கி அனுப்பியபோது, அதிகாரிகள் வாங்கிப்போட்ட பல்புகள் அத்தனையும் கேஷ் புக்கில் வரவு-செலவு எழுதப்பட்டிருந்ததே தவிர, ஒரு இடத்திலேயும் அது எரிந்ததாகத் தகவல் இல்லை. இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தந்த தகவல்களின் அடிப்படையில் அதைப் பார்த்த பிறகு, அவர்கள் வாங்கிய பொருட்கள் தரமின்றி இருந்த காரணத்தினால்தான் இது நடந்திருக்கிறது என்பதை உணர்ந்து ஐந்து, ஆறு கம்பெனிகள்--ஒன்று, இரண்டு என்றால்கூட மானோபலி வந்துவிடும் என்று கருதி, ஐந்து, ஆறு கம்பெனிகளிடம், மொத்த விலை என்ன என்பதை வாங்கி, அந்த விலைக்கு அதிகப்படாமல், அந்தப் பொருட்களை எந்த விலையில் வாங்க வேண்டும் என்ற நிர்ணயத்தோடு, அவற்றை வாங்கலாம்; ஆனால் எங்கு வாங்கப்படுகிறது என்பது அல்ல; எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை அங்கங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையை மீறி வாங்கியது இப்போதுகூட கண்டுபிடிக்கப்பட்டு, அந்தப் பகுதியில் மறுபடியும்



விளக்கு அமைந்திருப்பதை எங்களால் பார்க்க முடிகிறது. ஆகையினாலே இதைவிடச் சிறந்த யோசனையை மன்றத்தில் தெரிவித்தால், பதில் சொல்லலாம். ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் எழுத வேண்டும் என்பதல்ல, சிலர் வாய்மூலமாகச் சொன்ன தகவல்களின் மூலமாகக்கூட நான் நடவடிக்கை எடுத்து அவைகளுக்கு எல்லாம் பரிகாரம் காணப்பட்டிருக்கின்றது. இந்த வேலை விவரங்களைப் பற்றி குறிப்பிட்டார்கள். என்னுடைய மானியக் கோரிக்கை வருகிறபோது இதை முடித்துவிட்டு அடுத்ததைச் சொல்கிறேன் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபிகேஷன். சட்டக் கல்லூரி துவக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உண்மையில் நிதிநிலை அறிக்கையில் அப்படி குறிப்பிப்படவில்லை.

"Orders would be issued shortly for the selection of a site for locating the new Law College at Tirunelveli".

**திரு. ச. அழகிரி:** அதேபோல், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கரும்பு விலையை அதிகப்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். 8.5% சர்க்கரை சத்துள்ள கரும்புக்கு 459 ரூபாய் தரவேண்டும் என்பது மத்திய அரசாங்கததினுடைய உத்தரவாக இருக்கிறது. ஆனால் நம்முடைய மாநில அரசாங்கம் 140 ரூபாய் அதிகமாகக் கொடுத்து 599 ரூபாய் ஒரு டன்னுக்கு கரும்பு விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இது வரவேற்க வேண்டிய அம்சம். ஆனால் விவசாயிகளைப் பொறுத்தவரையில் இந்த அதிகபட்சமான விலை என்பது அவர்களுக்குக் கட்டுப்படியாகக்கூடியதாக இல்லை. நாம் அதற்குச் சில உதாரணங்களைப் பார்க்கலாம். 1994-95-ஆம் ஆண்டு 214 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு உற்பத்தியானது நம்முடைய மாநிலத்திலே. ஆனால், 1995-96-லே 192 இலட்சம் மெட்ரிக் டன்தான் உற்பத்தி ஆயிற்று. 1996-97-லே 135 இலட்சம் மெட்ரிக் டன்னாக அது குறைந்திருக்கிறது. ஆக, ஒவ்வொரு ஆண்டும் விவசாயத் துறையைப் பார்க்கிறபோது, அரிசி உற்பத்தியும் குறைந்துகொண்டு வருகிறது. கரும்பு உற்பத்தியும் குறைந்து கொண்டே வருகிறது.

214 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கும், 135 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கும் உள்ள வித்தியாசம் புரிகிறது. இதற்கு என்ன காரணம் என்றால் கட்டுப்படியாகக்கூடிய விலை விவசாயிகளுக்குக் கிடைக்காத காரணத்தால், விறகாகப் பயன்படுத்தக்கூடிய வேலிக் கருவைகூட டன் 700 ரூபாய்க்கு விற்கிறார்கள். ஆனால் கரும்பு 595 ரூபாய்தான் என்று சொல்கிறபோது விவசாயிகளுக்கு அதிலே அக்கறை இல்லை, ஆர்வம் இல்லை. எனவே அந்த வகையிலே நாம் அதற்கு ஒரு மாற்று ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். உதாரணமாக நாம் பார்த்ததில் சில மாநிலங்கள் இந்த விஷயத்திலே வெற்றிகரமாக இருந்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிடம். இத்துடன் முடித்துவிடுகிறேன். லெவி சர்க்கரை விலை இந்த ஆண்டு 111 ரூபாய் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் நாம் டன்னுக்கு 599 ரூபாய் கரும்புக்கு விலை நிர்ணயிக்கிறபோது இந்த 111 ரூபாய் லெவி சர்க்கரைக்கு அதிகப்படுத்தப்பட்ட அந்த விலை விஷயம் நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா? அதையும் நாம் கவனத்திலே வைத்து இந்த விலை உயர்வை அதிகரித்தோமா? அல்லது அதனைக் கவனத்திலே கொள்ளாமல் அறிவித்திருந்தால்கூட மேற்கொண்டு கூட 20 ரூபாய் அதிகமாகக் கொடுக்கலாம். அதற்கான வாய்ப்பு இருக்கிறது. இந்த லெவி சர்க்கரையினுடைய விலை அதிகரிப்பு என்பது ஆலை அதிபர்கள் தங்களுடைய உற்பத்திச் செலவை எந்த அளவுக்குக் காட்டுகிறார்களோ அந்த அளவுக்கு அரசாங்கம்— லெவி சர்க்கரையினுடைய விலையை மத்திய அரசாங்கம் உயர்த்திக் கொடுக்கிறது.

பிற்பகல் 1-45

உதாரணமாக, பஞ்சாப் மாநிலத்திலே உற்பத்திச் செலவை அவர்கள் அதிகப்படுத்திக் காட்டி, அதன் மூலமாக லெவி சர்க்கரையினுடைய விலையை உயர்த்தி 213 ரூபாய் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். இந்த 213 ரூபாய் அவர்களுக்கு எப்படிக் கிடைக்கிறது என்றால், வெட்டுக் கூலி, ஆலைகளுக்குக் கரும்பை எடுத்துச் செல்கின்ற கூலி, இவைகளையெல்லாம் உற்பத்திச் செலவிலே அவர்கள் சேர்த்துவிடுகிறார்கள். எனவே, உற்பத்திச் செலவில் அவர்கள் சேர்த்ததன் காரணமாக 213 ரூபாய் லெவி சர்க்கரையினுடைய விலை அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. அதன் காரணமாக அவர்கள் கரும்புக்கு அதிக விலை கொடுக்கிறார்கள்.



ஆனால் தமிழகத்திலே நமக்கு 111 ரூபாய்தான் அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. ஆலை உரிமையாளர்கள் உற்பத்திச் செலவில் இவைகளையெல்லாம் சேர்க்காத காரணத்தால் இந்த நிலை. கரும்பு வெட்டுகிற கூலியையும் இங்கே விவசாயி கொடுக்கிறான். ஆனால் பஞ்சாப் மாநிலத்திலே ஆலை அதிபர்கள் கொடுக்கிறார்கள். இங்கே 20 கி.மீ. தூரத்திற்குக் கொண்டு செல்கின்ற செலவை விவசாயி கொடுக்கிறான். ஆனால் அங்கே முழுமையான செலவையும், அந்த வாகனத்திலே ஏற்றிக்கொண்டு ஆலைக்குச் செல்கின்ற வரை ஆகின்ற முழுச் செலவையும் ஆலை அதிபர்கள் கொடுக்கிறார்கள். எனவே அந்தச் செலவையெல்லாம் உற்பத்திச் செலவிலே காட்டி, அதனால் அந்த ஆலை அதிபர்களுககு ஏற்படக்கூடிய இழப்புக்கு லெவி சர்க்கரையினுடைய விலை அதிகரிக்கப்படுகிறது. அதேபோன்றுதான் கர்நாடகாவிலே, கேரளாவிலே, கோவாவிலேயும் கொடுக்கப்படுகிறது. லெவி சர்க்கரையினுடைய விலை பஞ்சாப்பிலே ஏற்றப்பட்டிருக்கிறபோது, தமிழ்நாட்டில் ஏற்றப்பட்டால் நமக்குப் பிரச்சினை இல்லை. ஏனென்றால், விலை எல்லா இடங்களிலும் ஒன்றுதான். அங்கே சர்க்கரை விலை என்னவோ, அதே சர்க்கரை விலைதான் இங்கேயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அழகிரி, நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள். ஒரு நிமிஷம், ஒரு நிமிஷம் என்று சொல்லி பத்து நிமிடம் ஆகிவிட்டது.

**திரு. ச. அழகிரி:** எனவே அந்த வகையிலே முதல்வர் அவர்கள் கொஞ்சம் கவனம் செலுத்தினால், இங்கு கரும்பு விவசாயிகளுக்கு மேலும் 20 ரூபாய், 30 ரூபாய் அதிகமாகக் கிடைப்பதற்கு வழி கிடைக்கும். இதற்கு முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து காவல்துறை, நாளைக்கு வெடிக்க இருக்கிற குண்டைப் பற்றி நேற்றே கண்டுபிடித்திருக்கிறார்கள். மிகவும் பாராட்டக்கூடிய ஒரு அம்சம். ஒரு 20 அடுக்கு மாடிக் கட்டிடத்தைக்கூட தகர்க்கக் கூடிய குண்டுகளையெல்லாம் கண்டுபிடிக்கிற அளவிற்குத் திறன் படைத்திருக்கிறது நம்முடைய காவல் துறை. ஆனால் இந்தக் கள்ளச் சாராயத்தை மட்டும் கண்டுபிடிக்க முடியாமல் சிரமப்படுவதைப் பார்க்கிறபோது காவல் துறைக்கு இரண்டு முகங்கள் இருக்கின்றதோ என்று அச்சப்பட வேண்டியுள்ளது. ஒரு சில

காவல் நிலையங்களில் வாரம் ஒன்றுக்கு மாமூல் ஒரு லட்சத்து 70 ஆயிரம் வரை வாங்கக்கூடிய காவல் நிலையங்கள் இருக்கின்றன. அந்தக் குறிப்பு என்னிடம் இருக்கிறது. நான் அதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தருவதற்குத் தயாராக வைத்திருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல நேரங்களில் பேசுகின்றபோது சொல்கிறார்கள். "இந்தியா முழுவதும் மதுவிலக்கு இருந்தால்தான் அதை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியும்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு அவர் சில உதாரணங்களைக்கூடச் சொல்லியிருக்கிறார். "குஜராத்தில் காந்தியடிகள் பிறந்த வீட்டுக்குப் பக்கத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள். பல இடங்களில் அதைப்போல இருக்கிறது" என்றெல்லாம் அவர் சொல்லியிருக்கிறார். இது உண்மைதான். மாற்றுக் கருத்து அல்ல. மதுவை ஒதுக்கிய தனி மனிதர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் மதுவை ஒதுக்கிய சமுதாயங்கள் இல்லை என்பதனை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்கிறோம். புத்தர் பிறந்த காலத்திலேயே சாராயம் இருந்திருக்கிறது. சோமபானம், சுராபானம் என்றெல்லாம் இருந்து இருக்கிறது. ஆனால் ஒரு மாறுபாடு அன்றைக்கு இருந்தது. அன்றைக்கு அவர்களெல்லாம் பயந்து விற்பார்கள். அன்றைக்குச் சாராயம் விற்க வேண்டுமானால், அவர் ஊருக்குக் கடைசியில் விற்க வேண்டும். பயந்து விற்க வேண்டும். சமுதாயத்தில் பெரிய மனிதர்களைப் பார்த்தால் ஒதுங்கி நிற்க வேண்டும். இப்படித்தான் அன்றைக்கு அந்தத் தொழில் இருந்தது. ஆனால் இன்றைக்கு எப்படி இருக்கிறது என்றால், காவல் துறை அதிகாரிகள் வந்து எந்தெந்த ஊரிலே சாராயம் விற்கவில்லை, என்று பார்த்து உடனடியாக அங்கே சாராயம் விற்பதற்கான ஆளைத் தேடிப் பிடித்து நியமிக்கிறார்கள். அதற்குத் தகுதியான ஆள் அந்தக் கிராமத்தில் இல்லையென்றால், வேறு எந்த கிராமத்தில் இருக்கிறாரோ அங்கிருந்து அழைத்து வந்து அங்கே சாராயத்தை விற்பதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். எனவே, என்னுடைய கோரிக்கை என்னவென்றால், நாம் 100% சாராயத்தை ஒழிக்காவிட்டாலும்கூட, விற்பவர்கள் பயந்து விற்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கவேண்டும். அவர்களுக்கு ஒரு அச்சம் இருக்கவேண்டும்.

இரயில் நிலையங்களில் நாம் பார்க்கலாம். சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், சென்னைக்கு வந்தால், கட்சிக்காரர்கள் வந்து அவர்களை வழியனுப்பி



வைப்பார்கள். ஆனால் சில நேரங்களில் பார்க்கிறபோது, காவல் துறை அதிகாரிகள் இரயிலில் பயணம் செய்தால், கள்ளச் சாராயம் விற்பவர்களெல்லாம் வரிசையாக வந்து அவர்களை வழியனுப்பி வைப்பார்கள். அதைப்போன்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே அரசாங்கம் ஒரு கடுமையான இரும்புக் கரம் கொண்டு அதை அடக்க வேண்டும். ஏதோ ஒரு வகையிலே அவர்களுக்கு நாம் ஒரு தைரியத்தைக் கொடுத்திருக்கிறோம். சாராயம் காய்ச்சி விற்றால் எதுவும் செய்துவிடமாட்டார்கள்; அரசாங்கத்திலே சொல்வார்களே ஒழிய, தண்டனை கிடையாது, அரசியல்வாதி பாதுகாப்பு இருக்கிறது என்றெல்லாம் கருதுகிற சூழ்நிலைகள் இருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) எனவே, அதற்கான முழு முயற்சிகளையும் முதலமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும். ஏனென்றால் இதனால் சட்டம் ஒழுங்கு கெடுகிறது. (குறுக்கீடு) அதெல்லாம் ஒழியாது. (குறுக்கீடு) எனவே, சட்டம் ஒழுங்கு கெடுகிறது. (குறுக்கீடு)

பிற்பகல் 1-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அவரையே பேசி முடித்து உட்காரச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் வேறு இடையில் எழுந்திருக்கிறீர்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நடைமுறையில் நல்ல சாராயம் கொடுத்தால் கள்ளச் சாராயம் ஒழிந்து விடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அழகிரி, நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ச. அழகிரி:** ஆகவே, அந்த வகையிலே முதலமைச்சர் அவர்கள் மிகக் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் சமுதாயத்தினுடைய ஒழுங்கும், கட்டுப்பாடும் மிகவும் முக்கியம். நல்ல சமுதாயத்தினைத் தோற்றுவிக்க வேண்டுமென்றால் நல்ல சமூக அமைப்பு இருக்க வேண்டும். முதலமைச்சர் அவர்கள் கடுமையாக இருப்பார்களேயானால், நிச்சயமாக நான் சொல்வேன்--90 சதவீத கள்ளச் சாராயம் ஒழியும். 10 சதவீதம் இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும். அதைப் பற்றி நமக்கு பிரச்சினை இல்லை. அவர்களை நம்மால் தடுக்க முடியாது.

ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையைக் கொடுத்த தமிழக முதல்வர் அவர்களுக்கு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுறுகின்றன. பேரவை மீண்டும் நாளை *(13-3-1997)* காலை *9-30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் *1-51* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*107.* *1995-96*-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் முப்பத்தொன்றாவது ஆண்டறிக்கை [*1956*-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் *(மத்தியச் சட்டம் 1/1956) 619*-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] *(தமிழ், ஆங்கிலம்)*

*108.* *1995-96*-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் இருபத்தைந்தாவது ஆண்டறிக்கை. [*1956*-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் *(மத்தியச் சட்டம் 1/1956) 619*-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] *(தமிழ், ஆங்கிலம்)*

*109.* *1995-96*-ஆம் ஆண்டிற்கான அரசு ரப்பர் கழகத்தின் பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை. [*1956*-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் *(மத்தியச் சட்டம் 1/1956) 619*-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] *(தமிழ், ஆங்கிலம்)*

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

ஏதுமில்லை

தமிழ்நாடு
26645

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.